வடக்கின் முதல் நாளிதழ் – Estd 1959

Reg. No. : P . 1632

விலை ரூ. 30/=

ஈழநாடு
Eelanadu
வார மலர்

Email : news@eelanadu.lk | மலர் : 04 | 22.10.2023 ஞாயிற்றுக்கிழமை | இதழ் : 316 | பக்கங்கள் : 20

மாருதி Money Exchange (Pvt) Ltd.
இல.390, ஆஸ்பத்திரி வீதி, யாழ்ப்பாணம்.
T.P: 021 221 4433
076 284 4443
இல.285, காலி வீதி, வெள்ளவத்தை, கொழும்பு 06
T.P: 011 236 2086
இவ் அனைத்து சேவைகளையும் இங்கு பெற்றுக் கொள்ளலாம்.
MoneyGram மணிகிராம் பணப்பரிமாற்றம்
Ria MONEY TRANSFER றியா பணப்பரிமாற்றம்
WESTERN UNION MONEY TRANSFER வெஸ்ரேண் யூனியன் பணப்பரிவர்த்தனை




08 கட்சித்தாவல் கலாசாரம் குறித்து மூள வைத்திருக்கும் விவாதம்!



09 சம்பந்தனை பதவி விலக கோருவதும் தமிழரசின் தலைமையை இலக்கு வைப்பதும்!



10 மேய்ச்சல் தரை ஆக்கிரமிப்பின் பின்னணியில் இரகசியத் திட்டம்!



11 வரவு செலவுத் திட்டம்: முற்கூட்டிய தேர்தலுக்கு வழிவகுக்குமா?

# பட்ஜெட்டுக்கு முன் மீண்டும் அமைச்சரவையில் மாற்றம்!

## பொதுஜன பெரமுனவை திருப்திப்படுத்த ரணில் வியூகம்

கொழும்பு, ஒக்ரோபர் 29

**ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்கவுக்கும் பொதுஜன பெரமுனவுக்கும் இடையில் மோதல் வலுத்துள்ள நிலையில் வரவு - செலவுத் திட்டத்துக்கு முன்பாக அமைச்சரவையில் மீண்டும் திருத்தம் மேற்கொள்ளப்படும் என்று எதிர்பார்க்கப்படுகின்றது.**

வரவு-செலவுத் திட்டத்தை வெற்றி கொள்வதற்கு பொதுஜன பெரமுன கட்சியின் அனைத்து பாராளுமன்ற உறுப்பினர்களின் ஆதரவைப் பெற்றுக்கொள்ளும் நோக்கில் அமைச்சரவையில் திருத்தம் மேற்கொள்ளப்படவுள்ளது என்று தெரிவிக்கப்பட்டுள்ளது.

இந்தநிலையில், சில புதிய முகங்கள் அமைச்சரவையில் இணைத்துக் கொள்ளப்படும் என்றும் எதிர்பார்க்கப்படுகின்றது. இதனிடையே, அமைச்சுப் பதவிகளை மாற்றுவதற்கான யோசனைகள் ஏற்கனவே அரசிடம் சமர்ப்பிக்கப்பட்டுள்ளன என்றும் தெரியவருகின்றது.

இதன்படி, பொதுஜன பெரமுனவின் பல உறுப்பினர்களுக்கு அமைச்சுப் பதவிகள் வழங்கப்படவுள்ளன என்றும் தெரிவிக்கப்படுகின்றது.

பொதுஜன பெரமுனவின் சிரேஷ்ட உறுப்பினர்கள் பத்து பேருக்கு அமைச்சுப் பதவிகளை வழங்குமாறு ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்கவிடம் பல்வேறு சந்தர்ப்பங்களின்போது கோரிக்கை முன்வைக்கப்பட்டுள்ளது. இருப்பினும் இந்தக் கோரிக்கைக்கு ஜனாதிபதியிடமிருந்து உரிய பதில் கிடைக்கவில்லை என்று பொதுஜன பெரமுனவினர் தெரிவித்துள்ளனர்.

மேலும் பொதுஜன

15

## வலி.வடக்கில் அண்மையில் விடுவித்த காணிகள் தொடர்பில் சிக்கல் நிலை!

யாழ்ப்பாணம், ஒக். 29

காங்கேசன்துறை மாங்கொல்லைப் பகுதியில் அண்மையில் இராணுவக் கட்டுப்பாட்டில் இருந்து விடுவிக்கப்பட்ட தனியார் காணி பெற்றோலியக் கூட்டுத்தாபனத்துக்குச் சொந்தமான காணி என அதிகாரிகள் உரிமை கோரியமையால் காணி உரிமையாளர்கள் மத்தியில் குழப்பநிலை ஏற்பட்டது.

"கடந்த 33 வருட காலத்துக்கு மேலாக இராணுவக் கட்டுப்பாட்டில் இருந்த மாங்கொல்லை பகுதியில் இருந்து இராணுவத்தினர் வெளியேறியதை அடுத்து, அப்பகுதி மக்கள் தமது காணிகளை

15

## கட்சியின் நிகழ்ச்சி நிரலை மீறி நடந்தால் நடவடிக்கை

### பெரமுன உறுப்பினர்களுக்கு பஸில் ராஜபக்ஷ எச்சரிக்கை

கொழும்பு, ஒக். 29

ஸ்ரீலங்கா பொதுஜன பெரமுன கட்சியின் நிகழ்ச்சி நிரலுக்கு எதிராக செயற்படும் பாராளுமன்ற உறுப்பினர்கள் தொடர்பில் கடுமையான தீர்மானம் எடுக்க அக்கட்சி தீர்மானித்துள்ளது.

இவர்கள் தொடர்பில் கடுமையான தீர்மானம் எடுக்கப்பட வேண்டுமெனவும், தற்போது சுயேச்சையாகச் செயற்படும் பொதுஜன பெரமுனவின் பாராளுமன்ற உறுப்பினர்களுக்கு அமைச்சுப்

15

## நிச்சயமாக நாட்டின் ஜனாதிபதி ஆவேன்!

### ஜனக ரத்நாயக்க சபதம்



கொழும்பு, ஒக். 29

நாட்டில் நிலவும் அனைத்துப் பிரச்னைகளுக்கும் நிரந்தர தீர்வுகளை வழங்க தயாராக உள்ளேன். அதற்காக ஜனாதிபதி பதவியை எதிர்பார்த்துள்ளேன் என பொது பயன்பாடுகள் ஆணைக்குழுவின் முன்னாள் தலைவர் ஜனக ரத் நாயக்க தெரிவித்தார்.

தொலைக்காட்சியொன்றுக்கு வழங்கியுள்ள

15

## அமைச்சரவை மறுசீரமைப்பால் ரணில்-பஸில் இடையே மோதல்!

கொழும்பு, ஒக். 29

ஜனாதிபதி ரணில் விக்ரமசிங்கவினால் மேற்கொள்ளப்பட்ட அமைச்சரவை மறுசீரமைப்பு குறித்து பொதுஜன பெரமுனவின் அமைப்பாளர் பஸில் ராஜபக்ஷ அதிருப்தி அடைந்துள்ளதாக அக்கட்சியின் வட்டாரங்களில் அறிய முடிகிறது.

பொதுஜன பெரமுன வழங்கியுள்ள பெயர் பட்டியலின் பிரகாரம் அமைச்சுப் பதவிகளை ஜனாதிபதி வழங்கவில்லை என பஸில் ராஜபக்ஷ, ஜனாதிபதியிடம் தமது கவலையை வெளிப்படுத்தியுள்ளதுடன், சுதந்திரக் கட்சிக்கு அதிக

15

## புதிய பாதையில் தயாசிறி!

கொழும்பு, ஒக். 29

புதிய அரசியல் பயணத்தை ஆரம்பிக்க தயார் என பாராளுமன்ற உறுப்பினர் தயாசிறி ஜயசேகர தெரிவித்துள்ளார்.

கொழும்பில் நேற்று இடம்பெற்ற நிகழ்வொன்றின் பின்னர் ஊடகவியலாளர்கள் எழுப்பிய கேள்விகளுக்கு பதிலளிக்கையில் அவர் இவ்வாறு தெரிவித்துள்ளார்.

அத்துடன், நாட்டிற்கு புதிய அரசியல் இயக்கமொன்றின் தேவை எழுந்துள்ளதாக பாராளுமன்ற உறுப்பினர் குறிப்பிட்டார்.

15

## முள்ளிவாய்க்கால் நினைவுத்தூபியை அமைக்கவேண்டிய அவசியம் என்ன?

### யாழ். பல்கலைக்கழக நிர்வாகத்திடம் விளக்கம் கோரியது இலஞ்ச ஆணைக்குழு

கொழும்பு, ஒக். 29

யாழ் பல்கலைக்கழகத்தில் அமைக்கப்பட்டுள்ள முள்ளிவாய்க்கால் நினைவுத் தூபியை நிர்மாணிக்க வேண்டிய அவசியம் குறித்து விளக்கமளிக்குமாறு இலஞ்சம் மற்றும் ஊழல்கள் பற்றிய சாற்றுதல்களைப் புலனாய்வு செய்வதற்கான ஆணைக்குழு யாழ். பல்கலைக்கழக நிர்வாகத்திடம்

15



### உயிர்த்த ஞாயிறு தாக்குதல் சம்பவம்:

## ஐ.நா.மனித உரிமைகள் பேரவையின் தலையீட்டை கோருகின்றார் மல்கம்!

கொழும்பு, ஒக். 29

2019 ஆம் ஆண்டு உயிர்த்த ஞாயிறு தினத்தன்று நடத்தப்பட்ட குண்டுத்தாக்குதல் தொடர்பில் வெளிப்படையான விசாரணைகளை மேற்கொள்வதற்கான முயற்சிகளுக்கு ஆதரவளிக்குமாறு கத்தோலிக்க திருச்சபை ஐக்கிய நாடுகளின் மனித உரிமைகள் பேரவையிடம் வேண்டுகோள் விடுத்துள்ளது.

இந்த விடயம் தொடர்பில் கொழும்பு பேராயர் கர்தினால் மல்கம் ரஞ்சித் ஆண்டகை மற்றும் ஐக்கிய நாடுகள் மனித உரிமைகளுக்கான பிரதி ஆணையாளர் நடா அல் நஷிவ் ஆகியோருக்கிடையில் சந்திப்பொன்றும் இடம்பெற்றுள்ளது.

ஜெனிவாவில் நடைபெற்ற இந்த சந்திப்பில் கர்தினால் நடா அல் நஷிவ் நஷிவ்விடம் முறைப்பாடு செய்துள்ளதாக தெரிவிக்கப்படுகிறது.

இந்தநிலையில், உயிர்த்த ஞாயிறு தினத்தன்று மேற்கொள்ளப்பட்ட

15

## இப்படியும் நடக்கிறது

தமிழ் அரசியலில் மூன்று வகையான கோரிக்கைகள் முன்வைக்கப்படுகின்றன.

புலம்பெயர் தேசத்தில் ஒரு பகுதியினர், இலங்கையில் நடந்து முடிந்தது இனப்படுகொலைதான் என்பதை நிறுவுவதன் மூலம் தமிழர் மத்தியில் வாக்கெடுப்பை நடத்தி தனி அரசு ஒன்றை அமைக்க வேண்டும் என்கின்றனர்.

தமிழ் அரசியல் கட்சிகளோ, (நான் சொல்வது தமிழ் தேசியக் கட்சிகள் என்று சொல்கின்ற கட்சிகளை) பிரிக்கப்படாத நாட்டுக்குள் சமஷ்டி தான் தீர்வு என்கின்றன. ஒற்றையாட்சியின் கீழ் வரும் தீர்வு நிரந்தர தீர்வாகாது என்பது அவர்களின் வாதம்.

இன்னுமொரு பகுதியினர், கடந்த ஆறு தசாப்த போராட்டத்தின் பயனாக - இந்திய அரசின் அழுத்தம் காரணமாக கொண்டு வரப்பட்ட மாகாண சபைகளை பலப்படுத்தி, அதனை தக்க வைத்துக்கொண்டு மேல்நோக்கி செல்லவேண்டும் என்கின்றனர்.

தமிழரசுக் கட்சியோ, மாகாண சபைகளை எமது தீர்வின் ஆரம்பப் புள்ளியாகவும் கொள்ள முடியாது, தீர்வு முயற்சி என்றால் அது சமஷ்டியை நோக்கியதாகத்தான் இருக்க வேண்டும் என்கின்ற அதேவேளை, ரெலோ, புளொட், தமிழ் மக்கள் கூட்டணி போன்ற கட்சிகளோ, சமஷ்டிதான் நிரந்தர தீர்வைத் தரும் என்றாலும் அது சாத்தியமாகும்வரை மாகாண சபைகளை இழந்துவிடக்கூடாது என்கின்றன.

தமிழ் தேசியக் கட்சிகள் என்கின்றபோது, அது என்ன வரையறைக்குள் வருகின்றன என்பது மற்றுமொரு கேள்விக்குரியது. தேசியக் கட்சிகள் என்றால் அவை நாடு பூராகவும் அரசியல் செய்கின்ற கட்சிகளாக இருக்கவேண்டும் என்பதுதான் அடிப்படையாக பார்க்கப்படுகின்றது. தமிழ் தேசியக் கட்சிகள் என்றால் தமிழர் தாயகமான வடக்கு- கிழக்கில் அரசியல் செய்கின்ற கட்சிகளைத்தான் தமிழ் தேசியக் கட்சிகள் என்று வரைவிலக்கணம் கொள்ளலாம். அப்படி வடக்கு-கிழக்கு முழுமையாகவும் உறுப்பினர்களைக் கொண்ட தமிழ் கட்சிகள் எவை எவை என்பது பற்றிய ஆய்வுக்கு நாம் செல்லவேண்டியதில்லை. அது பற்றி பிறிதொரு நாளில் பார்ப்போம்.

மாகாண சபைத் தேர்தல்களை நடத்துமாறும் பதின்மூன்றை அமுல்படுத்த அழுத்தம் கொடுக்குமாறும் இந்தியப் பிரதமரைக் கோரி கடிதம் எழுத, ரொலோ முன்முயற்சி செய்தபோது, தமிழரசு பிடிவாதமாக பதின்மூன்றை வலியு றுத்த மறுத்ததும், கடைசியாக இலங்கை - இந்திய ஒப்பந்தத்தை வலியுறுத்தி சம்பந்தன் கடிதம் எழுதியதும் ஞாபகமிருக்கலாம். அதாவது பதின்மூன்றை வலியுறுத்து வதை தமிழரசு பிடிவாதமாக மறுத்தது.

பதின்மூன்றை ஏற்றுக்கொள்வதெனில் எப்போதோ ஏற்றுக்கொண்டிருக்கலாம். அதனை தொடக்கப் புள்ளியாகவும் கொள்ள முடியாது என்று தமிழரசு பிடிவாதமாக நின்றது. அதிலும் நமது சிவஞானம் சிறிதரன் எம்.பி. அதில் உறுதியாக இருந்தார்.

இன்று தமிழரசு கட்சியின் தலைமைப் பதவிக்கான போட்டியில் முக்கிய இடத்தில் இருப்பவர் அவர். ஒரு தலைவர் என்றால், எப்படி இருக்கவேண்டும் என்பதில் நமக்குள் ஒரு விம்பம் இருக்கின்றது. அவர் கொண்ட கொள்கையில் உறுதியாக இருக்கவேண்டும். கட்சியில் உள்ள மற்றயவர்களை அனுசரித்து செல்லவேண்டும். மக்கள் மத்தியில் செல்வாக்கு உள்ளவராக இருக்கவேண்டும். அவர் சொல்வதை மக்கள் கேட்கவேண்டும். அவர் சொன்னால், அல்லது செய்தால் சரியாகத்தான் சொல்வார் - செய்வார் என்ற நம்பிக்கை மக்களுக்கு இருக்கவேண்டும்.

இன்றுள்ள தமிழ் தலைவர்களில் மக்கள் மத்தியில் செல்வாக்குள்ள ஒருவராக இதுவரை தன்னை வெளிக்காட்டியவர்களில் சிறிதரன் முக்கியமானவர்தான். கடந்த தேர்தலில் தமிழரசின் சுமந்திரன் தனது வெற்றிக்காக அவரின் ஆதரவை நாடியதும் அதனால்தான்.

ஆனால், அந்த மக்கள் ஆதரவை தக்க வைப்பதற்காக, ஒவ்வொரு சந்தர்ப்பத்திலும் வெவ்வேறு வகையில் பேசுவது ஒரு ஆளுமையுள்ள தலைவருக்கான அடையாளமாக இருக்கமுடியாது. புலம்பெயர்ந்தவர்களின் சில அமைப்புக்களின் விருப்பத்திற்காக ஒரு தடவை அவர் அமெரிக்கா சென்றிருந்தபோது தெரிவித்த கருத்துக்கள் ஈழநாடுவிலும் செய்தியாக வெளிவந்திருந்தன.

தமிழர் மத்தியில் வாக்கெடுப்பை நடத்தி தமிழ் ஈழம் அமைப்பதற்கான ஆதரவை அமெரிக்கா வழங்க வேண்டும் என்று அவர் அப்போது கோரிக்கை விடுத்திருந்தார்.

பின்னர், பதின்மூன்றுக்கு ஆதரவாக - அதனை அமுல்படுத்த இலங்கைக்கு அழுத்தம்கொடுக்குமாறு இந்தியப் பிரதமரைக் கோருகின்ற கடிதத்தில் தமிழரசு கையெழுத்திடக்கூடாது என்று கருத்துச் சொன்னார். சமஷ்டிதான் தீர்வு என்றார்.

இப்படி தமிழரசின் கொள்கையில் விடாப்பிடியாக நின்ற அவர், கடைசியாக நடந்த யாழ்ப்பாண மாவட்ட அபிவிருத்திக் குழுக் கூட்டத்தில் தெரிவித்த கருத்துக்கள் பலரையும் ஆச்சரியத்தில் ஆழ்த்தியிருக்கும்.

அவர் அங்கு தெரிவித்த செய்திகள் நேற்று முன்தினம் ஈழநாடுவில் தலைப்புச் செய்தியாகியிருந்தது.

'யாழ். மாவட்டத்தில் பொலிஸாரின் செயல்பாடுகள் மந்தகதியில் இடம்பெறுவதை அவதானிக்க முடிகின்றது என பாராளுமன்ற உறுப்பினர் சிவஞானம் சிறிதரன் தெரிவித்தார்.

இந்த விடயம் தொடர்பில் நடவடிக்கை எடுக்கப்படவேண்டும். அல்லாதுவிட்டால் பொலிஸ் அதிகாரத்தை மாகாணத்திடம் தாருங்கள் எனவும் அவர் கோரினார்.'

இதுவே அவர் மாவட்ட அபிவிருத்திக்குழுவில் விடுத்த கோரிக்கை. மாகாண சபைகளிடம் பொலிஸ் அதிகாரம் இருந்தால், அதன்மூலம் மாகாணத்தில் சில விடயங்களைச் செய்யலாம் என்று அவர் நம்புகிறார் என்றால், எதற்காக அந்த மாகாண சபைகளை நமது பிரச்னைகளின் தீர்வாக ஆரம்பப் புள்ளியாகவும் கொள்ளமுடியாது என்றார் என்பது புரியவில்லை.

பொலிஸ் அதிகாரம் மாகாண சபைகளிடம் இருந்தால், நமது மாகாணங்களில் அந்த அதிகாரத்தின் ஊடாக மக்களுக்கு சில நன்மைகளைச் செய்ய முடியும் என்றால், அதனை பெறுவதற்கு முயற்சிப்பதை விடுத்து-

'பொலிஸார் செயற்படவேண்டும் இல்லையெனில் பொலிஸ் அதிகாரத்தை தரவேண்டும்' என்று மாவட்ட அபிவிருத்திக் குழுக் கூட்டத்தில் கேட்பது ஒரு தலைமைத்து பண்புக்கு உகந்தது அல்ல.

**- ஊர்க்குருவி.**

## யாழ்.பல்கலைக்கழகத்தில் திருமந்திர ஆன்மீக மாநாடு!







யாழ்ப்பாணம், ஒக். 29

அகில இலங்கை சைவ மகா சபையுடன் யாழ் பல்கலைக்கழக சைவ சித்தாந்தத் துறை இணைந்து நடத்தும் திருமந்திர ஆன்மீக மாநாடு நேற்று ஆரம்பமானது.

இந்த மாநாடு யாழ். பல்கலைக்கழக கைலாசபதி கலையரங்கில் சைவ சித்தாந்த துறைத்தலைவர் கலாநிதி பொன்னத்துரை சந்திரசேகரம் தலைமையில் நடைபெற்றது.

பரமேஸ்வரன் ஆலயத்தில் இடம்பெற்ற விசேட பூசை வழிபாடுகளைத் தொடர்ந்து திருமூலரின் உருவப்படம் தாங்கி வரப்பட்டு நிகழ்வு நடைபெறும் கைலாசபதி அரங்கிற்கு கொண்டு வரப்பட்டது.

ஒன்றே குலமாய் திருமந்திரம் காட்டும் அன்பே சிவத்திற்கு உயிர்கொடுப்போம் எனும் தொனிப்பொருளில் இந்த மாநாடு இடம்பெற்று வருகிறது. (அ)

## இலங்கையில் முதலீடுகள் மேற்கொள்ள ஜேர்மனிக்கு சஜித் பிரேமதாஸ அழைப்பு



கொழும்பு, ஒக். 29

எதிர்க்கட்சித் தலைவர் சஜித் பிரேமதாஸ இலங்கைக்கான ஜேர்மன் கைதொழில் மற்றும் வர்த்தகத் துறையின் பிரதம பிரதிநிதி மேரி அன்டோனியா வொன் ஷொன்பெர்னுடன் சந்திப்பொன்றை மேற்கொண்டார்.

இருதரப்பு வர்த்தகத்தை ஊக்குவிப்பதன் மூலம் அந்நிய நேரடி முதலீட்டு நடவடிக்கைகளில் சிறப்பு கவனம் செலுத்தி, ஜேர்மன் வர்த்தக நிறுவனங்கள் இலங்கையில் முதலீட்டு நடவடிக்கைகளை மேற்கொள்வதற்கு சாதகமான சூழலை உருவாக்குவது தொடர்பில் கவனம் செலுத்தப்பட்டது.

மேலும், இரு நாடுகளுக்கும் பரஸ்பர நன்மைகளைத் தரும் ஒத்துழைப்புக்கான வாய்ப்புகளைஆராய்வதோடு, பொருளாதார வளர்ச்சி மற்றும் செழுமையை வளப்படுத்த வேண்டும் என்ற கோரிக்கையும் எதிர்க்கட்சித் தலைவரால் முன்வைக்கப்பட்டது.

இந்த சந்திப்பில் இலங்கைக்கான ஜேர்மன் கைத்தொழில் மற்றும் வர்த்தக பிரதிநிதிகளின் கூட்டாண்மை விவகாரங்கள் மற்றும் ஏற்றுமதி ஊக்குவிப்பு பிரதானி மலிந்த கஜநாயக்க மற்றும் தொடர்பாடல் முகாமையாளர் கேஷலா டயஸ் ஆகியோரும் கலந்துகொண்டனர்.(அ)

## சிறுவனுக்கு பியர் பருக்கியவர் கைது!

யாழ்ப்பாணம், ஒக். 29

சுன்னாகம் பொலிஸ் பிரிவிற்குட்பட்ட தாவடிப் பகுதியில், 10 வயதுச் சிறுவனுக்கு பியர் பருக்கிய ஒருவர் சுன்னாகம் பொலிஸாரால் கைது செய்யப்பட்டார்.

குறித்த சந்தேகநபர் நேற்று முன்தினம் முச்சக்கர வண்டியினுள் வைத்து குறித்த சிறுவனுக்கு பியர் பருக்கியுள்ளார். இது குறித்து சிறுவனின் தாயார் சுன்னாகம் பொலிஸ் நிலையத்தில் முறைப்பாடு பதிவு செய்துள்ளார்.

குறித்த சந்தேகநபர் நேற்று முன் தினம் இரவு சுன்னாகம் பொலிஸாரால் கைது செய்யப்பட்டார்.

கைது செய்யப்பட்ட சந்தேகநபர் நீதிமன்றத்தில் முற்படுத்தப்படவுள்ளார்.

## சுற்றுலாத்துறை வருமானம் அதிகரிப்பு

கொழும்பு, ஒக். 29

இந்த வருடத்தின் மூன்றாவது காலாண்டில் சுற்றுலாத்துறை வருமானம் 1.45 பில்லியன் டொலரைத் தாண்டியுள்ளது என இலங்கை மத்திய வங்கி சுட்டிக்காட்டியுள்ளது.

வருடத்தில் இதுவரையான காலப்பகுதியில் 1.1 மில்லியனுக்கும் அதிகமான சுற்றுலாப் பயணிகள் வருகை தந்துள்ளனர்.

2019 ஆம் ஆண்டுக்கு பின்னர் அதிகளவான சுற்றுலாப் பயணிகள், இவ்வாண்டே நாட்டிற்கு வருகை தருகின்றனர் என சுற்றுலா அபிவிருத்தி அதிகாரசபை தெரிவித்துள்ளது. (அ)

## கைதான டனிஸ் அலி வைத்தியசாலையில்

கொழும்பு, ஒக். 29

அறகலய மக்கள் போராட்டத்தின் செயற்பாட்டாளர் டனிஸ் அலி நேற்றுமுன்தினம் கோட்டை பொலிஸாரால் கைது செய்யப்பட்டார்.

கொழும்பு கோட்டை ரயில் நிலையத்தின் பயணச்சீட்டு காரியாலயம் அருகில் கலவரத்தில் ஈடு பட்டமைக்காக அவர் பொலிஸாரால் கைதுசெய்யப்பட்டார்.

கைதுசெய்யப்பட்ட போராட்ட செயற்பாட்டாளர் டனிஸ் அலி, கொழும்பு தேசிய வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டுள்ளார்.

பொலிஸாரின் பாதுகாப்பின் கீழ் அவர் வைத்தியசாலையில் சிகிச்சை பெற்று வருவதாக தெரிவிக்கப்படுகின்றது. (அ)

# இரண்டு தேர்தல்களை ஒத்திப்போடமுடியாது!

## டியூ குணசேகர கூறுகின்றார்



**கொழும்பு, ஒக். 29**
**ஜனாதிபதி மற்றும் பொதுத்தேர்தல்களை ஒத்திவைப்பதற்கு ஏற்பாடுகள் இடம்பெறுகின்றன என தகவல்கள் வெளியாகும் நிலையில், இவ்விரு தேர்தல்களையும் ஒத்திவைக்க முடியாது - என்று இலங்கை கம்யூனிஸ் கட்சி தலைவரான டியூ குணசேகர தெரிவித்தார்.**

இது தொடர்பில் அவர் மேலும் கூறியவை வருமாறு:

பொதுத்தேர்தலை முன்கூட்டியே நடத்துவதற்கு அரசமைப்பில் இடமுள்ளது. ஆனால் அதனை ஒத்திவைப்பதற்கு இடமில்லை. அதேபோல ஜனாதிபதி தேர்தலை ஒத்திவைப்பதற்கும் அரசமைப்பில் இடம் இல்லை. ஆளுந்தரப்பு உயர் நீதிமன்றத்தை நாடினால்கூட அதற்கான வாய்ப்பு வழங்கப்படமாட்டாது என்றே நம்புகின்றேன்.

உள்ளூராட்சி மற்றும் மாகாணசபைத் தேர்தல்கள் அரசமைப்புக்கு அப்பால் சென்று, சிற்சில சட்ட ஏற்பாடுகளை பயன்படுத்தி ஒத்திவைக்கப்பட்டன. இதற்கு நிறைவேற்று அதிகார ஜனாதிபதிக்கு அதிகாரம் உள்ளது. ஆனால் பொதுத்தேர்தல் மற்றும் ஜனாதிபதி தேர்தலை பிற்போட நிறைவேற்று அதிகாரத்துக்கு அதிகாரம் இல்லை - என்றார். (அ)

# வெளிநாட்டு யுவதியின் பணப்பை திருடிய இருவர் இரண்டு சிறுவர்களின் சாமர்த்தியத்தால் சிக்கினர்

கொழும்பு, ஒக். 29

சிகிரியாவை பார்க்கச் சென்று மீண்டும் தான் தங்கியிருந்த விடுதிக்கு திரும்பிக் கொண்டிருந்த வெளிநாட்டு யுவதி ஒருவரின் பணப்பையை திருடிய சந்தேக நபர்கள் இருவரை பொலிஸார் கைது செய்துள்ளனர்.

*12 மற்றும் 13 வயதுடைய இரண்டு சிறுவர்களின் சாமர்த்தியமான செயற்பாட்டால் குறித்த சந்தேக நபர்களை குறுகிய காலப்பகுதிக்குள் விரைவாக கைது செய்ய முடிந்ததாக பொலிஸார் தெரிவித்துள்ளனர்.*

நேற்று முன் தினம் சிகிரியாவுக்குச் சென்று மீண்டும் விடுதிக்கு திரும்பிக்கொண்டிருந்த 22 வயதான துருக்கிய வெளிநாட்டுப் பெண் ஒருவரை மோட்டார் சைக்கிளில் வந்த இருவர் தாக்கிவிட்டு அவரது பணப்பையை பறித்துக் கொண்டு தப்பிச் சென்றுள்ளனர்.

அதிவேகமாக பயணித்த குறித்த மோட்டார் சைக்கிள்களை வீதியின் அருகில் விளையாடிக் கொண்டிருந்த பாடசாலை மாணவர்கள் இருவர் பார்த்துள்ளனர். மோட்டார் சைக்கிள் தொடர்பில் சந்தேகம் அடைந்த சிறுவர்கள் இருவரும் மோட்டார் சைக்கிளின் இலக்கத்தை நினைவில் கொண்டு பெற்றோரிடம் தெரிவித்துள்ளனர்.

பின்னர் சிறிது நேரத்திற்கு முன் இரண்டு சந்தேக நபர்கள் வெளிநாட்டு யுவதியின் பணப்பையை கொள்ளையடித்துவிட்டு அந்த வழியாக மோட்டார் சைக்கிளில் தப்பிச் சென்றது தெரியவந்துள்ளது.

அதன்படி இது தொடர்பில் பொலிஸாருக்கு அறிவிக்கப்பட்டதையடுத்து சந்தேகநபர்கள் பணத்துடன் கைது செய்யப்பட்டுள்ளனர்.

பொலிஸார் சந்தேக நபர்களை 45 நிமிடங்களுக்குள் கைது செய்து சுற்றுலா பயணியிடம் இருந்து திருடப்பட்ட 225 அமெரிக்க டொலர்கள் மற்றும் 20,000 இலங்கை ரூபாவையும் மீட்டுள்ளதுடன் அவர்கள் இருவரும் தம்புள்ளை நீதவான் நீதிமன்றில் ஆஜர்படுத்தப்பட்டனர்.

சிறுவர்களின் சாமர்த்தியமான செயற்பாட்டால் சந்தேக நபர்கள் இலகுவாகவும் விரைவாகவும் கைது செய்யப்பட்டுள்ளதாக பொலிஸார் தெரிவித்தனர்.

கொள்ளைச் சம்பவத்தில் காயமடைந்த துருக்கி சுற்றுலாப்பயணி சிகிரியா பிரதேச வைத்தியசாலையின் அவசர சிகிச்சைப் பிரிவில் அனுமதிக்கப்பட்டார். (அ)

# திருமலைத் துறைமுகத்தை வந்தடைந்த ஜப்பான் கப்பல்

கொழும்பு, ஒக். 29



ஜப்பான் கடல்சார் தற்காப் புப் படையின் அகேபோனோ கப்பல் உத்தியோகபூர்வ விஜயத்தை மேற்கொண்டு நேற்று சனிக்கிழமை திருகோணமலை துறைமுகத்தை வந்தடைந்தது.

திருகோணமலை துறைமுகத்தில் நங்கூரமிடப்பட்டுள்ள இந்தக் கப்பல், 150.5 மீற்றர் நீளமுடையதாகும்.

இக்கப்பலின் கட்டளை அதிகாரி கப்டன் ஹிசாடோ சோடோகாவா மற்றும் கிழக்கு கடற்படை கட்டளைத் தளபதி ரியர் அட்மிரல் சுரேஷ் டி சில்வா ஆகியோர் கிழக்கு கடற்படை கட்டளைத் தலைமையகத்தில் உத்தியோகபூர்வ சந்திப்பொன்றை நடத்தினர்.

இந்த கப்பல் நாட்டில் தங்கியிருக்கும்போது, இரு நாட்டு கடற்படைகளுக்கு இடையேயான நட்புறவை மேம்படுத்தும் வகையில் இலங்கை கடற்படையால் ஏற்பாடு செய்யப்படும் நிகழ்ச்சிகளில் பங்கேற்க திட்டமிடப்பட்டுள்ளது.

எதிர்வரும் செவ்வாய்க்கிழமை கப்பல் நாட்டிலிருந்து புறப்படவுள்ளமை குறிப்பிடத்தக்கது. (அ)

# வறட்சி, வெள்ளப்பெருக்கு காரணமாக பாதிப்புற்ற விவசாயிகளுக்கு இழப்பீடு!

கொழும்பு, ஒக். 29

வறட்சி மற்றும் வெள்ளப்பெருக்கு காரணமாக பாதிக்கப்பட்ட விவசாயிகளுக்கு ஒரு ஹெக்ரேயருக்கு ஒரு இலட்சம் ரூபாய் வீதம் இழப்பீடு வழங்கப்படும் என விவசாய மற்றும் பெருந்தோட்ட அமைச்சர் மஹிந்த அமரவீர தெரிவித்தார்.

கன்னொருவையில் நேற்று இடம்பெற்ற செய்தியாளர் சந்திப்பில் கலந்துக்கொண்டு கருத்து வெளியிட்ட போதே அவர் இந்த விடயத்தை குறிப்பிட்டார்.

அத்துடன், பாதிப்பு ஏற்படும் காலப்பகுதிகளில், பயிர்ச் செய்கையை முன்னெடுத்த விவசாயிகளுக்கு மாத்திரமே எதிர்காலத்தில் இழப்பீடு வழங்கப்படும் என அவர் குறிப்பிட்டார். (அ)

# ஜப்பானில் வேலை பெற்றுத் தருவதாகக் கூறி 16 மில்லியன் ரூபா பண மோசடி இருவர் கைது

கொழும்பு, ஒக். 29

ஜப்பான் நாட்டில் வேலை வாய்ப்பு பெற்றுத் தருவதாக கூறி 16 மில்லியன் ரூபாவுக்கும் அதிக பணத்தை மோசடி செய்த சந்தேகநபர்கள் இருவர் கைது செய்யப்பட்டுள்ளனர்.

ஜப்பான் நாட்டில் வேலை வாய்ப்பு பெற்றுத்தருவதாக கூறி 16.3 மில்லியனுக்கும் அதிக பெறுமதியான பணத்தை மோசடி செய்துள்ளதாக குளியாப்பிட்டிய விசேட குற்றப் புலனாய்வுப் பிரிவினருக்கு 7 முறைப்பாடுகள் கிடைக்கப் பெற்றிருந்தன.

அதனடிப்படையில் விசாரணைகளை ஆரம்பித்த குளியாப்பிட்டிய விசேட குற்றப் புலனாய்வுப் பிரிவினர் மோசடியுடன் தொடர்புடைய சந்தேகநபர்களை நேற்று முன் தினம் வெள்ளிக்கிழமை கைது செய்தனர்.

*35 மற்றும் 57 வயதுடைய இவர்கள் இம்புல்கொட மற்றும் ஹல்மில்லவெவ பிரதேசத்தைச் சேர்ந்தவர்கள் என பொலிஸார் தெரிவித்தனர்.*

சம்பவம் தொடர்பான மேலதிக விசாரணைகளை குளியாப்பிட்டிய விசேட குற்றப் புலனாய்வுப் பிரிவினர் மேற்கொண்டு வருகின்றனர். (அ)

# 1,500 குடும்ப நல சுகாதார சேவை அலுவலர்கள் உடனடி நியமனம்!

கொழும்பு, ஒக். 29

நேர்காணலுக்கு உட்படுத்தப்பட்ட 1,500 குடும்ப நல சுகாதார சேவை உத்தியோகத்தர்களுக்கான நியமனத்தை துரிதப்படுத்த தீர்மானிக்கப்பட்டுள்ளதாக நிதி இராஜாங்க அமைச்சர் ரஞ்சித் சியம்பலாபிட்டிய தெரிவித்தார்.

அதன்படி, அடுத்த சில நாட்களில் நியமனம் தொடர்பில் குறிப்பிட்ட தீர்மானம் எடுக்கப்படும் என முகாமைத்துவ சேவைகள் திணைக்களத்துக்கு தெரிவிக்கப்பட்டுள்ளது.

அரச குடும்ப சுகாதார சேவை உத்தியோகத்தர் சங்க அதிகாரிகளுடன் நிதியமைச்சில் இடம்பெற்ற கலந்துரையாடலின் போதே அமைச்சர் மேற்கண்டவாறு தெரிவித்தார்.

# சிறுவன் துஷ்பிரயோகம் இரண்டு பிக்குகள் கைது

கொழும்பு, ஒக். 29

மத்துகம பிரதேசத்தில் 13 வயது சிறுவனை பாலியல் துஷ்பிரயோகம் செய்த குற்றச்சாட்டின் பேரில் இரண்டு பிக்குகள் கைதுசெய்யப்பட்டுள்ளதாக பொலிஸார் தெரிவித்தனர்.

கைதான பிக்குகள் மத்துகம நவுத்துடுவ யட்டதொல பிரதேசத்தைச் சேர்ந்தவர்கள் ஆவர்.

இந்த இருவர் மீதும் கிடைக்கப்பட்ட முறைப்பாட்டின் பேரில் சிறுவர் மற்றும் மகளிர் பணியகத்தின் பெண் தலைமை பொலிஸ் பரிசோதகர் ஹேமமாலி சந்தேக நபர்களை கைது செய்துள்ளார்.

பாதிக்கப்பட்ட சிறுவன் மருத்துவ பரிசோதனைக்காக வைத்தியசாலைக்கு கொண்டு செல்லப்பட்டார்.

இந்நிலையில், பிக்குகள் இருவரும் மத்துகம நீதவான் நீதிமன்றத்தில் ஆஜர்படுத்தப்படவுள்ளனர்.

இந்த சம்பவம் தொடர்பான விசாரணைகளை சிறுவர் மற்றும் மகளிர் பணியகத்துடன் இணைந்து மத்துகம பொலிஸார் மேற்கொண்டுள்ளனர்.

# 19 ஆயிரம் மெற்றிக் தொன் குரக்கன் விதை கையிருப்பில்

கொழும்பு, ஒக். 29

விவசாய திணைக்களத்திடம் தற்போது, 19 ஆயிரம் மெற்றிக் தொன் குரக்கன் விதைகள் இருப்பதாக அறிவிக்கப்பட்டுள்ளது.

அந்த திணைக்களம் விடுத்துள்ள அறிக்கையில் இந்த விடயம் தெரிவிக்கப்பட்டுள்ளது.

எதிர்வரும் போகத்திற்கு பயிரிடுவதற்கு தேவையான அளவை காட்டிலும் அதிகளவில் இருப்பதாக விவசாய திணைக்களம் குறிப்பிட்டுள்ளது.

அதேநேரம், மாத்தளை மாவட்டத்தில் உள்ள விவசாயிகளிடம் மேலும் 7 ஆயிரத்து 500 மெற்றிக் தொன் குரக்கன் விதைகள் கையிருப்பில் உள்ளதாக விவசாய திணைக்களம் தெரிவித்துள்ளது. (அ)

# இஸ்ரேலில் விசா அனுமதியை புதுப்பிக்க 1,680 விண்ணப்பங்கள்!

கொழும்பு, ஒக். 29

விசா அனுமதி பத்திரத்தை புதுப்பிப்பதற்காக இஸ்ரேலில் உள்ள இலங்கை தூதரக அலுவலகத்திற்கு ஆயிரத்து 680 விண்ணப்பங்கள் கிடைக்கப் பெற்றுள்ளதாக அந்த நாட்டுக்கான இலங்கை தூதுவர் நிமல் பண்டார தெரிவித்தார்.

அத்துடன் சட்டவிரோத விசா அனுமதிப் பத்திரத்தின் ஊடாக இஸ்ரேலுக்குள் நுழைந்த இரண்டாயிரத்துக்கும் அதிகமான இலங்கையர்கள் உள்ளதாகவும் தூதுவர் நிமல் பண்டார குறிப்பிட்டார்.

அதேநேரம் ஹமாஸ் தரப்பினரால் பணயக் கைதிகளாக அழைத்து செல்லப்பட்டுள்ளவர்களில் இலங்கையர்கள் அடங்குவதற்கான வாய்ப்புகள் குறைவாக உள்ளதாகவும் அவர் கூறினார்.

எவ்வாறாயினும் பணயக் கைதிகளாக தடுத்து வைக்கப்பட்டுள்ளவர்களின் பெயர்ப் பட்டியல் எதுவும் வெளியாக வில்லை எனவும் இலங்கை தூதுவர் நிமல் பண்டார தெரிவித்தார். (அ)

# நட்டில் 30 ஆபத்தான மேம்பாலங்கள் 400 பாதுகாப்பற்ற ரயில் கடவைகள்!

## புனரமைக்க நிதி பற்றாக்குறை என்கிறார் பந்துல

கொழும்பு, ஒக். 29

நாட்டில் 30 ஆபத்தான மேம்பாலங்களும், 400 பாதுகாப்பற்ற ரயில் கடவைகளும் காணப்படுகின்றன. மேம்பாலங்களை நிர்மாணிப்பதாயின் 350 மில்லியன் ரூபா தேவைப்படுகிறது. இருப்பினும் 200 கோடி ரூபாயே நிதி ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளதாக போக்குவரத்து அமைச்சர் கலாநிதி பந்துல குணவர்தன தெரிவித்தார்.

மேலும் இவற்றை புனரமைக்க போதுமான நிதி இல்லை எனவும் நிதியை ஈட்டுவதற்கான பிரதான மூலம் வரியை அதிகரிப்பதாகும் எனவும் அவர் மேலும் குறிப்பிட்டார்.

பம்பலப்பிட்டி ரயில் நிலையத்துக்கு செல்லும் மேம்பாலம் சேதமடைந்துள்ளதால் அதனை புனர்நிர்மாணம் செய்தவதற்காக ஜனாதிபதி 50 மில்லியன் ரூபா நிதி ஒதுக்கியிருந்ததுடன் அதன் நிர்மாணப்பணிகள் முன்னெடுக்கப்பட்டிருந்தன.

இந்நிலையில் ரயில் நிலைய மேம்பாலத்திற்கான தற்காலிக படிக்கட்டுகள் திறந்து வைக்கப்பட்டிருந்தன. இதன்போது கலந்து கொண்டு கருத்து தெரிவிக்கும் போதே அவர் மேற்கண்டவாறு தெரிவித்தார்.

அவர் மேலும் தெரிவிக்கையில்-

எமது நாட்டில் இவ்வாறான 30 ஆபத்தான மேம்பாலங்கள் காணப்படுகின்றன. அவற்றை நிர்மாணிப்பதாயின் 350 மில்லியன் ரூபா தேவைப்படுகின்றது. ஆபத்தான பாலங்களை நிர்மாணிப்பதற்காக 200 கோடி ரூபாவுக்கும் மேல் நிதி ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது.

மேலும் அடுத்த வருடத்துக்காக வரவு-செலவுத்திட்டத்தில் ஆபத்தான நிலையில் உள்ள பாலங்களையேனும் நிர்மானிப்பதற்கு அதிக நிதி ஒதுக்கீடு செய்ய வேண்டும். அரச ஊழியர்களுக்கான சம்பளம், ஓய்வூதிய கொடுப் பனவு, நிவாரணங்களை வழங்கும் போது முழு தொகையும் நிறைவடைந்து விடும்.

எஞ்சிய நிதி யாருடைய அரசாங்கமாக இருந்தாலும் வெளிநாட்டுக்கே செல்லும். கடந்த அரசாங்கங்கள் அபிவிருத்தி வேலைத்திட்டங்களுக்காக அதிக வெளிநாட்டு கடன்களை பெற்றுக்கொண்டுள்ளது. தற்போது வெளிநாட்டு கடன்கள் கிடைப்பதில்லை. கடன் மறுசீரமைப்பு இடம் பெறும் வரையில் எதனையும் செய்ய முடியாது.

ஆபத்தான பாலங்கள் பல காணப்படுகின்றன. குறிப்பாக யாழ்ப்பாணம் சங்குப்பிட்டி பாலம் ஆபத்தானது. பொருளாதார நெருக்கடிகளுக்கு மத்தியில் இதனை நாம் முன்னெடுத்து செல்லவேண்டி ஏற்பட்டுள்ளது. நாட்டின் உண்மைகளை ஊடகங்களே வெளிப்படுத்தவேண்டும்.

ஆபத்தான பாதுகாப்பற்ற ரயில் கடவைகள் நாட்டில் 400 காணப்படுகின்றது. அவற்றுள் ஒன்றை திருத்துவதற்கு 40 முதல் 60 இலட்சம் ரூபா தேவைப்படும். பாதுகாப்பற்ற ரயில் கடவைகள் மூலம் பல உயிர்ச்சேதங்கள் இடம்பெறுகின்றன - என்றார். (அ)

# "நாமல் தோல்வி அடைவார்"

கொழும்பு, ஒக். 29

நிமல் லான்சாவின் சவாலை ஏற்று அவருடன் விவாதத்துக்கு சென்றால் பாராளுமன்ற உறுப்பினர் நாமல் ராஜபக்ச நிச்சயம் தோல்வி அடைவார் என்று நாமலின் சகாவும், இராஜாங்க அமைச்சருமான சனத் நிஷாந்த தெரிவித்தார். அதற்கான காரணத்தையும் அவர் விவரித்துள்ளார்.

ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்கவை விமர்சிப்பதை விடுத்து, முதுகெலும்பிருந்தால் பட்ஜெட்டை எதிர்த்து எதிரணியில் அமருமாறு நாமல் உள்ளிட்ட மொட்டு அணியினருக்கு நிமல் லான்சா சவால் விடுத்திருந்தார். அத்துடன், நாமலை பகிரங்க விவாதத்துக்கும் அழைத்திருந்தார்.

இந்நிலையில் இது தொடர்பில் கருத்து வெளியிட்ட சனத் நிஷாந்த,

"நிமல் லான்சாவின் சவாலை ஏற்று நாமல் விவாதத்துக்கு செல்வார் என நான் நம்பவில்லை. அவ்வாறு சென்றால் நாமல் ராஜபக்ஷ தோல்வி அடைவது உறுதி. நிமல் லான்சா என்பவர் ஹெரோயின், கஞ்சா, குடு பற்றியே பேசுவார். அவை பற்றிதான் அவருக்கு நன்கு தெரியும். ஆனால் நாமல் ராஜபக்ஷவுக்கு விளையாட்டு, தொழில்நுட்பம் உள்ளிட்ட விடயங்கள் பற்றியே தெரியும். அவருக்கு போதைப்பொருட்கள் பற்றி தெரியாது. ஆகவே தான் விவாதத்துக்கு சென்றால் தோல்வி அடைவார் எனக் கூறுகின்றேன் - என்றார். (அ)

# ரணிலுக்கு ஆதரவளிப்பது குறித்து பெரமுன இன்னும் முடிவு இல்லை!

## கூறுகின்றார் எஸ்.எம். சந்திரசேன

கொழும்பு, ஒக். 29

அடுத்த ஜனாதிபதி தேர்தலில் தற்போதைய ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்கவுக்கு ஆதரவு வழங்குவது தொடர்பில் எமது கட்சி இன்னும் எந்த வொரு முடிவையும் எடுக்க வில்லை. - என்று ஸ்ரீலங்கா பொதுஜன பெரமுன கட்சியின் பாராளுமன்ற உறுப்பினர் எஸ். எம். சந்திரசேன தெரிவித்தார்.

மொட்டு கட்சி தலைமையகத்தில் நடைபெற்ற ஊடக சந்திப்பின்போதே அவர் இவ்வாறு கூறினார்.

இது தொடர்பில் அவர் மேலும் கூறியவை வருமாறு:

அடுத்த ஜனாதிபதி தேர்தல் வேட்பாளர் தொடர்பில் கட்சியில் உள்ள சிலர் தனிப்பட்ட ரீதியில் கருத்துகளை வெளியிட்டுவந்தாலும் கட்சி என்ற வகையில் இது தொடர்பில் இன்னும் எந்தவொரு முடிவையும் எடுக்கவில்லை. உரிய காலத்தில், உரிய வகையில் கட்சி என்ற அடிப்படையில் அதற்கான தீர்மானம் எடுக்கப்படும். தற்போதைய ஜனாதிபதிக்கு ஆதரவு வழங்குவது பற்றியும் எந்தவொரு முடிவையும் எடுக்கவில்லை.

அதேவேளை, ரணில் விக்கிரமசிங்கவை கோட்டாபய ராஜபக்ஷவே பிரதமர் ஆக்கினார். அவரை ஜனாதிபதி ஆக்குவதற்கு எமது கட்சி பாராளுமன்றத்தில் ஆதரவை வெளிப்படுத்தியது. எனவே, எமது கட்சியுடன் பேச்சு நடத்திய தீர்மானங்களை எடுப்பதற்கு ஜனாதிபதி நடவடிக்கை எடுக்கவேண்டும் - என்றார்.

# டெங்கு அபாய வலய எண்ணிக்கை அதிகரிப்பு

கொழும்பு, ஒக். 29

நாடளாவிய ரீதியில் டெங்கு அபாய வலயங்களின் எண்ணிக்கை 24 ஆக அதி கரித்துள்ளது. தேசிய டெங்கு கட்டுப்பாட்டுப் பிரிவு விடுத்துள்ள அறிக்கையொன்றிலேயே இந்த விடயம் தெரிவிக்கப்பட்டுள்ளது.

எதிர்காலத்தில் டெங்கு நோயாளர்கள் அதிகரிப்பதை அவதானிக்க முடியும் என அதன் பணிப்பாளர் வைத்தியர் நளினா ஆரியரத்ன தெரிவித்தார். (அ)

# விளையாட்டுப் பொருள் அங்காடியில் தீ!

கொழும்பு, ஒக். 29

பாணந்துறையில் உள்ள கட்டடத்தில் தீ விபத்தொன்று ஏற்பட்டது.

நேற்று சனிக்கிழமை காலை இரண்டு மாடிக் கட்டடத்தில் தீ விபத்து ஏற்பட்டது.

குறித்த கட்டடம் விளையாட்டுப் பொருட்கள் விற்பனை நிலையமாக இயங்கி வந்துள்ளது.

இதில் விளையாட்டுப் பொருட்கள் எரிந்துள்ளதாக தெரிவிக்கப்படுகின்றது.

மேலும் தீ விபத்துக்கான காரணம் இதுவரை கண்டறியப்படவில்லை எனவும், சம்பவம் தொடர்பான மேலதிக விசாரணைகளை பாணந்துறை பொலிஸார் மேற்கொண்டு வருகின்றமை குறிப்பிடத்தக்கது. (அ)

# பாடசாலைக்குள் நுழைந்து மாணவனை தாக்கிய நீதிமன்ற உத்தியோகத்தர் கைது

மட்டக்களப்பு, ஒக். 29

மட்டக்களப்பு நகரிலுள்ள பிரபல ஆண்கள் பாடசாலை ஒன்றில் நுழைந்த ஒருவர் தனது மகனை தாக்கிய இரு மாணவர்களுக்கு பதிலாக வேறொரு மாணவனை தாக்கியதில், அந்த மாணவன் காயமடைந்து வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டுள்ளார்.

இந்தச் சம்பவம் தொடர்பாக நீதிமன்றில் கடமையாற்றி வரும் உத்தியோகத்தர் ஒருவரை நேற்று சனிக்கிழமை கைது செய்துள்ளதாக மட்டக்களப்பு பொலிஸ் தலைமையக பொலிஸார் தெரிவித்தனர்.

குறித்த பாடசாலையில் தரம் 9 இல் கல்வி கற்று வரும் மாணவன் ஒருவரை சக மாணவர்கள் இருவர் தாக்கியதாக பாதிக்கப்பட்ட மாணவன் தனது பெற்றோரிடம் முறைப்பாடு செய்துள்ளார்.

அதனையடுத்து, நேற்று முன் தினம் வெள்ளிக்கிழமை பாதிக்கப்பட்ட மாணவனின் தந்தையான நீதிமன்ற ஊழியர் பாடசாலைக்குள் நுழைந்து, தனது மகனை தாக்கிய இரு மாணவர்களுக்கு பதிலாக வேறொரு மாணவனை தாக்கியுள்ளார்.

அதில் காயமடைந்த மாணவன் வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டுள்ளமை பொலிஸாரின் ஆரம்பகட்ட விசாரணையில் தெரியவந்துள்ளது.

இந்த தாக்குதல் தொடர்பாக வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டுள்ள மாணவரின் பெற்றோர் பொலிஸ் நிலையத்தில் செய்த முறைப்பாட்டையடுத்து இடம்பெற்ற விசாரணையின் அடிப்படையில் நீதிமன்றில் கடமையாற்றி வரும் தாக்குதல் நடத்திய நபரை சந்தேகத்தின் பேரில் நேற்று கைது செய்தனர்.

இது தொடர்பான மேலதிக விசாரணைகளை மட்டக்களப்பு தலைமையக பொலிஸ் நிலைய பெண்கள் மற்றும் சிறுவர் பிரிவினர் மேற்கொண்டுள்ளனர்.

# தமிழ்க் கூட்டமைப்பு எம்.பிக்கள் சகலரும் பதவி விலகவேண்டும்!

## கோருகிறார் ஆனந்தசங்கரி



கொழும்பு, ஒக். 29

"தமிழர்களின் வாக்குகளைக் கொள்ளையடித்து பாராளுமன்றம் சென்ற தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் அனைத்து பாராளுமன்ற உறுப்பினர்களும் உடனடியாகத் தமது பதவிகளை இராஜிநாமா செய்ய வேண்டும். இதுவே காலத்தின் கட்டாயமும் தேவையுமாகும்."

- இவ்வாறு தமிழர் விடுதலைக் கூட்டணியின் செயலாளர் வீ.ஆனந்தசங்கரி வலியுறுத்தியுள்ளார்.

தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் தலைவர் இரா.சம்பந்தன் பாராளுமன்ற உறுப்பினர் பதவியை இராஜிநாமா செய்ய வேண்டும் என்று சுமந்திரன் எம்.பி. கேட்டுள்ளார் என்று ஊடகங்களில் செய்திகள் வெளியாகியிருந்தன. இதையடுத்து இலங்கைத் தமிழரசுக் கட்சியின் கொழும்புக் கிளையைச் சேர்ந்த சட்டத்தரணி வி.தவராசா, இரா.சம்பந்தனுக்கு எழுதிய கடிதத்தில், "சம்பந்தன் வளர்த்த கடா மார்பில் பாய்ந்து விட்டது" என்று சுமந்திரன் மீது குற்றஞ்சாட்டியிருந்தார்.

இது தொடர்பில் தமிழர் விடுதலைக் கூட்டணியின் செயலாளர் வீ.ஆனந்தசங்கரி ஊடகங்களிடம் கருத்துத் தெரிவிக்கையிலேயே மேற்கண்டவாறு குறிப்பிட்டுள்ளார்.

அவர் மேலும் தெரிவிக்கையில்,

"அமரர்களான தந்தை செல்வா, அமிர்தலிங்கம், சிவசிதம்பரம் ஆகியோரால் தமிழர்களுக்காக உருவாக்கப்பட்ட தமிழர் விடுதலைக் கூட்டணியைச் சிதைத்து 2004 ஆம் ஆண்டு கூட்டணியில் வளர்க்கப்பட்ட சம்பந்தன் வளர்த்த கடாவாக மட்டுமல்ல ஓநாயாகவும் மாறி வரலாற்றுத் துரோகம் செய்தார்.

தமிழர் விடுதலைக் கூட்டணிக்குச் செய்த துரோகம் தற்போது சம்பந்தனுக்குத் திரும்பி விட்டது.

ஆகையால் சம்பந்தன் மட்டுமல்ல 2004ஆம் ஆண்டு துரோகத்தனத்தால் தமிழர்களின் வாக்குகளைக் கொள்ளையடித்து பாராளுமன்றம் சென்ற தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் அனைத்து பாராளுமன்ற உறுப்பினர்களும் உடனடியாகத் தமது பதவிகளை இராஜிநாமா செய்யவேண்டும். இதுவே காலத்தின் கட்டாயமும் தேவையுமாகும்.

அதுமட்டுமல்ல அழிந்துபோன தமிழர்களின் ஜனநாயக மரபைக் கட்டிக்காப்பதற்கும் தமிழ் மக்களின் உண்மையான அபிலாஷைகளை மீண்டும் நம்பிக்கையோடு கட்டியெழுப்புவதற்கும் இவர்கள் அனைவரும் இராஜிநாமா செய்ய வேண்டும் - என்றார். (அ)

ஈழநாடு
Eelanadu
29.10.2023 ஞாயிற்றுக்கிழமை
பிலவ வருடம், ஐப்பசி 12

"ஏசுவார்கள், எரிப்பார்கள், அஞ்சவேண்டாம்
உண்மையை எழுதுங்கள்; உண்மையாய் எழுதுங்கள்"
- யோகர் சுவாமிகள்.

E-mail: eelanaduweekly@gmail.com
தொலைபேசி : 021 205 2300

## இலங்கையின் நகைச்சுவைக் கொள்கை!

ஐக்கிய நாடுகள் பொதுச் சபையில், இஸ்ரேல் - ஹமாஸ் யுத்தம் தொடர்பில் முன்மொழியப்பட்ட பிரேரணைக்கு இலங்கை அரசாங்கம் ஆதரவு தெரிவித்துள்ளது. தற்போது இடம்பெற்று வரும் யுத்தத்தின் போது, காசா பகுதியில் மனிதநேய நெருக்கடியை தடுக்க வேண்டுமென்னும் அடிப்படையில் - ஜோர்டான் நாட்டினால் முன்மொழியப்பட்ட பிரேரணைக்கு, 40 நாடுகள் இணை யனுசரணை வழங்கியுள்ளன. 193 உறுப்பு நாடுகளைக் கொண்டுள்ள ஐக்கிய நாடுகள் பொதுச் சபையில், 120 நாடுகள் இந்தப் பிரேரணைக்கு ஆதரவளித்துள்ளன.

இந்தியா, கனடா, பிரிட்டன், அவுஸ்திரேலியா ஆகிய நாடுகள் வாக்கெடுப்பில் கலந்துகொள்ளவில்லை. இந்தப் பிரேரணையில், ஹமாஸ் அமைப்பின் வன்முறைகள் குறிப்பிடப்படவில்லை என்னுமடிப்படையில் அமெரிக்கா அதன் ஆட்சேபனையை வெளியிட்டுள்ளது. இதனை, தீயசக்திக்கு விலக்களிக்கப்பட்டுள்ளதாக அமெரிக்கா குறிப்பிட்டிருக்கின்றது.

இந்தப் பிரேரணையையே இலங்கை ஆதரித்திருக்கின்றது. மனிதநேயத்தின் மீதான இலங்கை அரசாங்கத்தின் கரிசனை நகைப்புக்குரியது. இலங்கையில் சொந்த மக்களுக்கு ஏற்பட்ட அநீதிகளுக்கு, நீதி வழங்குவதை இன்றுவரையில் நிராகரித்து வரும் இலங்கையின் ஆட்சியாளர்கள் காஸா மக்களுக்காக கவலைப்படுவது வேடிக்கையானது. இலங்கையில் கொள்கை நிலைப்பாடு எந்தளவிற்கு நகைப்புக்கிடமானது என்பதற்கு இது சிறந்த உதாரணமாகும்.

ஐக்கிய நாடுகள் மனித உரிமைகள் பேரவையில், இலங்கையின் பொறுப்புக் கூறல் தொடர்பில் பல பிரேரணைகள் முன்வைக்கப்பட்டிருக்கின்றன. இந்தப் பிரேரணைகளின் பரிந்துரைகளை நிறைவேற்றுவதில் இதுவரையில் கொழும்பு முன்னேற்றத்தை காண்பிக்கவில்லை. தொடர்ந்தும் சாக்குப் போக்குகளை கூறுவதிலேயே காலத்தை விரயம் செய்துவருகின்றது. இந்த நிலையில் இஸ்ரேலிடம் எவ்வாறு இலங்கை காஸாவின் மீதான பரிவை கோரமுடியும்?

இஸ்ரேல் - ஹமாஸ் யுத்தத்தை தொடர்ந்து, ஐக்கிய நாடுகள் சபை - எவ்வாறு தொழில்படுகின்றது என்பது தெட்டத் தெளிவாக வெளிச்சத்திற்கு வந்திருக்கின்றது. அதேபோன்று இஸ்லாமிய நாடுகள் எவ்வாறு செயற்படுகின்றன, மேற்குலக நாடுகள் எவ்வாறு தொழில்படுகின்றன என்பது தெட்டத் தெளிவாகியுள்ளது. நாடுகளின் நலன்களுக்கு முன்னால் மனித நேயமென்று ஒன்றுமில்லை என்பதுதான் உண்மை. குவாட்டமாலா, ருவாண்டா, இலங்கை என பலநாடுகளில் இடம்பெற்ற மனிதப் பேரவலத்தின் போதும் இந்த விடயங்கள் தெட்டத் தெளிவாக தெரிந்தன - இப்போது மேலும் தெளிவாகத் தெரிகின்றது.

இலங்கையின் முஸ்லிம் அரசியல்வாதிகள் அனைவருமே பலஸ்தீன மக்களுக்காக ஓலமிடுகின்றனர் ஆனால் இதே முஸ்லிம்கள் முள்ளிவாய்க்காலின் போது, புன்னகைத்துக் கொண்டிருந்தனர். அதே முஸ்லிம்கள் இப்போது, காஸா நெருக்கடிக்கு கண்டனம் வெளியிடுகின்றனர். இஸ்லாமிய சகோதரத்துவ கருத்தியல்தான் இதற்கு பின்னாலிருக்கின்றதே தவிர, மற்றும்படி மனிதாபிமான நோக்கமென்று எதுவுமில்லை. மனிதாபிமானமென்று ஒன்றிருந்திருந்தால், அது தமிழ் மக்கள் பாதிக்கப்படும்போதும் வெளிப்பட்டிருக்க வேண்டுமல்லவா!

# நல்லிணக்கத்தை சிதைக்கும் கருத்துக்களை வெளியிடுவோர் மீது நடவடிக்கை வேண்டும்

## அமைச்சர் டக்ளஸ் தேவானந்தா வலியுறுத்து

யாழ்ப்பாணம், ஒக். 29

தேசிய நல்லிணக்கத்தினை சிதைக்கும் வகையிலான கருத்துக்களை வெளியிடுவோருக்கு எதிராக நடவடிக்கை எடுக்க வேண்டும் என கடற்றொழில் அமைச்சர் டக்லஸ் தேவானந்தா தெரிவித்தார்.

மட்டக்களப்பு மாவட்ட விகாராதிபதி அம்பேபிட்டிய சுமன தேரரின் அண்மைக்காலச் செயற்பாடுகள் தொடர்பாக கருத்து தெரிவிக்கும் போதே அமைச்சர் இதனைக் கூறினார்.

கடந்த காலத்தில் யுத்தம் ஆரம்பமாவதற்கும் தற்போது ஏற்பட்டுள்ள இன ரீதியிலான பிரச்னைக்கும் இவ்வாறான பிரதிநிதிகளே காரணம் என்றும் அவர் சுட்டிக்காட்டினார்.

அவர் மேலும் தெரிவிக்கையில்-

அதேபோன்று உலகுக்கு



சமாதானத்தை போதிக்க வேண்டியவர்களின் இவ்வாறான தரங்கெட்ட செயற்பாடுகள் தொடர்பில் மரியாதைக்குரிய பௌத்த பீடங்கள் அக்கறை செலுத்தவேண்டும்.

இந்த நாட்டில் சட்டம் என்பது அனைவருக்கும் பொதுவானதாகவே இருக்க வேண்டும். காவி உடை கவசமாக பயன்படுத்தப்படுவதை சட்டத்தை பாதுகாக்க வேண்டிய தரப்புக்கள் அனுமதிக்கக்கூடாது.

மதகுரு என்று சொல்லப்படுகின்ற குறித்த நபரின் செயற்பாடுகள் மற்றும் பின்னணிகள் தொடர்பாக பல்வேறு சந்தேகங்கள் இருக்கின்றன.

இவை அனைத்தும் விரிவாக ஆராய்ந்து விஷக் கிருமிகள் அனைத்தும் களையப்பட வேண்டும் என்பதே எனது நிலைப்பாடு.

இது தொடர்பாக, எதிர்வரும் நாட்களில் ஜனாதிபதியிடம் வலியுறுத்தவுள்ளதுடன் அமைச்சரவையிலும் பிரஸ்தாபிப்பதற்கு எதிர்பார்த்துள்ளேன்.

யதார்த்தத்தை புரிந்து கொண்டு ஆரோக்கியமான எதிர்காலத்தை நோக்கி பயணிக்கும் ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க மற்றும் பிரதமர் தினேஸ் குணவர்த்தன தலைமையிலான அரசாங்கம் விரைவில் இவ்வாறான செயற்பாடுகளை கட்டுப்படுத்தும் என்ற நம்பிக்கை எனக்குள்ளது - என்றார். (அ)

# இஸ்ரேலில் மரணமடைந்த அனுலாவின் சடலம் நாட்டுக்கு கொண்டு வரப்பட்டது

கொழும்பு, ஒக். 29

இஸ்ரேலில் மரணமடைந்த அனுலா ரத்நாயக்கவின் சடலம் நாட்டுக்கு கொண்டு வரப்பட்டுள்ளது.

குறித்த சடலம் கட்டுநாயக்க விமான நிலையத்தை நேற்று காலை வந்தடைந்ததாக தெரிவிக்கப்பட்டது.

சடலத்தை பெற்றுக் கொள்வதற்காக உயிரிழந்த அனுலா ரத்நாயக்கவின் உறவினர்கள் விமான நிலையத்துக்கு சென்றதாகவும் வெளிநாட்டு வேலைவாய்ப்புப் பணியகத்தின் அதிகாரிகள் குழுவும் சென்றதாகவும் தெரிவிக்கப்பட்டது.

கடந்த 7 ஆம் திகதி இஸ்ரேலில் ஹமாஸ் போராளிகள் நடத்திய தாக்குதலில் இஸ்ரேலிய பெண் ஒருவரை பராமரித்து வந்த அனுலா ரத்நாயக்க உயிரிழந்தார்.(அ)

# கொழும்பு துறைமுக நகரில் சுங்க வரியில்லா வணிகம்!

## வர்த்தமானி வெளியிடப்பட்டது

கொழும்பு, ஒக். 29

கொழும்பு துறைமுக நகரத்தில் சுங்க வரியில்லா சில்லறை வர்த்தகம் அல்லது சுங்க வரியில்லா வணிக வளாக நடவடிக்கைகளை மேற்கொள்வதற்கான தேவைகள் தொடர்பான வர்த்தமானி வெளியிடப்பட்டுள்ளது.

முதலீட்டு ஊக்குவிப்பு அமைச்சர் என்ற வகையில் ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்கவினால் குறித்த வர்த்தமானி வெளியிடப்பட்டுள்ளது.


அதன்படி, சுங்க வரியில்லா வணிக வளாக வர்த்தகத்தை நடத்துவதற்கு, ஒரு முதலீட்டாளர் குறைந்தபட்சம் 7 மில்லியன் அமெரிக்க டொலர்களை முதலீடு செய்யவேண்டும்.

இதேவேளை, ஒரு முதலீட்டாளர் ஒரு சுங்க வரியில்லா சில்லறை வர்த்தகத்தை நடத்த குறைந்தபட்சம் 5 மில்லியன் அமெரிக்க டொலர்களை முதலீடு செய்யவேண்டும்.

குறித்த முதலீட்டாளருக்கு சுங்க வரியில்லா வர்த்தக நடவடிக்கைகளில் உலகளாவிய அனுபவமும் இருக்க வேண்டும் என்று குறித்த வர்த்தமானியில் குறிப்பிடப்பட்டுள்ளது.

(அ)

## அப்புக்குட்டி அண்ணையின் 'டவுட்'



பகிர்வு -101

# புதிய சிந்தனைகளோடு கூடிய புதியவர்களே அதிகம் தேவை!

**கணபதி சர்வானந்தா**

கல்வி என்பதை அரச தொழிலைத் தேடுவதற்கான கருவி என்று எம் சமூகம் என்று நம்பியதோ அன்றே எமது கல்வியின் மகத்துவம் குறைந்துவிட்டது. அத்துடன் எமது பொருளாதாரமும் சரிய ஆரம்பித்துவிட்டது எனலாம். கல்வி யின் மகத்துவத்தையும், நோக்கத்தையும் தவறாகப் புரிந்து கொண்ட சமூகத்தில் கல்வியால் வளம்பெறுவது என்ற பதம் இல்லாது போய்விட்டது.

மனித அடிப்படை உரிமைகளில் ஒன்று எனக் கருதப்படும் அச் சிறப்புக் கல்வியானது அவனது தொழிலுக்கு வழிகாட்ட வேண்டும். ஒருவனுக்கு பெருமையையும் புகழையும் பெற்றுத் தரக்கூடிய செல்வம் கல்விச் செல்வமே. கற்றவர்க்கு சென்ற விடமெல்லாம் சிறப்பு என்பது முதுமொழி. ஒருவன் தன்னை ஒரு கல்வியாளன் என்று அடையாளப்படுத்துவதையே அதிகம் விரும்புகிறான். ஒரு சபையிலே கல்விச் செல்வனாகத் தான் வீற்றிருப்பதையே பெருமை எனக் கருதும் ஒருவனுக்கு அதைவிடப் பெருஞ் செல்வம் வேறு என்ன இருக்க முடியும்?

பொதுவாகக் கல்வி என்றால் என்ன? கல்வி என்பது பொதுவாக மக்களைச் சகல துறைகளிலும் வலுப்படுத்த வேண்டும். அவை தொடர்பாகச் சிந்தனைகளை முடக்கிவிட வேண்டும். அத்துடன் ஆரோக்கியமான மன வளர்ச்சியைத் தரவல்லதாக அமைய வேண்டும். கல்வி நல்லொழுக்கத்தைத் தரவேண்டும். நல்லொழுக்கம் மதிப்புடன் கூடிய ஒரு சமூக அமைப்பை உருவாக்க வேண்டும். கல்வியாளர்கள் கூற்றின் படி, இளைய தலைமுறையை முறையாக வழி நடத்துவதிலும், சமுதாயத்தில் பங்களிப்பு செய்ய வைப்பதிலும் கல்வி முக்கி யப் பங்கு வகிக்கிறது என்று சொல்லாம்.

“பிச்சை புகினும் கற்கை நன்றே”என்று ஔவையார் கூறுவதில் எத்தகைய பெறுமதி வாய்ந்தது கல்வி என்று அறிக. என்ன விலை கொடுத்தும் கல்வியைப் பெற்றுக் கொள்வதிலே ஆர்வமுடையவராக நாம் இருத்தல் வேண்டும் என்பதையே ஔவை அவ்வாறு எடுத்துக் காட்டியிருக்கிறார்.

பட்டங்களின் மூலம் ஒருவனைக் கல்வியாளன் என்று தீர்மானிக்கின்ற ஒரு சூழ்நிலையிலேதான் நாம் வாழ்ந்து வருகிறோம். பெரும்பாலும் அனுபவக் கல்வியை நாம் மதிப்பதில்லை. பட்டங்களைப் பெற்றவன் அனுபவத்தையும் தன்னகத்தே வைத்திருப்பானாகில் அதன் பெறுமதி வேறு ஒன்றாகிவிடும். நாட்டை அபிவிருத்தி செய்வது தொட்டு நாட்டைச் சகல துறைகளிலும் வளப்படுத்த உதவுவதோடு நாட்டையும் அங்குள்ள மக்களையும் முன்னோக்கிக் கொண்டு செல்ல அது உதவும். சிறப்புமிக்க பொருளாதார அபிவிருத்தி ஒன்றை நோக்கி நகரவும் வறுமைப் பிடியில் இருந்து மக்களை மீட்டெடுக்கவும் கல்வி மிகமிக முக்கியமானதாகும். உலகை மாற்றக்கூடிய சக்தி கல்விக்கு உண்டு என உணரப்படுகின்ற அதே வேளை நல்லவை, தீயவை எனப் பிரித்தறிந்து வாழ்வில் நலம் பெற சிறப்புக் கல்விமுறைமை ஒன்றை எம்மத்தியில் உருவாக்க வேண்டும் என்ற கருத்துப் பல காலமாகத் தெரிவிக்கபட்டு வருகிறது. தற்போதுள்ள கல்வி முறைமை அச் சிறப்பைச் செய்யாது எனப் பலர் நம்புகின்றனர்.

ஒரு சமூகத்தை வழி நடத்த வேண்டியவர்கள் கல்வியாளர்களே என்பதை மறுப்பதற்கில்லை. ஆனால் அக்கல்வி முறைமை எது? என்பது பற்றியே அதிகம் கேள்வி எழுகிறது.

ஒரு சமூகத்தை வழி நடத்தச் சிறந்த ஒரு சமூகப் பொறுப்பாளர்களாக அச் சமூக மக்களை உருவாக்கக் கூடிய சக்தி கல்விக்கு உண்டு, ஆனால் அதற்கு இது போன்றதொரு கல்வி முறை கைகொடுக்காது என்றும் பின்லாந்து தேசத்தின் கல்வி முறைபோல ஒன்றைத் தெரிசெய்வதே காலத்தின் கட்டாயமாகிறது என்றும் கருத்துத் தெரிவிப்பவர்கள் எம் சமூகத்தில் பலர் உண்டு எனினும் பூனைக்கு மணி கட்டுபவர் யார்? என்பது தான் தற்போதைய கேள்வியாக அமைகிறது.

ஒரு சமூகத்தின் நெருக்கடியை மட்டுமல்ல அது ஏற்படுத்தும் சமகால விளைவுகளைக் கண்டறிந்து சமூகத்தை சரியான பாதையில் வழி நடத்தச் சிறந்த கல்வியாளர்கள் தேவை என்பது தற்போதைய வேண்டுகோளாகவும் இருக்கிறது.

இளவயதுக் குழப்பங்கள், குடும்பச் சண்டைகள் அவை தொடர்பான சச்சரவுகள், பொருளாதார வீழ்ச்சி, போதைவஸ்தின் அவலமும் அது ஏற்படுத்தும் சமூகப் பிறழ்வுகளும், அந்நிய தீய சக்திகளின் ஊடுருவலும் அதனால் ஏற்படுகின்ற சமூக வன்முறைகள் மற்றும் சமூகப் பின்னடைவுகள் என அனைத்தையும் ஆய்வுக் குட்படுத்தி அது தரும்பேறுகளைக் கண்டறிந்து அது தொடர்பாகச் சமூகத்துக்கு அறிவூட்டிச் சமூகத்தை விழிப்படையச் செய்யக் கூடிய ஆற்றலைக் கொண்ட கல்வியாளர்களே அதிகம் எமக்குத் தேவைப்படுகிறார்கள். அனுபவ அறிவோடு கூடிய ஒரு கல்வி அறிவுள்ளவரையே தலைவனாகக் கௌ்ளச் சமூகம் விரும்கிறது.அதனையே சமூகம் தனது தேடலாகவும் கொண்டுள்ளது.

அனவே அதனை நோக்கி நகரக் கூடிய சக்தி கொண்ட மனிதர்களை நம் தேட வேண்டும். அத் தேடலானது சகல வழிகளிலும் நடைபெற வேண்டும்.அத் தேடலை ஒரு வரையறைக் குட்படுத்தாது, ஒரு எல்லைக் குட்படுத்தாது ஒரு சுதந்திர முயற்சியாகப் பார்க்க வேண்டும்.குறிப்பாக அரசியலற்ற பெருவெளியொன்றை ஏற்படுத்தக் கூடிய வழிகள் எவை என்று கூடி ஆராய்ந்து அதனைத் திறந்துவிட வழி சமைப்பதே காலத்தின் கட்டாய மாகிறது.

இதில் ஏன் அதிக கவனம் செலுத்த வேண்டும்? கடந்த காலங்களில் நடைபெற்ற இவை தொடர்பான முயற்சிகளில் கலந்து கொண்டவர்கள் ஒரு சிலரே. இவை தொடர்பில் புதிய முகங்களை, புதிய ஆர்வலர்களை, புதிய சிந்தனையாளர்கள் எனப் புதியவர்களைக் கூட அறிமுகப்படுத்த முடியாத அளவுக்கு நாம் பெலவீனமுள்ளவர்களாக உள்ளோம் என்பதுதான் வருத்தத்துக்குரிய விடயம். புதியவவர்களை , புதிய சிந்தனையோடு கூடியவர்களை, புதிய ‘முகம்’ கொண்டவர்களை இம் முயற்சிக்குள் உட்படுத்தாதவரைக்கும் நாம் எதிர்பாக்கின்ற அக் கல்விச் சமூகத்தை உருவாக்க முடியும் என நான் நம்பவில்லை.

ஒரு சமூகப் பொறுப்புள்ள கல்வியை அடிப்படையாகக் கொண்ட சமூகச் சிந்தனையாளர்களை உருவாக்க வேண்டுமெனில் நாம் அவை தொடர்பான புதியவர்களைத் தேடும் முயற்சியில் ஈடுபடுவதைத் தவிர வேறு ஒன்று இருக்க முடியாது. அவர்கள் எமது சமூகத்தில் வாழ்ந்து கொண்டு இலைமறையாகப் பல சாதனைகளை நிகழ்த்திக் கொண்டு இருக்கிறார்கள். அவர்கள் இங்குமட்டுமல்ல புலம்பெயர்ந்தும் இருக்கிறார்கள் என்பதைக் கருத்தில் கொள்வோமாக.

# இந்தவார ராசிபலன் 29.10.2023 - 03.11.2023

ஞாயிற்றுக்கிழமை
சோபகிருது வருடம் - ஐப்பசி 12
நல்ல நேரம்: 7.30 - 9.00
ராகு காலம் : 4.30 - 06.00
திதி : பிரதமை

**மேஷம்** [ அசுவினி, பரணி, கார்த்திகை 1 பாதம் ]

உடல் ஆரோக்கியம் சிறிது பாதிக்கப்படும். பெற்றோருக்கு மருத்துவச் செலவு செய்ய நேரிடும். விட்டுக் கொடுத்து நடப்பீர்கள். சிறிது விரயங்கள் ஏற்படும். உத்தியோகஸ்தர்கள் மேலதிகாரிகளின் கோபத்துக்கு ஆளாக மாட்டீர்கள். வியாபாரிகள் போட்டிகளைச் சமாளிப்பீர்கள். விவசாயிகள் பொறுப்புடன் செயல்படுவீர்கள். அரசியல்வாதிகள் பிறருக்கு உதவி செய்து மகிழ்வீர்கள். பெண்களுக்கு குடும்பத்தில் மகிழ்ச்சி நிறையும்.

**ரிஷபம்** [ கார்த்திகை 2,3,4, ரோகிணி, மிருகசீரிஷம் 1,2 ]

பொருளாதாரம் உயரும். சேமிப்பை உயர்த்துவீர்கள். பெரியோர்களைச் சந்தித்து மகிழ்ச்சி அடைவீர்கள். அரசு சலுகைகள் கிடைக்கும். உத்தியோகஸ்தர்களுக்கு பணிச்சுமை அதிகரிக்கும். வியாபாரிகள் எதிலும் அகலக்கால் வைக்காதீர்கள். விவசாயிகள் கால்நடைகளுக்கு மருத்துவச் செலவு செய்ய நேரிடும். அரசியல்வாதிகள் தொண்டர்களை அரவணைத்துச் செல்வீர்கள். கலைத் துறையினருக்குப் புதிய ஒப்பந்தங்கள் கிடைக்கும். மாணவர்கள் பரீட்சைகளின் அதிக மதிப்பெண் பெறுவார்கள்.

**மிதுனம்** [ மிருகசீரிடம் 3,4, திருவாதிரை, புனர்பூசம் 1,2,3 ]

குறைகளை நிறைகளாக்குவீர்கள். காரியங்களைத் திட்டமிட்டு செய்து முடிப்பீர்கள். எதிர்ப்புகள் இருக்காது. குடும்பத்தில் சுப காரியங்கள் நடைபெறும். உத்தியோகஸ்தர்கள் அலுவலக இடையூறுகளைச் சமாளிப்பீர்கள். வியாபாரிகளுக்கு வாடிக்கையா ளர்கள் பெருகுவார்கள். விவசாயிகள் புதிய நிலங்க ளைக் குத்த கைக்கு எடுப்பார்கள். அரசியல்வாதிகள் காரியங்களில் வெற்றி பெறுவார்கள். கலைத் துறையினரின் பொருளாதார நிலை உயரும். பெண்களுக்கு ஆன்மிகத்தில் நாட்டம் அதிகரிக்கும்.

**கடகம்** [ புனர்பூசம் 4, பூசம், ஆயில்யம் ]

தொழிலை லாபகரமாக நடத்துவீர்கள். எதிர்காலக் கவலைகள் மனதை வாட்டும். பெரியோர்களின் சந்திப்பால் மகிழ்வீர்கள். பெற்றோரும் மனதுக்கு இதமாக நடப்பார்கள். உத்தியோகஸ்தர்கள் பிறரால் பாராட்டப்படுவார்கள். வியாபாரிகள் வாடிக்கையாளர்களின் தேவைகளை நிறைவேற்றுவார்கள். விவசாயிகளுக்குப் பால் வியாபாரத்தில் வருவாய் கிடைக்கும். அரசியல்வாதிகளை பிறர் பாராட்டுவார்கள். பெண்கள் கவனமாகப் பேசவும்.

**சிம்மம்** [ மகம், பூரம், உத்திரம் 1 ]

பணம் கையில் தாராளமாகப் புழங்கும். குடும்பத்தில் நிம்மதி உண்டாகும். உடல் ஆரோக்கியம், மனவளம் மேம்படும். கடன் கொடுக்கும்போது கவனமாகச் செயல்படவும்.உத்தியோகஸ்தர்கள் மேலதிகாரிகளிடம் சுமுகமாக நடக்கவும். வியாபாரிகள் ரகசியங்களைப் பகிர வேண்டாம். விவசாயிகள் நல்ல விளைச்சலைக் காண்பார்கள். அரசியல்வாதிகள் காரியங்களில் வெற்றி பெறுவார்கள். மாணவர் விளையாட்டில் ஈடுபடுவீர்கள்.

**கன்னி** [ உத்திரம் 2,3,4, அஸ்தம், சித்திரை 1,2 ]

கடன்களை வசூலிப்பீர்கள். தொழிலைக் கட்டுப்பாட்டுடன் நடத்துவீர்கள். மருத்துவச் செலவுகள் செய்ய நேரிடும். வெளியூரிலிருந்து நல்ல செய்திகள் கிடைக்கும். உத்தியோகஸ்தர்களுக்கு நிர்வாகத் திறமை வெளிப்படும். வியாபாரிகளுக்கு போட்டிகள் குறையும். விவசாயிகள் புதிய குத்தகை எடுப்பதைத் தவிர்க்கவும். அரசியல்வாதிகள் எதிரிகளிடம் எச்சரிக்கையாக இருக்கவும். கலைத் துறையினருக்கு புதிய வாய்ப்புகள் கிடைக்கும். மாணவர்கள் நன்கு படிப்பார்கள்.

**துலாம்** [ சித்திரை 3,4, சுவாதி, விசாகம் 1,2,3 ]

பெண்கள் உறவினர்கள் வருகையால் மகிழ்ச்சி அடைவார்கள். பொருளாதாரம் உயரத் தொடங்கும். பொதுகாரியங்களில் ஈடுபடுவீர்கள். எதிர்பாராத அதிர்ஷ்ட வாய்ப்புகள் தேடி வரும். பிறரால் புகழப்படுவீர்கள். உத்தியோகஸ்தர்களுக்கு சக ஊழியர்களிடமிருந்த மனக்கசப்புகள் நீங்கும். வியாபாரிகள் சுறுசுறுப்புடன் செயல்படுவீர்கள். விவசாயிகளுக்கு நண்பர்கள் உதவியாக இருப்பார்கள். அரசியல்வாதிகளுக்கு சிறப்பான வளர்ச்சி உண்டு.

**விருச்சிகம்** [ விசாகம் 4, அனுஷம், கேட்டை ]

நல்லவர்களின் தொடர்பும் அதனால் நல்ல பயனும் உண்டாகும். மதிப்பும் அந்தஸ்தும் உயரும். தொழிலை அடுத்தநிலைக்கு எடுத்துச் செல்வீர்கள். கற்பனைத் திறன் அதிகரிக்கும். உத்தியோகஸ்தர்கள் புதிய பயிற்சிகளை முடிப்பீர்கள். வியாபாரிகள் புதிய முயற்சிகளைச் செயல்படுத்துவார்கள். விவசாயிகள் நவீன உபகரணங்களை வாங்குவீர்கள்.அரசியல்வாதிகள் நல்ல பெயரை எடுப்பார்கள்.

**தனுசு** [ மூலம், பூராடம், உத்திராடம் 1 ]

உற்சாகத்துடன் தொழிலில் ஈடுபடுவீர்கள். புதியவர்களிடம் ஜாக்கிரதையாகப் பழகவும். வீண் விவகாரங்களில் தலையிட மாட்டீர்கள். எதிர்பார்ப்புகள் நிறைவேறும். உத்தியோகஸ்தர்கள் விரும்பிய இடமாற்றங்களைப் பெறுவீர்கள். வியாபாரிகள் கொடுக்கல் வாங்கலில் சீரான நிலையை காண்பீர்கள். விவசாயிகளுக்கு நல்ல லாபம் கிடைக்கும். அரசியல்வாதிகள் நிதானமாகச் சாதிப்பீர்கள். கலைத் துறையினர் பிறரை மதித்து நடப்பீர்கள்.

**மகரம்** [ உத்திராடம் 2,3,4, திருவோணம், அவிட்டம் 1,2 ]

தன்னம்பிக்கையும் தனித்திறனும் வெளிப்படும். தொழில் நிமித்தமான பயணம் உண்டாகும். எண்ணங்கள் நிறைவேறும். புகழும் அந்தஸ்தும் உயரும். உத்தியோகஸ்தர்கள் சக ஊழியர்களால் பாராட்டப்படுவீர்கள். வியாபாரிகளின் பெருமை அதிகரிக்கும். விவசாயிகள் கொள்முதலில் கூடுதல் வருவாயைக் காண்பார்கள். ஸ அரசியல்வாதிகள் எதிர்க்கட்சியினரும் பாராட்டும்படி நடப்பீர்கள். கலைத் துறையினர் பயணங்களை மேற்கொள்வீர்கள். பெண்களுக்கு ஆன்மிகத்தில் நாட்டம் அதிகரிக்கும்.

**கும்பம்** [ அவிட்டம் 3,4, சதயம், பூரட்டாதி 1,2,3 ]

தொழிலில் வெற்றிப் படியை எட்டுவீர்கள். சிந்தித்து செயல்படுவீர்கள். உடல் ஆரோக்கியத்தில் இருந்த குறைகள் நீங்கும். உத்தியோகஸ்தர்கள் மேலதிகாரிகளிடம் சுமுகமாக நடப்பீர்கள். வியாபாரிகளுக்கு எதிர்ப்புகள் மறையும். விவசாயிகளுக்கு பயிர் விளைச்சல் செழிப்பாகவே தொடரும். அரசியல்வாதிகள் தங்கள் செல்வாக்கை உயர்த்திக் கொள்வார்கள். கலைத் துறையினர் புதிய நிகழ்ச்சிகளை நடத்துவார்கள். பெண்கள் குலதெய்வப் பிரார்த்தனையை நிறைவேற்றுவீர்கள்.

**மீனம்** [ பூரட்டாதி 4, உத்திரட்டாதி, ரேவதி ]

குறைகளை நிறைகளாக்குவீர்கள். காரியங்களைத் திட்டமிட்டு செய்து முடிப்பீர்கள். எதிர்ப்புகள் இருக்காது. குடும்பத்தில் சுப காரியங்கள் நடைபெறும். உத்தியோகஸ்தர்கள் அலுவலக இடையூறுகளைச் சமாளிப்பீர்கள். வியாபாரிகளுக்கு வாடிக்கையாளர்கள் பெருகுவார்கள். விவசாயிகள் புதிய நிலங்களைக் குத்தகைக்கு எடுப்பார்கள். அரசியல்வாதிகள் காரியங்களில் வெற்றி பெறுவார்கள். கலைத் துறையினரின் பொருளாதார நிலை உயரும். பெண்களுக்கு ஆன்மிகத்தில் நாட்டம் அதிகரிக்கும். மாணவர்கள் உடற்பயிற்சிகளில் கவனம் செலுத்துவீர்கள்.

# ஆயிரம் ஆண்டுகளாக கொண்டாடப்படும் ராஜராஜ சோழன் சதய விழா!

க. மாயகிருஷ்ணன்

தான் வாழ்ந்த காலத்தில் மட்டுமல்லாது, மறைந்து ஆயிரம் ஆண்டுகளை கடந்தும் இன்றும் பிறந்த நாள் கொண்டாடப்படுவது மாமன்னன் ராஜ ராஜசோழனுக்கு மட்டுமே.

எதற்காக இந்த 'சதய விழா' ஆயிரம் ஆண்டுகளை தாண்டியும் கொண்டாடப்பட்டு வருகின்றது? சாமானியர் முதல் தமிழ்நாடு முதலமைச்சர்வரை, அரசு விழாவாகவே அறிவித்து, தொடர்ந்து கொண்டாடி மகிழ்ந்து வரும் சதய திருவிழா கொண்டாட்டம் பற்றியும், ராஜராஜ சோழனை பற்றியும் சற்று பார்ப்போம்.

ராஜராஜ சோழ தேவர் என்று அழைக்கப்படும் அருண்மொழி, சுந்தர சோழனுக்கும், வானவன் மாதேவியாருக்கும் மகனாக பிறந்தவர். சோழராஜ்யத்தின் பிரம்மாண்ட வளர்ச்சிக்கு உறுதுணையாக இருந்தவர். ராஜராஜன் தனது ஆட்சி காலத்தில் செழியன், சேரன், உதகை அரசன், குடமலை மன்னன், கங்க பாடி அரசன், சாளுக்கிய அரசன் கலிங்க மன்னன், தெலுங்கு பீமன் உள்பட 12 நாடுகளை ஆண்ட 13 அரசர்களை வென்றவர். இவருடைய பெற்றோர்கள் இவருக்கு இட்ட பெயர் அருண்மொழிவர்மன். ஆனால், இவரது ஆட்சியின் மூன்றாம் ஆண்டாகிய கி.பி. 988ஆம் ஆண்டிலேயே ராஜராஜன் என்னும் பெயர் வழங்கப்பட்டது என்பதை திருச்செக்கட்டான்குடி, ,திருமால்புரம் ஆகிய ஊர்களில் காணப்படும் கல்வெட்டுகளால் அறிய முடியும். இதற்கு காரணம் போர்களில் இவர் பெற்ற வெற்றிகளே.

ஆட்சியில் நிகழ்ந்த வரலாற்று உண்மைகளை நன்கு விளக்கும் மெய்க்கீர்த்தியை இனிய தமிழ் மொழியில் கல்வெட்டுகளில் பொறிக்கும் வழக்கத்தை முதலில் மேற்கொண்ட அரசன் ராஜராஜ சோழன்.

தஞ்சை பெரிய கோயிலை கட்டியது யார் என்றே தெரியாத நிலையில்தான் தமிழக மக்கள் இருந்தனர். ஆங்கிலேயர் ஆட்சியில் 19ஆம் நூற்றாண்டின் இறுதியில் தொல்லியல் இயக்குனரான ஜெர்மனியை சேர்ந்த ஹூல்ஸ், தஞ்சை கோயிலை ஆய்வு செய்து, அவரின் பெரும் முயற்சியினால் கல்வெட்டுகள் படியெடுக்கப்பட்டு வெளியிடப்பட்டன. அதன் பிறகே ராஜராஜ சோழன் என்னும் பெயர் உலகிற்கு பிரபலமாயிற்று.

ராஜராஜசோழனுக்கு 13 மனைவியர்கள் இருந்துள்ளனர். இவர்களில் உலோக மகாதேவி மற்றும் தந்திசக்தி விடங்கி ஆகியோர் பட்டத்தரசியாக இருந்துள்ளனர்.

தஞ்சை பெரிய கோவிலில் 107 கல்வெட்டுகள் உள்ளன. இதில் 89, சோழர்கள் கால கல்வெட்டுகளாகும். அதில் 64 ராஜராஜன் காலத்திய கல்வெட்டுக்கள். இவை தமிழ் மொழியிலேயே எழுதப்பட்டுள்ளன. ஒருசில சொற்கள் மட்டும் கிரந்தத்தில் உள்ளது.

கோவிலின் விளக்கு எரிப்பதற்காக பல பொருட்களை ராஜராஜன் கொடுத்துள்ளார். அதை சில கல்வெட்டுகள் தெரிவிக்கின்றன. இதில் பல உயர் அதிகாரிகளின் பெயர்களும், சில படை வீரர்களின் பெயரும் உள்ளன. அவர்கள் கொடுத்த தானங்கள் மற்றும் அதன் எண்ணிக்கை அவர்களுடைய பெயருடன் இணைத்து எழுதப்பட்டுள்ளது. அதில் "நாங் குடுத்தனவும், தன் அக்கன் கொடுத்தனவும், நம் பெண்கள் குடுத்தனவும் மற்றும் குடுப்பார் குடுத்தனவும் கல்லிலே வெட்டி அருளுக..." என்று கல்வெட்டு தொடங்குகிறது.

## தமிழ்நாட்டின் பிரமாண்ட தஞ்சை ராஜராஜேஸ்வரம்



"தஞ்சை பெரிய கோவிலுக்கு மன்னரும் அவருடைய சகோதரி, மனைவிகள், மற்றும் அதிகாரிகள், பணிப் பெண்கள் கொடுத்த நன்கொடை குறித்த முழு விவரங்களும் மிக துல்லியமாக கல்லில் பதிவு செய்யப்பட்டுள்ளன. தங்க நகை என்றால் அந்த தங்கத்தினுடைய எடை, மதிப்பு, செப்பு சிலைகள் என்றால் அதன் உயரம், எடை என்ன, உள்ளிட்ட அனைத்து வகை விவரங்களும் பதிவு செய்யப்பட்டுள்ளன. அதைப்போல், கோவிலில் பணி



யாற்றிய 407 நடன பெண்கள், 50 இசைக் கலைஞர்கள் பற்றிய முழு விபரங்கள், உணவுப் பொருட்களுக்கு அரசு நிர்ணயித்த விலை விவரம் வழிபாட்டுச் செலவினங்கள், நாடு முழுவதும் வரி வசூலுக்காக நிலம் அளக்கப்பட்டது பற்றிய விவரம், வரி செலுத்தப்படாத நிலங்கள், அரசு கையகப்படுத்திய விபரங்கள், போர்கள் குறித்த விபரங்கள் என ஏராளமான அனைத்து வகை தகவல்களையும் தெளிவாக ராஜராஜன் பதிவு செய்துள்ளார்" என ஆய்வாளர்களால் தெரிவிக்கப்படுகிறது..

ராஜராஜன் அரியணை ஏறியதை தொடர்ந்து வந்த 100 ஆண்டுகளும் சோழ மரபின் பொற்காலம் எனக் கருதப்படுகிறது. இவர் காலத்தில் 30 ஆண்டுகளும் மிக முக்கியமாக பார்க்கப்படுகிறது. இவரது ஆட்சி முறை

## மன்னர் ஆட்சியில் நடைபெற்ற மக்கள் ஆட்சி

ராணுவம், நுண்கலை, கட்டிடக்கலை, சமயம் என பல்வேறு துறைகளிலும் புதிய எழுச்சியுடன் காணப்பட்டது. ஆட்சியில் காலாட்படை, குதிரைப் படை, யானை படை, மற்றும் வலிமையான கப்பற்படையும் பராமரிக்கப்பட்டது.



வரலாற்றில் மிகச்சிறந்த மன்னன் ஒருவனுக்கு 'தி கிரேட்' என்னும் அடைமொழியை ஆய்வாளர்கள் வழங்குவார்கள். தமிழ்நாட்டு வரலாற்றில் எத்தனையோ அரசர்கள் இருந்திருந்தாலும் சோழப்பேரரசர் ராஜ ராஜனுக்கு 'தி கிரேட்' என்னும் அடைமொழியை ஆய்வாளர்கள் கொடுத்தனர். வரலாறு எழுதிய பெரும்பாலான தொல்லியல் ஆய்வாளர்களும் ராஜ ராஜனை மட்டும் 'தி கிரேட் ராஜ ராஜா' என்று தாங்கள் எழுதிய நூல்களிலும் ஆவணங்களிலும் பதிவு செய்துள்ளனர்.

இதற்கான காரணங்களை விளக்குகிறார் விழுப்புரம், அறிஞர் அண்ணா அரசு கலைக் கல்லூரி வரலாற்று துறை பேராசிரியர் ரமேஷ். "இவருடைய ஆட்சியில் ஊராட்சி அமைப்புகள் அனைத்துமே தன்னாட்சி பெற்றவைகளாக சிறந்து விளங்கின. தமிழக மக்களின் பெரும்பாலானவர்களுக்கு புனித நூலாக உள்ள திருமுறைகள் கிடைக்க ராஜராஜன்தான் காரணமாவார். இவர் இல்லை என்றால் திருமுறைகள் எல்லாம் சிதம்பரத்திலேயே செல்லரித்து அழிந்திருக்கும்" என்று, மேலும் சில தகவல்களை அவர் பகிர்ந்து கொள்கிறார்.

சுந்தர சோழன் காலத்தில் அருண்மொழி என்ற படைத் தலைவராக மட்டுமே ராஜ ராஜன் செயல்பட்டார். அவருக்கு ஆதித்த கரிகாலன் என்ற சகோதரரும் இருந்தார். அவர்தான் பட்டத்து இளவரசர் . அவருடைய சகோதரனும், தந்தையாரும் அடுத்தடுத்து இறக்க, அரச பதவி இவரை தேடி வந்தபோதிலும், சித்தப்பா மதுராந்தக சோழருக்கு பதவி ஆசை இருப்பதை அறிந்த இவர், தனக்கு கிடைத்த பதவியை அவருக்காக விட்டுக் கொடுத்தார். இந்த செய்தியை திருவாலங் காட்டு செப்பேடுகள் உறுதி செய்கின்றன.

"பதவிக்காக உறவுகளை துறப்பவர்களை வரலாற்றில் நிறைய கண்டுள்ளோம். ஆனால், உறவுக்காக பதவியை மறுத்த ராஜ ராஜன் போன்றவர்களை மிக அரிதாகத்தான் பார்க்க முடியும். இவரது காலத்தின் குடிமராமத்து, குடவோலை முறை உள்ளிட்டவை காலம் கடந்து போற்றப்படும் திட்டங்கள் ஆகும். இவரது காலத்தில் ஏழைகளுக்கு மிகக் குறைந்தபட்ச வட்டியில் கடன்கள் வழங்கப்பட்டுள்ளன . 'ராஜராஜேஸ்வர உடையார் பெரும் பண்டாரம்' என்ற ஒரு முன்மாதிரி வங்கி அமைப்பின் மூலம் இந்த கடன் உதவியை ராஜராஜன் வழங்கியிருக்கின்றார். இந்த கடனை வாங்கும் மக்கள் இதற்காக செலுத்தும் வட்டி பொழிசை என்று கல்வெட்டுகளில் குறித்து வைக்கப்பட்டுள்ளது .இந்த பொழிசை பெரும்பாலும் விலை பொருள் வடிவிலேயே பெறப்பட்டுள்ளது" என்று பேராசிரியர் ரமேஷ் கூறுகிறார்.

ராஜராஜனே தனது பிறந்த நாளான ஐப்பசி மாதம் சதயம் நட்சத்திரம் வரும் தினத்தை கொண்டாடி உள்ளார். அவரது காலத்தில் கேரள பகுதியாக இருந்த கன்னியாகுமரிக்கு அருகிலுள்ள திரு நந்திக்கரையில் உள்ள கல்வெட்டு இதை பதிவு செய்துள்ளது. ஏழு நாட்கள் இந்த திருவிழா நடைபெற்றுள்ளது.

"மன்னன் மட்டும் இந்த விழாவை கொண்டாடவில்லை. மக்களும் உணர்வுபூர்வமாக கொண்டாடியுள்ளார்கள், குறிப்பாக, சென்னைக்கு அருகில் உள்ள திருவிடந்தை என்ற மீனவ கிராமம் உள்ளது. அக்காலத்திலேயே அந்த ஊர் மக்கள் சதய விழாவை தங்களது சொந்த பணத்தை செலவிட்டு, மிக சிறப்பாக கொண்டாடி உள்ளார்கள். மக்கள் மட்டுமல்ல, ராஜராஜனுக்கு பின் வந்த பல சோழ மன்னர்களும் சதய விழாவை வெகு விமரிசையாக கொண்டாடி மகிழ்ந்தனர். குறிப்பாக, தமிழ் பாடும் விழாவாகவே இரண்டாம் குலோத்துங்கன் காலத்தில் சிறப்பாக கொண்டாடியுள்ளார்கள். ராஜராஜ னின் ஆட்சி காலம் முடியாட்சியாக இருந்த போதிலும், மக்களாட்சியாகவே அது நடைபெற்றது. மக்களின் உணர்வுகளை புரிந்து மதிப்பு கொடுத்து, சிறந்த ஆட்சியை கொடுத்துள்ளார்" என்று எழுத்தாளர் டாக்டர். குடவாயில் பாலசுப்பிரமணியன் கூறுகிறார்.

ராஜராஜ சோழன் விவசாயத்திற்கு முக்கியத்துவம் கொடுத்து நீர் ஆதாரங்களை பெருக்கினார். தஞ்சை பெரிய கோவிலின் கட்டு மானத்தில் மழைநீர் சேகரிப்பு திட்டம் செயல்படுத்தப்பட்டுள்ளமை குறிப்பிடத்தக்கது. கோவிலின் உள்ளே இருக்கும் வடிகால்கள் கோவி லில் உள்ள நீரை வெளிப் பிரகாரம் வழியாக அருகில் உள்ள சிவகங்கை குளத்திற்கு கொண்டு செல்லும் வகையில் கட்டப்பட்டுள்ளது. இது மழைநீர் சேகரிப்பு திட்டத்துடன் கட்டப்பட்ட மிகச் சிறந்த கட்டிட அமைப்பிற்கு உதாரணமாகும்.

"ராஜராஜ சோழனின் காலத்திலிருந்து சதய விழா மிக பிரமாண்டமாகவும், தொடர்ந்து வந்த காலக்கட்டங்களில் மிக சிறிய அளவிலேனும் நடைபெற்றுக் கொண்டுதான் இருந்தது. மீண்டும் மிக பிரமாண்டமான முறையில் இந்த விழாவை நடத்தியவர் முன்னாள் முதலமைச்சர் மு. கருணாநிதி.

ராஜராஜன் ஆயிரமாவது ஆட்சி ஆண்டு விழாவினை நடத்தியதும் அவர்தான். ராஜராஜனுக்கு சிலை வைத்து, தொடர்ந்து அதை அரசு விழாவாக மாற்றியதில் மிகப் பெரிய பங்கு அவருக்கு உண்டு. தற்போதைய முதல மைச்சர் மு க ஸ்டாலினும் இதை அரசு விழாவாக கொண்டாட ஆணையிட்டுள்ளார். மேலும் தஞ்சாவூர் மக்கள் மட்டுமல்லாது, ராஜராஜ சோழன் எங்கெல்லாம் வென்றெடுத்தானோ அந்த பகுதி மக்கள் அனைவரும் ராஜராஜ சோழனின் ஆட்சியின்பால் ஈடுபாடு கொண்டு, மன்றங்கள் வாயிலாக, குழுக்களாக பல்வேறு வழிகளிலும் சதய விழாவை கொண்டாடி வருகின்றனர்" என்கிறார் குடவாயில் பாலசுப்பிரமணியன்.

"மும்முடி சோழன் என்ற ராஜராஜ சோழன் பிறந்தது சதய நாள் என்பதை தஞ்சை பெருவுடையார் கோவில் கல்வெட்டும், இவரது பட்டத்தரசி உலோக மாதேவி கட்டுவித்த திருவையாறு கோவில் மற்றும் திருவெண்காடு கோவில் கல்வெட்டுகளும் உறுதிபடுத்துகின்றன" என்று குடவாயில் பாலசுப்பிரமணியன் தெரிவிக்கிறார்.

(பிபிசி-தமிழ்)

# நசீர் அஹமட்டுக்கு எதிரான தீர்ப்பு கட்சித்தாவல் கலாசாரம் குறித்து மூளவைத்திருக்கும் விவாதம்!



**வீரகத்தி தனபாலசிங்கம்**

தற்போதைய பாராளுமன்றத்தில் யார்யார் எந்தப் பக்கத்தில் இருக்கிறார்கள் என்று தெரியவில்லை என்று தமிழ் தேசிய கூட்டமைப்பின் பாராளுமன்ற உறுப்பினர் சுமந்திரன் அடிக்கடி கூறுவார்.

கடந்த வருடத்தைய மக்கள் கிளர்ச்சியை அடுத்து சிறிலங்கா பொதுஜன பெரமுனவின் பல பாராளுமன்ற உறுப்பினர்கள், கட்சியில் இருந்து உத்தியோகபூர்வமாக வெளியேறாவிட்டாலும், சபைக்குள் சுயாதீனமான குழுக்களாக இயங்குகிறார்கள். வேறு கட்சிகளைச் சேர்ந்தவர்களாக இருந்தாலும் பாராளுமன்ற தேர்தலில் பொதுஜன பெரமுனவுடன் இணைந்து போட்டியிட்டவர்களும் இவ்வாறு பிரிந்து இயங்குகிறார்கள்.

டலஸ் அழகப்பெரும குழு, அநுரா பிரியதர்ஷன யாப்பா குழு மற்றும் விமல் வீரவன்ச - உதய கம்மன்பில குழு ஆகியவையே அவை.

இதற்கு புறம்பாக பொதுஜன பெரமுனவின் கம்பஹா மாவட்ட பாராளுமன்ற உறுப்பினர் நிமால் லான்சா கட்சியை விட்டு வெளியேறாமலேயே பல பாராளுமன்ற உறுப்பினர்களின் ஆதரவைத் திரட்டி புதிய கூட்டணியொன்றை அமைக்கும் முயற்சிகளில் இறங்கியிருக்கிறார். அடுத்த ஜனாதிபதி தேர்தலில் ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்கவை ஆதரிப்பதே இந்த கூட்டணியின் நோக்கம் என்று கூறப்பட்டது. ஆனால் ஒரிரு மாதங்களுக்கு முன்னர் காணப்பட்ட உத்வேகத்தில் கூட்டணி முயற்சி தற்போது இல்லை. அது வேறு விடயம்.

எதிர்க்கட்சி தலைவர் சஜித் பிரேமதாச தலைமையிலான ஐக்கிய மக்கள் சக்தியின் பாராளுமன்ற உறுப்பினர்களான ஹரின் பெர்னாண்டோ, மனுஷ நாணயக்கார மற்றும் டயானா கமகே அரசாங்கத்தில் இணைந்து அமைச்சர் பதவிகளை வகிக்கிறார்கள். அதேவேளை ஐக்கிய மக்கள் சக்தியின் வேட்பாளராக கொழும்பு மாவட்டத்தில் போட்டியிட்டு பாராளுமன்றத்துக்கு தெரிவான முன்னாள் அமைச்சர் பாட்டாலி சம்பிக்க ரணவக்க சபைக்குள் தனியாக இயங்குவதுடன் புதிதாக தனக்கென்று ஒரு கட்சியையும் சில மாதங்களுக்கு முன்னர் தொடங்கினார்.

இவர்கள் எல்லோரும் தேர்தலில் தாங்கள் போட்டியிட்ட கட்சிகளின் கட்டுப்பாட்டை மீறிச்செயற்படுகின்ற போதிலும் பாராளுமன்ற உறுப்புரிமையை இழக்கும் ஆபத்தை எதிர்நோக்கவில்லை. அந்த கட்சிகளின் தலைமைத்துவங்களும் அவர்களுக்கு எதிராக ஒழுக்காற்று நடவடிக்கை எடுப்பதில் அக்கறை காட்டவில்லை.

ஆனால், இம்மாத முற்பகுதியில் உயர்நீதிமன்றம் வழங்கிய தீர்ப்பு இந்த பாராளுமன்ற உறுப்பினர்களுக்கு பதவிகளை இழக்கவேண்டி வரலாம் என்று ஒரு பயத்தை ஏற்படுத்தியது.

சிறிலங்கா முஸ்லிம் காங்கிரஸின் மட்டக்களப்பு மாவட்ட பாராளுமன்ற உறுப்பினரான நசீர் அஹமட் கட்சியின் தீர்மானங்களை மதித்து நடப்பதாக ஏற்கெனவே உறுதியளித்த போதிலும், 2022 பட்ஜெட்டை எதிர்த்து வாக்களிப்பதற்கு கட்சி எடுத்த தீர்மானத்தை மீறி அரசாங்கத்துடன் சேர்ந்து வாக்களித்தமைக்காக கட்சியில் இருந்து வெளியேற்றப்பட்டது சட்டரீதியாக சரியானது என்று அக்டோபர் 6 உயர்நீதிமன்றம் தீர்ப்பளித்தது.

அதையடுத்து அவர் பாராளுமன்ற உறுப்புரிமையையும் அமைச்சர் பதவியையும் இழந்தார். அவரின் இடத்துக்கு அலி சாஹர் மௌலானா பாராளுமன்ற உறுப்பினராக அண்மையில் பதவியேற்றுக் கொண்டார்.



மூன்று தசாப்தங்களுக்கு முன்னர் ஜனாதிபதி ரணசிங்க பிரேமதாசவுக்கு எதிராக கிளம்பிய அமைச்சர்களான காமினி திசாநாயக்க, லலித் அத்துலத்முதலி உட்பட எட்டுப்பேர் ஐக்கிய தேசிய கட்சியில் இருந்து வெளியேற்றப்பட்டதை ஆட்சேபித்து அவர்கள் உயர்நீதிமன்றத்தில் தாக்கல் செய்த வழக்கில் தோல்வியடைந்து பாராளுமன்ற உறுப்புரிமையை இழந்த பிறகு அரசியல்வாதி ஒருவர் கட்சியின் கட்டுப்பாட்டை மீறியதற்காக பாராளுமன்ற உறுப்புரிமையை இப்போதுதான் முதற்தடவையாக இழந்திருக்கிறார் என்பது குறிப்பிடத்தக்கது.

> **எதிர்க்கட்சியை சேர்ந்த எந்தவொரு உறுப்பினரும் பாராளுமன்றத்தில் எதிர்க்கட்சி பிரதம கொறடாவின் கட்டுப்பாட்டை மீறிச் செயற்படுவதற்கு முன்னரைப் போன்று துணிச்சல் கொள்ளமாட்டார்கள். அதேபோன்றே அழகப்பெரும அணியும் அநுரா பிரியதர்ஷன யாப்பா அணியும் பட்ஜெட் வாக்கெடுப்பில் அரசாங்கத்துக்கு எதிராக செயற்படுவதில் பிரச்சினை இருக்கிறது**

நசீர் அஹமட்டுக்கு எதிரான தீர்ப்பை அடுத்து பல பாராளுமன்ற உறுப்பினர்களின் பதவிகள் பறிபோகக்கூடிய ஆபத்து ஏற்பட்டிருக்கிறது என்று பத்திரிகைகளில் செய்திகள் வெளியாகியதுடன் தீர்ப்பு ஏற்படுத்தக்கூடிய தாக்கங்கள் குறித்து அரசியல் விமர்சகர்களும் தொடர்ச்சியாக எழுதிக் கொண்டிருந்தார்கள். ஆனால் கட்டுப்பாட்டை மீறச் செயற்பட்ட பாராளுமன்ற உறுப்பினர்களுக்கு எதிராக கட்சிகளின் தலைமைத்துவங்கள், பொதுவில் எதிர்பார்க்கப்பட்டதைப் போன்று ஒழுக்காற்று நடவடிக்கையை எடுப்பதில் அக்கறை காட்டுவதாக இல்லை.

தனியான குழுக்களாக செயற்படும் பொதுஜன பெரமுன பாராளுமன்ற உறுப்பினர்களுக்கு எதிராக நடவடிக்கை எடுப்பது குறித்து ஆராய்வதாக அதன் பொதுச்செயலாளர் சாகர காரியவாசம் அண்மையில் கூறியிருந்தார் என்றபோதிலும், இதுவரையில் அதற்கான தெளிவான அறிகுறியைக் காணமுடியவில்லை.

எதிரணியுடன் இணைந்துகொண்ட பாராளுமன்ற உறுப்பினர்கள் சிலர் தங்களுக்கு எதிராக நடவடிக்கை எடுத்து பாராளுமன்ற உறுப்புரிமையை இழக்கும் நிலையை ஏற்படுத்தவேண்டாம் என்று காரியவாசத்திடம் வேண்டுகோள் விடுத்ததாகவும் கூறப்படுகிறது.

நசீர் அஹமட்டுக்கு எதிரான தீர்ப்பின் பின்புலத்தில், தங்களுக்கு எதிராக ஐக்கிய மக்கள் சக்தி நடவடிக்கையில் இறங்கக்கூடும் என்று அமைச்சர்களான ஹரின் பெர்னாண்டோவும் மனுஷ நாணயக்காரவும் அஞ்சுவதாக அரசியல் வட்டாரங்களில் பேசப்பட்ட போதிலும் கட்சியின் தலைமத்துவம் அது தொடர்பில் எந்த அறிவிப்பையும் செய்யவில்லை.

ஐக்கிய மக்கள் சக்தியின் பாராளுமன்ற உறுப்பினர்களை அரசாங்கப் பக்கத்துக்கு இழுப்பதற்கு ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க முயற்சித்துவந்தார் என்பது ஒன்றும் இரகசியமல்ல. அந்த கட்சியின் பல உறுப்பானர்கள் அரசாங்கத்துடன் இணையக்கூடும் என்று எதிர்பார்க்கப்பட்டதை போன்று பொதுஜன பெரமுனவின் உறுப்பினர்களில் பலரும் கூட எதிர்த்தரப்புக்கு செல்லக்கூடும் என்ற நிலை இருந்தது.

ஆனால், தற்போது உயர்நீதிமன்றம் வழங்கியிருக்கும் தீர்ப்பை அடுத்து கட்சித்தாவலுக்கு எந்த பாராளுமன்ற உறுப்பினரும் துணிச்சல் கொள்ளமாட்டார்கள் என்று நம்பலாம்.

நசீர் அஹமட்டுக்கு எதிரான தீர்ப்பு குறித்து இலங்கையின் முக்கியமான சிவில் சமூக தலைவர் ஒருவருடன் பேசியபோது அவர் மிகவும் சுவாரஸ்யமான கருத்தைக் கூறினார்.

ஒரேயொரு பாராளுமன்ற உறுப்பினரைக் கொண்டிருக்கும் ஐக்கிய தேசிய கட்சியின் தலைவர் ஜனாதிபதி விக்கிரமசிங்கவை தவிர, ஏனைய கட்சிகளின் தலைவர்களுக்கு குறிப்பாக சஜித் பிரேமதாசவுக்கு உயர்நீதிமன்றத்தின் தீர்ப்பு பெரிய ஆறுதலைக் கொடுத்திருக்கும். தனது கட்சியின் உறுப்பினர்கள் பாராளுமன்ற உறுப்புரிமையை இழக்கவேண்டிவரும் என்ற பயத்தில் அரசாங்கப் பக்கம் செல்வதில் ஆர்வம் காட்டமாட்டார்கள் என்று அவருக்கு நம்பிக்கை வந்திருக்கும். பொதுஜன பெரமுனவின் தலைவர்களுக்கும் எதிரணிப்பக்கம் செல்வதில் ஏற்கெனவே ஆர்வம் காட்டிய தங்களது உறுப்பினர்கள் அவ்வாறு செய்து பாராளுமன்றத்தில் அரசாங்கத்தின் பெரும்பான்மைப் பலம் குறைவதற்கு தற்போதைக்கு வாய்ப்பு இல்லை என்ற நம்பிக்கை வந்திருக்கும் என்று அவர் கூறினார்.

இது இவ்வாறிக்க, இன்னும் இரு வாரங்களில் ஜனாதிபதி விக்கிரமசிங்க பாராளுமன்றத்தில் சமர்ப்பிக்கவிருக்கும் 2024 பட்ஜெட் மீதான வாக்கெடுப்பில் உயர்நீதிமன்றத்தின் தீர்ப்பு தாக்கத்தைச் செலுத்தக்கூடிய சாத்தியம் இருக்கிறது.

எதிர்க்கட்சியை சேர்ந்த எந்தவொரு உறுப்பினரும் பாராளுமன்றத்தில் எதிர்க்கட்சி பிரதம கொறடாவின் கட்டுப்பாட்டை மீறிச் செயற்படுவதற்கு முன்னரைப் போன்று துணிச்சல் கொள்ளமாட்டார்கள். அதேபோன்றே அழகப்பெரும அணியும் அநுரா பிரியதர்ஷன யாப்பா அணியும் பட்ஜெட் வாக்கெடுப்பில் அரசாங்கத்துக்கு எதிராக செயற்படுவதில் பிரச்சினை இருக்கிறது. இவை அடுத்துவரும் வாரங்களில் முக்கியமாக அவதானிக்க வேண்டிய விடயங்கள்.

### கட்சித்தாவலை ஊக்குவித்த காரணிகள்

ஒரு கட்சியின் சார்பாக மக்கள் பிரதிநிதிகளாக தெரிவானவர்கள் கட்சி மாறினால் பதவிகளை இழப்பர் என்பது இலங்கை அரசியலமைப்பில் உள்ள ஏற்பாடாகும்.

ஆனால், 1979 ஆம் ஆண்டு மூத்த அரசியல்வாதியும் தமிழர் விடுதலை கூட்டணியின் மட்டக்களப்பு மாவட்ட பாராளுமன்ற உறுப்பினருமான செல்லையா இராஜதுரை கட்சி மாறி அரசாங்கத்தில் இணைந்து கொள்வதற்கு வசதியாக அன்றைய ஜெயவர்தன அரசாங்கம் அரசியலமைப்புக்கு ஒரு திருத்தத்தைக் கொண்டுவந்தது. 1978 அரசியலமைப்புக்கு கொண்டுவரப்பட்ட இந்த இரண்டாவது திருத்தம் “இராஜதுரை திருத்தம்” என்றே அரசியல் அரங்கில் சுவாரஸ்யமாக அழைக்கப்பட்டது.

இந்த திருத்தம் எதிரணியில் இருந்து அரசாங்கப் பக்கத்துக்கு பாராளுமன்ற உறுப்பினர்கள் செல்வதற்கு வசதியான “ஒரு வழிப்பாதையாக” மாத்திரமே இருந்தது. கட்சி மாறும் ஒரு உறுப்பினருக்கு பாராளுமன்றத்தில் ஒரு குறிப்பிட்ட எண்ணிக்க உறுப்பினர்களின் ஆதரவு இருந்தால் அவர் உறுப்புரிமையை இழக்கவேண்டிய ஆபத்தில் இருந்து தப்பித்துக்கொள்ளலாம்.

அன்றைய பாராளுமன்றத்தில் ஜெயவர்த்தனவின் அரசாங்கத்துக்கு ஆறில் ஐந்து பெரும்பான்மை பலம் இருந்ததால் அரசாங்க உறுப்பினர்களின் ஆதரவுடன் எதிரணியின் உறுப்பினர் ஒருவர் கட்சிமாறி அரசாங்கத்துக்கு வரக்கூடியதாக இருந்தது. அவரை ஆதரிக்கத் தேவையான உறுப்பினர்களின் எண்ணிக்கை எதிரணிக்கு பாராளுமன்றத்தில் இருந்த உறுப்பினர்களின் எண்ணிக்கையை விடவும் கூடுதலானதாகவே நிர்ணயிக்கப்பட்டது.

அப்போது பிரதான எதிர்க்கட்சியான தமிழர் விடுதலை கூட்டணிக்கு 18 பாராளுமன்ற உறுப்பினர்களும் சிறிலங்கா சுதந்திர கட்சிக்கு 8 உறுப்பினர்களும் இருந்தனர்.

பாராளுமன்ற உறுப்பினர் ஒருவர் தனது கட்சியில் இருந்து நீக்கப்பட்டால் ஒரு மாதகாலத்தில் அவர் பாராளுமன்ற உறுப்புரிமயை இழப்பார். ஆனால் தன்னை நீக்கிய கட்சியின் முடிவுக்கு எதிராக அவர் உயர்நீதிமன்றத்தை நாட முடியும். (14ஆம் பக்கம் பார்க்க)

# சம்பந்தனை பதவி விலகுமாறு கோருவதும் தமிழரசின் தலைமையை இலக்கு வைப்பதும்!

**பனங்காட்டான்**

தமிழரின் அரசியல் பிரச்சனைக்குத் தீர்வு வருகிறதோ இல்லையோ, வாரா வாரம் ஏதோ ஒரு புதிய பிரச்சனை வந்து விடும்.

கடந்த சில வாரங்களாக நீதிபதி சரவணராஜா விவகாரம் சூடு பிடித்திருந்தது. 'காணாமல்போன' ஒருவராகியுள்ள சரவணராஜா எந்த நாட்டில் என்று எவருக்கும் தெரிந்ததாக இல்லை. இனி இவர் விடயம் கொஞ்சம் கொஞ்சமாக மறந்துவிடக்கூடும்.

இந்தியப் பிரதமர் மோடியைச் சந்திக்க சி.வி.விக்னேஸ்வரன் தலைமையில் ஆயத்தமான குழு, அதற்கான கடிதத்தில் ஒப்பமிடும் விடயத்தில் இழுபறியில் நிற்கிறது. இனியென்ன நடைபெறும்? தமிழரசின் சம்பந்தனையே அழைக்காத மோடி புதிய கோஷ்டியை அழைப்பாரா?

மட்டக்களப்பு மேய்ச்சல் தரை விவகாரத்தில் 'எல்லாம் நானே' என்ற பாணியில் ருத்ரதாண்டவம் ஆடுகிறார் மங்களராமய அம்பிட்டிய சுமணதேரர். தமிழரைத் துண்டுதுண்டாக வெட்டிவிட்டு தமது தாயின் கல்லறைமேல் தாமும் உயிரைத் துறப்பேன் என்று சாவலும் விடுகிறார் இவர்.

1956ல் வெலிமட எம்.பி.யாகவிருந்த கே.எம்.பி. ராஜரட்ண தமிழரின் தோலில் செருப்புச் செய்து காலில் அணிவேன் என்று நாடாளுமன்றத்தில் அறைகூவிய பாதையில் ஒரு படி மேலே சுமணதேரர். அன்றைய பிரதமர் எஸ்.டபிள்யு. ஆர்.டி.பண்டாரநாயக்க ராஜரட்ண எம்.பி. மீது சட்ட நடவடிக்கை எடுக்க முன்வரவில்லை. சுமணதேரர் மீதும் ரணில் அரசு சட்ட நடவடிக்கை எடுக்காது. இதுதான் எழுபத்தைந்து ஆண்டுகளாக நடைபெறும் சிறீலங்காவின் சிங்கள பௌத்த மேலாதிக்க ஜனநாயகம்.

கடந்த சில நாட்களாக தமிழர் அரசியலில் முக்கிய பேசுபொருளாக மட்டுமன்றி, பல்வேறு சந்தேகங்களை உருவாக்கியிருப்பது சுமந்திரன் எம்.பி. தமிழரசின் மூத்த தலைவரும் பழுத்த அரசியல்வாதியுமான இரா.சம்பந்தன் மீது வீசியிருக்கும் பாணம்.

சம்பந்தனுக்கு இது போதாது, இன்னமும் வேண்டுமென்று கூறுகின்றனர் சிலர். வேலியில் நின்ற ஓணானைத் தூக்கி பொக்கற்றுக்குள் போட்டால் அது கடிக்கத்தானே செய்யும் என்கின்றனர் வேறு சிலர். இறக்குமதிகள் இப்படித்தான் கோலம் காட்டும் என்கின்றனர் அனுபவப்பட்ட கட்சியின் மூத்தவர்கள் சிலர்.

விடுதலைப் புலிகளின் ஆயுதங்கள் மௌனிக்கப்பட்ட பின்னர், 2010ஆம் ஆண்டில் தமிழரசுக் கட்சியின் தேசியப் பட்டியல் எம்.பி.யாக சுமந்திரனை கொழும்பிலிருந்து இறக்கி உள்ளே கொண்டு வந்தவர் சம்பந்தன்தான். சம்பந்தனின் இரு கரங்களாகவும் ஆலோசகராகவும் உரையாளராகவும் - எல்லாமாகவே தம்மைப் படம் காட்டியவர் சுமந்திரன். கூடாரத்துக்குள் ஒட்டகம் ஒன்று நுழைக்கப்படுகிறது என்று சில ஊடகர்கள் அவ்வேளை எழுதியது ஞாபகம் இருக்கிறது.

சம்பந்தன் சொல்லாதவைகளையே அவர் தம்மிடம் சொன்னதாகக் கூறி பல காரியங்களை தம் சொந்த விருப்பப்படி மேற்கொண்டு, அதற்காகவே கட்சியின் பேச்சாளராகி தமிழரை மட்டுமன்றி கூட்டமைப்பையும் பிளவுபடுத்திய சாதனையாளர் சுமந்திரன்.

2015 தேர்தலில் பெருமளவு மேலதிக வாக்குகளால் வெற்றி பெற்றாராயினும் 2020 தேர்தலில் அதில் அரைவாசி குறைந்து போனது. இத்தேர்தலில் வெற்றி கிடைக்காது என்ற அச்சத்தால் கிளிநொச்சி சிவஞானம் சிறீதரனுடன்



இணைந்து தேர்தலைச் சந்தித்தவர் இவர்.

இத்தேர்தல் வாக்கு எண்ணிக்கை நடைபெற்றுக் கொண்டிருக்கையில் கொழும்பு சென்று, அப்போது செல்வாக்கிலிருந்த பசில் ராஜபக்சவை சந்தித்துவிட்டு யாழ்ப்பாணம் திரும்பியதில் இவரது வெற்றிக்குச் சம்பந்தம் உண்டு என்று வெளியான தகவல்களை மறந்து விட முடியாது.

கனடா உட்பட சில மேற்கு நாடுகளுக்கு இவர் விஜயம் செய்தபோது எவ்வாறு கூட்ட மேடைகளிலிருந்து வெளியேற்றப்பட்டார் என்பது தனி வரலாறு. இவ்வாறு சுமந்திரனின் பதின்மூன்று வருட தமிழரசு மற்றும் தமிழ்த் தேசிய கூட்டமைப்பு சார்ந்த அரசியல் வாழ்வு பற்றி சிலாகிக்க விடயங்கள் பலவுண்டு.

தமிழ்த் தேசிய அரசியலில் நுழைக்கப்பட்டதற்கான வேலைகளில் பலவற்றை நிறைவேற்றிய பின்னர், இப்போதுதான் அதன் கருவறைக்குள் புகுந்து 'ஐயா'வை பதம் பார்க்கும் வேலையை ஆரம்பித்துள்ளார். தொலைக்காட்சி ஒன்றுக்கு அளித்த செவ்வியில் சம்பந்தனின் தோளில் ஏறி நின்று காதுகளைத் திருகி தலையைச் சரிக்கும் பாணியில் தனது கைங்கரியத்தை அற்புதமாக அரங்கேற்றியுள்ளார் இவர்.

'சம்பந்தன் முதுமையினால் அரசியல் செயற்பாட்டில் பங்களிப்பு செய்ய முடியாதுள்ளார். 288 நாடாளுமன்ற அமர்வுகளில் 39க்கு மட்டுமே வருகை தந்துள்ளார். அவருக்கு கிடைத்த சம்பளம் 4 மில்லியன் ரூபா. இதனைவிட போக்குவரத்து, எரிபொருள், தொலைபேசி என்று நான்கேகால் லட்சம் ரூபாவுக்கு மேல் வழங்கப்பட்டுள்ளது' என்று குற்றப்பத்திரிகையை ஊடகம் ஒன்றின் வாயிலாக வாசித்துள்ள சுமந்திரன், சம்பந்தனின் எம்.பி.பதவியை இன்னொருவருக்கு வழங்க வேண்டுமென்று ஆலோசனை வழங்கியுள்ளார், அல்லது கோரியுள்ளார்.

சுமந்திரன் குறிப்பிட்ட சில விடயங்கள் உண்மையாக இருக்கலாம். இது தவிர சம்பந்தனின் முதுமை கருதியும் அரசியல் மூப்புக் கருதியும் அவருக்கு கொழும்பில் இலவசமாக தனி வீடும் பணியாட்களும் அரசினால் வழங்கப்பட்டுள்ளது. இதற்கு தார்மீக நியாயம் உண்டு.

ஆனால் சுமந்திரன் கட்சிக்குள் பேசித் தீர்க்க வேண்டிய விடயத்தை கட்சியின் பேச்சாளர் என்பதாலோ என்னவோ பொதுவெளியில் பேசித் தள்ளியுள்ளார். முக்கியமாக, சிங்கள ஊடகம் ஒன்றின் செவ்வியில் இதனைத் தெரிவித்ததன் வழியாக சிங்கள மக்களை, இனவாத அரசியல்வாதிகளை சம்பந்தனுக்கு எதிராக திருப்பி விடும் நோக்கம் சுமந்திரனுக்கு இருக்கலாமோ எனவும் எண்ணத் தோன்றுகிறது.

"

தமிழரசுக் கட்சித் தலைவர் போட்டியில் சிவஞானம் சிறீதரனை தோற்கடிக்க வேண்டுமென்றால் யாழ்ப்பாணம் கிளிநொச்சி தவிர்ந்த மற்றைய நான்கு மாவட்டங்களிலும் தாமே அதிக வாக்கெடுக்க வேண்டுமென்பது சுமந்திரனுக்குத் தெரியும். சாணக்கியன், கலையரசன், சத்தியலிங்கம் ஆகியோருடன் குகதாசனின் ஆதரவை பெறவேண்டுமென்றால் அவரை திருமலையில் எம்.பி.யாக்க வேண்டும். அதற்காக சம்பந்தனைப் பலிக்கடாவாக்குவது அவரால் அரசியலுக்கு அழைத்து வரப்பட்ட சுமந்திரனின் மூல இலக்கு.

திருமலையின் பிரதிநிதியாக பிறிதொருவரை தமிழரசுக் கட்சி நியமித்தால் அவர் கரிசனையாக செயற்படுவாரென்று தெரிவித்துள்ள சுமந்திரன், இது தொடர்பாக எதிர்காலத்தில் நடவடிக்கைகள் எடுக்கப்படுமென்று முன்னறிவித்தலும் கொடுத்துள்ளார். அதாவது, பதவி விலக மறுத்தால் அவர் பதவி நீக்கப்படுவாரென்பது இக்கூற்றின் உள்ளர்த்தமாகத் தெரிகிறது. இப்படித்தான் பல கேள்விகளும் எழுகின்றன.

2018இல் கனடாவிலிருந்து இறக்குமதி செய்யப்பட்ட சண்முகம் குகதாசனை எவ்வாறாவது திருமலை எம்.பி.யாக்க வேண்டுமென்பது சுமந்திரனின் உட்கிடக்கை. குகதாசன் என்பவர் கனடாவில் தமிழர்களால் நடத்தப்பட்ட கல்வி நிலையம் ஒன்றின் தமிழாசிரியராக இருந்தவர். கனடிய அரசில் பணியாற்றியவர் அல்ல. கனடிய தமிழ்த் தேசிய கூட்டமைப்பு மற்றும் தமிழரசுக் கிளைகளின் முக்கியஸ்தராக இருந்தபோது அதன் தேர்தல் பணிகளுக்காக பெருமளவு நிதி சேகரித்துக் கொடுத்ததாக இவரே பகிரங்கப்படுத்தியுள்ளார். மற்றப்படி கனடிய தமிழர் மத்தியில் செல்வாக்குப் பெற்றவராக இவர் இருந்தவரல்லர்.

குகதாசன் திருமலையை பூர்வீகமாகக் கொண்டவர் என்பதாலும், கட்சிக்கு நிதி சேகரித்து வழங்கியவர் என்பதாலும் சம்பந்தன் இவரில் நம்பிக்கை வைத்து அழைத்து தமது தொகுதிப் பணிகளில் சிலவற்றை ஒப்படைத்தார். ஆனால், குகதாசன் திருமலை மக்கள் மத்தியில் தம்மை செல்லாக்காசாக்க எடுத்த முயற்சிகள் தெரிய வந்ததால், அவரை சம்பந்தன் ஓரங்கட்ட நேர்ந்தது என்கிறார்கள் திருமலையின் கட்சிப் பிரமுகர்கள்.

மறுபுறத்தில், விரைவில் நடைபெறுமென எதிர்பார்க்கப்படும் தமிழரசுக் கட்சி தலைவருக்கான போட்டியில் சிவஞானம் சிறீதரனும் சுமந்திரனும் போட்டியிடுவது உறுதியாகியுள்ளது. யாழ்ப்பாணம், கிளிநொச்சி தேர்தல் மாவட்டங்களில் சிறீதரன் பெருமளவு செல்வாக்கு உள்ளவராக உள்ளார். இதனால் மற்றைய நான்கு தமிழ் மாவட்டங்களிலும் தமக்கான ஆதரவை பெருமளவுக்கு ஏற்படுத்த வேண்டிய தேவை சுமந்திரனுக்கு உண்டு.

இதனால், மட்டக்களப்பு, அம்பாறை, வன்னி தேர்தல் மாவட்டங்களில் முறையே சாணக்கியன் எம்.பி., கலையரசன் எம்.பி., வடமாகாண சபை முன்னாள் அமைச்சர் சத்தியலிங்கம் ஆகியோர் சுமந்திரன் அணியினராக அடையாளம் காணப்பட்டுள்ளனர். கலையரசன் தேசிய பட்டியல் எம்.பி.யாக நியமனமாகும் விடயத்தில் சுமந்திரனின் வகிபாகம் எவ்வாறு இருந்தது என்பது பகிரங்க ரகசியம்.

திருமலையில் சம்பந்தனை இறக்கிவிட்டு அந்த இடத்துக்கு குகதாசனை எம்.பி.யாக்கினால் தமிழரசுக் கட்சியின் தலைமைப் பதவியை இலகுவாக வென்றுவிடலாமென்ற கணக்கில் சுமந்திரன் காய்களை நகர்த்துகிறார். இதன் முக்கிய செயற்பாடே சம்பந்தனை முதுமையைக் காட்டி பதவி இறக்க வைக்கும் முயற்சி.

எழுபது ஆண்டுகளுக்கு மேலாக தமிழரசு அரசியலில் ஊறிப்போன சம்பந்தனுக்கு ஓர் ஆசையுண்டு. அது கட்சியின் உத்தியோகப்பற்றற்ற ஆயுட்காலத் தலைவராக இருப்பது. பேசமுடியாத நிலையிலும் தி.மு.க. தலைவராக மு.கருணாநிதி, அகில இலங்கை சோனகர் சங்கத்தின் ஆயுட்காலத் தலைவராக 90 வயதிலும் இருந்த சேர்.றசீக் பரீத் போன்றவர்களுக்கிருந்த ஆசை இவருக்கும் உண்டு. 21 பீரங்கிக் குண்டுகளின் மரியாதையை பெற வேண்டுமென்ற ஆசை.

ஆனால், சூழ்ச்சி இல்லாமல் அரசியலில் பதவி இல்லையென்பதை சம்பந்தன் ஏனோ மறந்துவிட்டார்.

தமிழரசுக் கட்சித் தலைவர் போட்டியில் சிவஞானம் சிறீதரனை தோற்கடிக்க வேண்டுமென்றால் யாழ்ப்பாணம் கிளிநொச்சி தவிர்ந்த மற்றைய நான்கு மாவட்டங்களிலும் தாமே அதிக வாக்கெடுக்க வேண்டுமென்பது சுமந்திரனுக்குத் தெரியும். சாணக்கியன், கலையரசன், சத்தியலிங்கம் ஆகியோருடன் குகதாசனின் ஆதரவை பெறவேண்டுமென்றால் அவரை திருமலையில் எம்.பி.யாக்க வேண்டும். அதற்காக சம்பந்தனைப் பலிக்கடாவாக்குவது அவரால் அரசியலுக்கு அழைத்து வரப்பட்ட சுமந்திரனின் மூலஇலக்கு.

சுமாவின் குடுமி சும்மா ஆடாது!

•

# மேய்ச்சல் தரை ஆக்கிரமிப்பின் பின்னணியில் இரகசியத் திட்டம்!

அகிலன்

மயிலத்தமடு, மாதவனை பிரச்சினை இன்று நாடு முழுவதும் பேசப்படும் ஒரு பிரச்சினையாகியிருக்கின்றது. அரசாங்கத்தைப் பொறுத்தவரையிலும் இதற்கு ஏதோ ஒரு தீர்வைக் கொடுக்க வேண்டும் என்ற நிர்ப்பந்தம் ஏற்பட்டிருக்கின்றது. அதேவேளையில் சிங்களத் தரப்பினரைப் பகைத்துக்கொள்ளக் கூடாது என்பதிலும் அரசாங்கம் கவனமாகவுள்ளது. மேய்ச்சல் தரை ஆக்கிரமிப்புக்கு வழிவகுத்த முன்னாள் கிழக்கு மாகாண ஆளுநர் அநுராதா யஹம்பத் இப்போதும் தீவிரமாகச் செயற்பட்டுக் கொண்டுதான் இருக்கின்றார். பிக்குகள் மற்றும் சிங்களத் தரப்பினரின் பின்னணியில் அவர் செயற்படுகின்றார்.

அதனால்தான் ஜனாதிபதியின் உத்தரவுகள் எதுவும் நடைமுறைப்படுத்த முடியாதவையாக உள்ளன. தமிழ்ப் பண்ணையாளர்களின் பிரச்சினைக்கு தீர்வு காணும் வகையில் அங்கிருந்து வெளிமாவட்டத்தவர்கள் அகற்றப்பட வேண்டும் என்ற அறிவித்தலை ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க வெளியிட்டிருந்தார். ஜனாதிபதியின் அறிவித்தல்கள் போராட்டங்களின் அனலைத் தணிப்பதற்கான உபாயங்களாக இருப்பது வழமைதான். இப்போதும் அவ்வாறுதான் நடைபெற்றிருக்கின்றது.

மயிலத்தமடு, மாதவனை பகுதியில் முன்னாள் கிழக்கு ஆளுநர் அநுராதாவின் பங்களிப்புடன் புதிய புத்தர் சிலை ஒன்று சர்ச்சைக்குரிய அம்பிட்டிய சுமனரட்ன தேரரர் தலைமையிலான குழுவினரால் வைக்கப்பட்டது. அதாவது ஜனாதிபதியின் அறிவித்தல் வெளியான மறுநாள் அந்தச் சிலை வைக்கப்பட்டது. ஆக்கிரமிப்பை தாம் கைவிடப்போவதில்லை என்பதற்கான சிங்களத் தரப்பினரின் ஒரு பதிலாகவே இதனைக் கருத வேண்டும்.

முன்னாள் கிழக்கு ஆளுநர்தான் மேய்ச்சல் தரையில் சிங்கள ஆக்கிரமிப்புக்கு பலமாக இருந்தவர். அதனைப் பலப்படுத்தியவரும் அவர்தான். கோட்டாபய ராஜபக்ஷ தான் அதிகாரத்தைக் கைப்பற்றுவதற்காக உருவாக்கிய 'வியத்மக' என்ற அமைப்பின் முக்கிய உறுப்பினர்களில் ஒருவராக இருந்தவர் அவர். கிழக்கை சிங்கள மயமாக்குவது என்ற இலக்குடன்தான் மாகாண ஆளுநராக, கோட்டாபயவினால் அவர் நியமிக்கப்பட்டார். இப்போது அவர் அந்தப் பதவியில் இல்லாவிட்டாலும், மேய்சல்தரைப் பிரச்சினையில் சிங்களவர்களை வழிநடத்துபவர்களில் ஒருவராக அவர் இருக்கின்றார்.

மேய்ச்சல் தரைகளிலிருந்து விரட்டப்பட்ட தமிழ்ப் பண்ணையாளர்களுக்கு நீதி கிடைக்கவும் அவர்களின் பூர்வீக மேய்ச்சல் தரைகள் மீளவும் அவர்களிடமே ஒப்படைக்கப்படவும் கோரி நடத்தப்படும் கவனயீர்ப்புப் போராட்டம் நாற்பதாவது நாளை நோக்கிச் சென்று கொண்டிருக்கின்றது. பெரும்பாலும் பாதிக்கப்பட்ட பண்ணையாளர்களே இந்தப் போராட்டத்தை நடத்திக் கொண்டிருக்கின்றார்கள்.



இந்தப் பிரச்சினைக்கு உடனடியாகத் தீர்வைக் கொடுப்பதற்கான அறிகுறிகள் எதுவும் காணப்படவில்லை என்பதுடன், புத்தர் சிலை வைக்கப்பட்ட விவகாரம் இந்த ஆக்கிரமிப்பு தொடரும் என்பதற் கான அறிவித்தலாகவே இருக்கின்றது. புத்தர் சிலை பொலிஸாரால் அகற்றப்பட்டதாகச் சொல்லப்பட்டாலும் கூட, குழப்பத்தை ஏற்படுத்தும் வகையில் அதனைக் கொண்டுவந்து வைத்தவர்கள் மீது எந்த நடவடிக்கையும் எடுக்கப்படவில்லை. அதனால், அவர்கள் தமது அடுத்த கட்ட நகர்வை முன்னெடுப்பார்கள் என எதிர்பார்க்கலாம்.

**பண்ணையாளர்கள் வீதிக்கு வந்திருப்பதாலும், சிங்களவர்களின் ஆக்கிரமிப்பாலும் நெற்செய்கையில் ஈடுபட முடியாத நிலையும் தமிழ்ப் பண்ணையாளருக்கு ஏற்பட்டுள்ளது. மட்டக்களப்பு மாவட்டம் பால் உற்பத்தியில் மட்டுமன்றி, நெற்செய்கையிலும் பிரதான இடத்தை வகிக்கின்றது. இப்போது இவை இரண்டுமே பாதிக்கப்பட்டும் அபாயம் உருவாகியுள்ளது.**

தமிழ்ப் பண்ணையாளர்களைப் பொறுத்தவரையில் இது அவர்களுடைய வாழ்வாதரப் பிரச்சினை, அவர்களுடைய இருப்பை கேள்விக்குள்ளாக்கும் பிரச்சனை. அதனால் இறுதிவரையில் போராடுவது என்ற உறுதியுடன் அவர்கள் உள்ளார்கள்.

தமிழ்ப் பாராளுமன்ற உறுப்பினர்கள் இந்தப் பிரச்சினையை கடந்த வாரம் பாராளுமன்றத்தில் கிளப்பியிருந்தார்கள். உரிய அமைச்சர்களிடமிருந்து ஆக்கபூர்வமான பதில் கிடைக்கவில்லை. ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க கடந்த வாரம் மட்டக்களப்புக்கு விஜயம் செய்த போதும், இந்தப் பிரச்சினை கிளப்பப்பட்டது. ஆர்ப்பாட்டங்கள் நடத்தப்பட்டன. அழுத்தங்கள் அதிகமாக இருந்தமையால் தமிழ்ப் பண்ணையாளர்களின் பிரதிநிதிகளுடன் ஜனாதிபதி பேச்சுவார்த்தை நடத்தினார். அந்தப் பேச்சுக்களின் போதும் தீர்வு எதுவும் முன்வைக்கப்படவில்லை. ஜனாதிபதி தன்னுடைய வழமையான பாணியில் நழுவிச்சென்றார்.

அதன்பின்னர் கொழும்பில் நடைபெற்ற ஆலோசனைக் கூட்டம் ஒன்றின் போதே வெளிமாவட்டத்தவர்களை வெளியேற்றும் உத்தரவு ஜனாதிபதியால் பிறப்பிக்கப்பட்டது. மேய்ச்சல் தரைகளில் அத்துமீறி குடியிருப்போரை நீதிமன்ற அனுமதியை பெற்று உடனடியாக வெளியேற்றுமாறு காவல்துறைக்கும் மகாவலி அதிகார சபைக்கும் ஜனாதிபதி உத்தரவிட்ட நிலையிலேயே புத்தர் சிலை கொண்டுவரப்பட்டு வைக்கப்பட்டது.

புத்தர் சிலை வைக்கப்பட்ட விவகாரம் பண்ணையாளர்கள் மத்தியில் கடும் சீற்றத்தையும், விரக்தியையும் ஏற்படுத்தியிருக்கின்றது. மேய்ச்சல் தரை பிரச்சினை தொடர்பில் ஜனாதிபதி ஒரு தீர்மானத்தினை எடுத்துள்ள நிலையில், வேறு ஒரு தரப்பினர் அப்பகுதியில் புத்தர் சிலைகளை வைத்து மேய்ச்சல் தரையை அபகரிப்பு செய்வதற்கான முயற்சிகளை முன்னெடுத்துள்ளதாக கால்நடை பண்ணையாளர்கள் தெரிவித்தனர்.

மயிலத்தமடு, மாதவனை பகுதியில் கால்நடைகள் மீது துப்பாக்கிசூடும் நடத்தப்பட்டிருக்கின்றது. இதனால், அப்பகுதிக்கு சென்றால் தமக்கும் பாதுகாப்பு இல்லாத நிலைமையே ஏற்படுத்தப்பட்டுள்ளதாகவும் பண்ணையாளர்கள் சுட்டிக்காட்டுகின்றார்கள். ஜனாதிபதி வழங்கிய உறுதிமொழியை நிறைவேற்ற வேண்டும். அதன் பின்னரே நாங்கள் மேய்ச்சல் தரைக்கு கால்நடைகளை கொண்டுசெல்வோம் எனவும் தெரிவித்துள்ள பண்ணையாளர்கள், மேய்ச்சல் தரை இல்லையென்றால் 3,000குடும்பங்களின் வாழ்வாதாரமும் இல்லாமல் போய்விடும் என்றும் சுட்டிக்காட்டினார்கள்.

"சிங்களவர்களால் ஆக்கிரமிக்கப்பட்டுள்ள மேய்ச்சல் தரையில் விதைப்பு நடவடிக்கைகளும், புத்தர் சிலையை வைக்கும் நடவடிக்கைகளும், சிங்களக் குடியேற்ற நடவடிக்கைகளுமே இன்று முன்னெடுக்கப்படுகின்றன. அங்கு எமக்கான நடவடிக்கைகள் முன்னெடுக்கப்பட்டதான தகவல்கள் இல்லை" எனவும் பண்ணையாளர்கள் தெரிவிக்கின்றார்கள்.

இந்தப் பிரச்சினை வெறுமனே மயிலத்தமடு பண்ணையாளர்களின் பிரச்சினை மட்டுமல்ல. அரசியல் ரீதியாகப் பார்க்கும்போது இது ஒரு நில ஆக்கிரமிப்பு. குறிப்பாக கிழக்கு மாகாணத்தில் தமிழ் மக்கள் அதிகளவுக்குச் செறிவாக இருக்கும் மட்டக்களப்பின் சனத் தொகை விகிதாசாரத்தை மாற்றியமைப்பதற்கான திட்டத்தின் ஒரு பகுதிதான் இது!

கிழக்கு மாகாணத்தைப் பொறுத்தவரையில் திருமலை, அம்பாறை மாவட்டங்கள் சிங்கள மயமாக்கப்பட்டுவிட்டது. தமிழர்களின் சனத்தொகை விகிதாசாரம் வெகுவாகக்குறைந்துவிட்டது. மட்டக்களப்பு மட்டும்தான் தமிழர்களைப் பெரும்பான்மையாகக் கொண்ட ஒரு பகுதியாக உள்ளது. இதுதான் சிங்களவர்களின் கண்களைக் குத்திக்கொண்டிருக்கும் விவகாரம்.

இதனைவிட, இதற்கு பொருளாதார பரிமாணம் ஒன்றும் உள்ளது. இங்குள்ள பண்ணையாளர்கள் மட்டக்களப்புக்கு மட்டும் பாலையும் பாற் பொருட்களையும் வழங்கவில்லை. முழு இலங்கைக்கும் அவை செல்கின்றன. இதன் மூலமாக அவர்களின் பொருளாதாரம் செழித்துள்ளது. அதனை இல்லாதொழிப்பதும், அவற்றை சிங்களவர்களின் வசமாக்குவதும் மற்றொரு நோக்கம்.

சிங்களவர்கள் இந்தப் பகுதியை ஆக்கிரமித்திருப்பதால் சுமார் மூவாயிரம் தமிழ்ப் பண்ணையாளர்கள் வாழ்வாதாரங்களை இழந்து குடும்பங்களுடன் வீதிக்கு வந்துள்ளார்கள். பொருளாதார நெருக்கடியிலிருந்து நாடு மீளவேண்டுமானால் உள்ளூர் உற்பத்தியை பெருக்க வேண்டும். அதற்கு கணிசமான பங்களிப்பை வழங்கியவர்கள் - வழங்கக் கூடியவர்கள் இவர்கள். இலங்கைக்கே பாலை வாரி வழங்கிய தமிழ் பண்ணையாளர்கள் இன்று நடு வீதிக்கு வந்து போராடிக் கொண்டிருக்கின்றார்கள்.

பண்ணையாளர்கள் வீதிக்கு வந்திருப்பதாலும், சிங்களவர்களின் ஆக்கிரமிப்பாலும் நெற்செய்கையில் ஈடுபட முடியாத நிலையும் தமிழ்ப் பண்ணையாளருக்கு ஏற்பட்டுள்ளது. மட்டக்களப்பு மாவட்டம் பால் உற்பத்தியில் மட்டு மன்றி, நெற்செய்கையிலும் பிரதான இடத்தை வகிக் கின்றது. இப்போது இவை இரண்டுமே பாதிக்கப்பட்டும் அபாயம் உருவாகியுள்ளது. இதனால், மட்டக்களப்பு மாவட்டம் மக்கள் பெரும் நெருக்கடி ஒன்றை அடுத்த வருடத்தில் சந்திக்க வேண்டியிருக்கும். இந்த நெருக்கடி மட்டக்களப்பு மக்களை மட்டுமல்ல முழு இலங்கை மக்களையும்தான் பாதிக்கப்போகின்றது!

(இலக்கு)





## புதிய...

மேலும், அரசியலில் எந்த ஏமாற்றமும் இல்லை எனவும் தாம் சில பிரச்சினைகளை எதிர்கொள்ள வேண்டிய நிலை ஏற்பட்டதாகவும் அவர் சுட்டிக்காட்டியுள்ளார்.

இந்த நிலையில், தமது போராட்டம் கைவிடப்படவில்லை எனவும், தாம் இன்னும் ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சியிலே இருப்பதாகவும் தயாசிறி குறிப்பிட்டார்.

சில கட்சிகள் பேச்சுவார்த்தையில் ஈடுபட்ட போதும் தாம் ஏனைய கட்சிகளில் இணைவதற்கு தயார் இல்லை எனவும், புதிய எதிர்பார்ப்புகளை ஏற்படுத்திக்கொள்ள வேண்டும் எனவும் பாராளுமன்ற உறுப்பினர் தயாசிறி ஜயசேகர கூறினார். (அ)

## பட்ஜெட்டுக்கு...

பெரமுனவுக்கு தொடர்ந்து அநீதிகள் நடந்தால், வரவு - செலவுத் திட்டத்திலோ அல்லது நெருக்கடியான கால கட்டத்திலோ உரிய பதிலடி கொடுப்போம் என பொதுஜன பெரமுனவின் பாராளுமன்ற உறுப்பினர்கள் பலர் கடந்த காலங்களில் தெரிவித்திருந்தனர்.

இதனை அடுத்தே அவர்களுக்கு அமைச்சுப் பதவிகளை வழங்கி பட்ஜெட்டுக்கான ஆதரவை பெற ஜனாதிபதி ரணில் திட்டமிட்டுள்ளார் என கூறப்படுகின்றது. (அ)

## முள்ளிவாய்க்கால்...

கோரியுள்ளது.

முள்ளிவாய்க்கால் நினைவுத்தூபி அமைக்கப்பட்டமை தொடர்பில் ஆணைக்குழுவுக்குக் கிடைத்த முறைப்பாடுகளை அடுத்து ஆரம்பிக்கப்பட்டுள்ள விசாரணையின் ஓர் அங்கமாகவே இலஞ்ச ஊழல் ஆணைக்குழுவினால் விளக்கம் கோரப்பட்டுள்ளது.

தூபி அமைக்கப்பட்டமை தொடர்பில் விளக்கமளிக்க பல்கலைக்கழகத்தில் பொறுப்பு வாய்ந்த அதிகாரி ஒருவரை எதிர்வரும் நவம்பர் 7 ஆம் திகதி நேரில் சமூகமளிக்குமாறு பல்கலைக்கழகப் பதிவாளருக்கு எழுத்து மூலம் அறிவிக்கப்பட்டுள்ளது.

யாழ்.பல்கலைக்கழகத்தில் முள்ளிவாய்க்கால் நினைவுத் தூபி அமைப்பதற்காகப் பொது நிதி பயன்படுத்தப்பட்டுள்ளது என்றும், அரச பல்கலைக்கழக வளாகத்தில் அனுமதி பெறப்படாமல் தூபி அமைக்கப்பட்டுள்ளது என்றும் கிடைத்த முறைப்பாடுகளை அடுத்து இலஞ்சம் மற்றும் ஊழல்கள் பற்றிய சாற்றுதல்களைப் புலனாய்வு செய்வதற்கான ஆணைக்குழு விசாரணைகளை ஆரம்பித்துள்ளது.

முதற்கட்டமாகத் தூபி அமைக்கப்பட்டமை தொடர்பில் பல்கலைக்கழக மானியங்கள் ஆணைக்குழுவின் தலைவர் கடந்த 19 ஆம் திகதி விசாரணைக்கு அழைக்கப்பட்டிருந்தார்.

அதன் தொடர்ச்சியாக விடயம்சார் அறிவுடைய பொறுப்பு வாய்ந்த அதிகாரியொருவரின் வாக்குமூலமொன்றை பதிவுசெய்துகொள்ள வேண்டிய தேவையேற்பட்டுள்ளதால், கோரப்படும் ஆவணங்களுடன் எதிர்வரும் நவம்பர் 7 ஆம் திகதி காலை அதிகாரி ஒருவரை அனுப்பி வைக்குமாறு ஆணைக்குழுவினால் பதிவாளருக்கு அறிவுறுத்தப்பட்டுள்ளது.

யாழ்ப்பாணப் பல்கலைக்கழகத்தில் முள்ளிவாய்க்கால் நினைவுச் சின்னத்தை நிர்மாணிக்க வேண்டியதன் அவசியத் தன்மை தொடர்பிலான அறிக்கையொன்று, பல்கலைக்கழக வளாகத்தில் நினைவுச் சின்னமொன்றை தாபிக்கும் போது பின்பற்றப்படவேண்டிய நடைமுறைகள் தொடர்பிலான அறிக்கையொன்று, நினைவுத் தூபியை நிர்மாணித்தற்குரியதான கொள்முதல் கோப்பு மற்றும் அதன் சான்றுப்படுத்தப்பட்ட பிரதி மற்றும் நினைவுத் தூபியின் தற்போதைய நிலைமை தொடர்பிலான அறிக்கையொன்று போன்ற விடயங்களைச் சமர்ப்பிக்குமாறும் கோரப்பட்டுள்ளது. (அ)

## அமைச்சரவை

அமைச்சுகளை கொடுத்துள்ளமைக்கான கண்டனத்தையும் வெளிப்படுத்தியுள்ளார்.

பொதுஜன பெரமுனவின் கருத்தைக் கேட்காமல் ஜனாதிபதி அமைச்சரவை மாற்றத்தை மேற்கொண்டுள்ளமைக்கு கடந்த சில நாட்களாக தொடர் ஊடக சந்திப்புகளை நடத்தும் பொதுஜன பெரமுனவின் உறுப்பினர்கள் ஜனாதிபதியை எதிர்க்கும் வகையில் பல்வேறு கருத்துகளையும் வெளிப்படுத்தி வருகின்றனர்.

இந்த செயல்பாட்டுக்கு ஜனாதிபதி, பஸில் ராஜபக்ஷவிடம் அதிருப்தியை வெளிப்படுத்தியுள்ளதாகவும் பொதுஜன பெரமுனவின் வட்டாரங்களில் அறிய முடிகிறது.

இதேவேளை, பொதுஜன பெரமுனவுடன் கலந்துரையாடல்கள் எதனையும் நடத்தாது ஜனாதிபதி அமைச்சரவையில் மறுசீரமைப்பை மேற்கொண்டுள்ளமைக்கு அக்கட்சியின் பொது செயலாளர் சாகர காரியவசம் கண்டனத்தை வெளிப்படுத்தியுள்ளமையும் சுட்டிக்காட்டத்தக்கது. (அ)

## கட்சியின்...

பதவிகளை வழங்குவது ஏற்புடையதல்ல எனவும் அக்கட்சியின் தேசிய அமைப்பாளரும் முன்னாள் அமைச்சருமான பஸில் ராஜபக்ஷ தெரிவித்துள்ளார்.

அக்கட்சியின் பாராளுமன்ற உறுப்பினர்கள் உள்ளிட்ட முக்கியஸ்தர்கள் குழுவுடன் இடம்பெற்ற கலந்துரையாடலின் போதே அவர் மேற்கண்டவாறு வலியுறுத்தினார்.

இருபுறமும் கால்களை வைத்திருப்பவர்கள் மீது கடும் நடவடிக்கை எடுக்கப்படும் எனவும் அவர் எச்சரிக்கை விடுத்தார்.

கட்சிக்கு எதிரான நிலைப்பாட்டை கொண்டுள்ளவர்களை பாராளுமன்றத்தில் இருந்து வெளியேற்றும் வேலைத் திட்டத்தை நடைமுறைப்படுத்த வேண்டும் என பொதுஜன பெரமுனவின் முக்கிய உறுப்பினர்கள் பஸில் ராஜபக்ஷவிடம் விடுத்த கோரிக்கைக்கு பதிலளிக்கும்போதே அவர் இவ்வாறு எச்சரிக்கை விடுத்துள்ளார். (அ)

## வலி.வடக்கில்...

அடையாளப்படுத்தி, எல்லைப்படுத்தும் நடவடிக்கைகளில் ஈடுபட்டுள்ளனர்.

இந்த நிலையில் கடந்த வியாழக்கிழமை பெற்றோலிய கூட்டுத்தாபன அதிகாரிகள் என தம்மை அடையாளப் படுத்திக் கொண்ட சிலர் அப்பகுதிக்கு வந்து, இந்தக் காணிகள் பெற்றோலிய கூட்டுத்தாபனத்துக்கு உரியது. நாம் கடந்த 40 வருட காலத்துக்கு முன்பே காணி, உரிமையாளர்களிடம் இருந்து காணிகளைக் கொள்வனவு செய்து விட்டோம்" எனத் தெரிவித்தனர்.

காணியை நாம் யாருக்கும் விற்க வில்லை. இது எங்களின் காணிகள். பெற்றோலியக் கூட்டுத்தாபனத்துக்கு சொந்தமான காணி எமது காணிகளில் இருந்து சற்றுத் தொலைவில் உள்ள காணிகளே என காணி உரிமையாளர்கள் பதிலுக்குத் தெரிவித்தனர்.

அதனை ஏற்கமறுத்த அதிகாரிகள், "இந்த காணிகளையும் தமது நிறுவனம் கொள்வனவு செய்து விட்டதாகத் தெரிவித்ததுடன், இது உங்கள் காணி தான் என்பதற்கு எங்களுக்கு உறுதியை காண்பித்து உறுதிப்படுத்துங்கள்" எனக் கூறினர்.

"அதற்கு காணி உரிமையாளர்கள் நாங்கள் எதற்கு உங்களுக்கு உறுதி காட்ட வேண்டும்?

உங்களின் உறுதிகளை பரிசீலித்து உங்கள் காணி எங்கே இருக்கிறது என்பதை உறுதிப்படுத்த வேண்டியது உங்கள் பொறுப்பு என்று தெரிவித்தனர்.

அதனை அடுத்து, "இந்தக் காணிகளையும் கொள்வனவு செய்து விட்டோம். அதற்கான உறுதிகள் எங்களிடம் உள்ளன. ஆதாரங்களுடன் வருகிறோம்" எனத் தெரிவித்துவிட்டுஅவர்கள் அங்கிருந்து சென்றுள்ளதாக தெரிவிக்கப்படுகிறது. (அ)

# ஒரு இலட்சம் பனம் விதை நாட்டும் திருவிழா ஆனையிறவில் ஆரம்பம்



கிளிநொச்சி, ஒக். 29

வன்னி தமிழ் மக்கள் ஒன்றியத்தின் ஏற்பாட்டில் ஆனையிறவு ஏ9 வீதியில் 'நாளைய சந்ததிகளின் பசுமையான எதிர்காலத்தை நோக்கி' எனும் தொனிப் பொருளில் ஒரு இலட்சம் பனம் விதை நாட்டும் திருவிழா நேற்று காலை 9.30 மணியளவில் இடம்பெற்றது.

அரசியல் பேதமின்றி பனம் விதை நாட்டும் திருவிழாவில் சமத்துவ கட்சியின் பொதுச் செயலாளருமான முன்னாள் பாராளுமன்ற உறுப்பினர் முருகேசு சந்திரகுமார், வட்டக்கச்சி ஆரம்ப வித்தியாலயத்தின் முதல்வர் பங்கையற்செல்வன், வைத்தியர்கள், கரைச்சி பிரதேச சபையின் முன்னாள் உறுப்பினர்களான குமாரசிங்கம், இளங்கோ, எழுத்தாளர்கள், பாடசாலை மாணவர்கள் மற்றும் வன்னி தமிழ் மக்கள் ஒன்றியத்தின் உறுப்பினர்கள் இணைந்து ஒரு இலட்சம் பனம் விதை நாட்டும் திருவிழாவினை ஆரம்பித்து பனம் விதை நாட்டி வைத்தனர். (அ)

# சீன கப்பல் மேலும் இரண்டு தினங்கள் இலங்கை கடலில் ஆய்வில் ஈடுபட அனுமதி

கொழும்பு , ஒக்.29

கொழும்பு துறைமுகத்தில் நங்கூரமிட்டுள்ள ஷி யான் 6 சீன ஆய்வுக் கப்பலுக்கு நாட்டின் கடற்பரப்பில் மேலும் இரு தினங்களுக்கு ஆய்வில் ஈடுபடுவதற்கு அனுமதி வழங்கப்பட்டுள்ளது.



இதற்கமைய, நேற்று புறப்படவிருந்த குறித்த கப்பல் எதிர்வரும் 31 ஆம் திகதி வரை நாட்டில் தரித்து நிற்கும் என தெரிவிக்கப்பட்டுள்ளது.

கப்பலின் பணிக்குழாமுடன் இணைந்து ஆய்வு நடவடிக்கைகளில் ஈடு படுவதற்கு நாரா நிறுவனத்திற்கும் ருஹூணு பல்கலைக்கழகத்திற்கும் அனுமதி வழங்கப்பட்டுள்ளதாக வெளியுறவுத்துறை அமைச்சு தெரிவித்துள்ளது.

சீன ஆய்வுக் கப்பலின் இலங்கைக்கான பயணம் தொடர்பில் இந்தியா வெளிப்படுத்தியுள்ள தீவிர கரிசனையின் அடிப்படையில் இந்த விடயம் முக்கியத்துவமிக்கதாகக் கருதப்படுகிறது.

எனினும், சீன ஆராய்ச்சிக் கப்பல் திட்டமிடப்பட்டவாறு கொழும்பு துறைமுகத்தை நேற்று முன்தினம் வந்தடைந்தது.

கொழும்பு துறைமுகத்தில் கப்பல் நங்கூரமிட்டுள்ளது.

இந்த கப்பலில் கடலின் அடிப் பகுதியை கண்காணிக்கக்கூடிய உயர் தொழில்நுட்பக் கருவிகள் உள்ளிட்ட பல்வேறு உபகரணங்கள் காணப்படுவதுடன், சேகரிக்கப்படும் மாதிரிகளை இந்த கப்பலிலேயே காணப்படும் ஆய்வுக்கூடத்தில் பரிசோதனைக்குட்படுத்தும் வசதிகளும் உள்ளன.

260 தொன் எடை கொண்ட ஆய்வுக் கருவிகள் இந்த கப்பலில் காணப்படுவதுடன், 60 பேருக்கான வசதிகள் உள்ளன.

## ஐ.நா...

தாக்குதல் தொடர்பில் விக்கிரமசிங்க - ராஜபக் அரசாங்கத்திடம் நீதிக்காக பலமுறை கோரிக்கை விடுத்தும் அலட்சியம் காட்டியமையால் ஐக்கிய நாடுகள் சபையின் தலையீட்டை கோருவதாக கத்தோலிக்க திருச்சபை தெரிவித்துள்ளது.

2019 ஆம் ஆண்டு உயிர்த்த ஞாயிறு தினத்தன்று நடத்தப்பட்ட குண்டுத்தாக்குதலில் வெளிநாட்டவர்கள் 45 பேர் உள்ளடங்கலாக 269 பேர் உயிரிழந்தனர்.

இந்த நிலையில், உயிர்த்த ஞாயிறு தினத்தன்று நடத்தப்பட்ட குண்டுத்தாக்குதல் தொடர்பில் சனல் 4 ஊடகம் ஆவணப்படமொன்றை அண்மையில் வெளியிட்டது.

தொடர்ந்து இந்த விடயம் தொடர்பில் பல்வேறு தரப்பினால் சர்வதேச விசாரணை கோரப்பட்டது.

இதனிடையே, உயிர்த்த ஞாயிறு தினத்தன்று மேற்கொள்ளப்பட்ட தாக்குதல் உள்ளிட்ட எந்தவொரு விடயம் தொடர்பிலும் இலங்கை அரசாங்கம் சர்வதேச விசாரணையை மேற்கொள்ளாது என ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க திட்டவட்டமாக தெரிவித்திருந்தமை குறிப்பிடத்தக்கது. (அ)

## நிச்சயமாக...

விசேட நேர்காணலிலேயே அவர் இவ்வாறு கூறினார்.

"நிச்சயம் ஜனாதிபதியாக வருவேன் என்ற நம்பிக்கை எனக்குள்ளது. நான் ஜனாதிபதி ஆவதை எவராலும் தடுக்க முடியாது.

அதற்கு மதத் தலைவர்கள் மற்றும் சிவில் அமைப்புகளின் ஆசீர்வாதம் ஏற்கனவே கிடைத்துள்ளது."என்றும் அவர் கூறியுள்ளார்.

பொதுப் பயன்பாடுகள் ஆணைக்குழுவின் தலைவர் பதவியில் இருந்து ஜனக ரத்நாயக்க கடந்த மே மாதம் பாராளுமன்றத்தில் வாக்கெடுப்பின் பின்னர் நீக்கப்பட்டார்.

மின்சாரக் கட்டணத்தை அதிகரிக்க அரசாங்கம் எடுத்த தீர்மானம் தொடர்பில் அரசாங்க அமைச்சர்களுக்கும், ஜனக ரத்நாயக்கவுக்கும் இடையில் பல சந்தர்ப்பங்களில் கருத்து முரண்பாடுகள் ஏற்பட்டன.

அதன் காரணமாக அவர் பதவியில் இருந்து நீக்கப்பட்டார் என்பதும் குறிப்பிடத்தக்கது. (அ)

ஈழநாடு



# முன்மொழியப்படும் வரவு செலவுத் திட்டம்: முற்கூட்டிய தேர்தலொன்றுக்கு வழிவகுக்கக்கூடுமா?

**கந்தையா அருந்தவபாலன்**

நிதியமைச்சர் என்ற வகையில் எதிர்வரும் 13 ஆம் திகதி ஜனாதிபதி ரணில் விக்ரமசிங்கவினால் சமர்ப்பிக்கப்படவுள்ள அடுத்த ஆண்டுக்கான வரவு செலவுத்திட்டம் நாட்டில் வெவ்வேறு தரப்பினருடையே வெவ்வேறான எதிர்பார்ப்புகளையும், ஐயங்களையும் தோற்றுவித்துள்ள அதேவேளைஅரசாங்கத்தின் மீது அழுத்தங்களையும் ஏற்படுத்தியுள்ளதை அவதானிக்க முடிகிறது. பொது மக்கள் நிவாரணங்களை எதிர்பார்க்கிறார்கள். அரச ஊழியர்கள் சம்பள உயர்ச்சியை எதிர்பார்க்கிறார்கள். தொழில் வாண்மையினர் வரிக்குறைப்பை எதிர்பார்க்கிறார்கள். முயற்சியாளர்கள் ஊக்குவிப்புக்கான வாய்ப்புகளை எதிர்பார்க்கிறார்கள். இவைபோல இன்னும் பல. இவர்களின் எதிர்பார்ப்புகளுக்கு மாறாக தனது நிபந்தனைகளை நிறைவேற்றுவதற்கான மேலதிக முன்மொழிவுகளை சர்வதேச நாணய நிதியம்எதிர்பார்க்கிறது. இவர்களிடம் இவ்வாறான எதிர்பார்ப்புகளுடன் கூடவே அவை நிறைவேற்றப்படுமா என்ற ஐயமும் காணப்படுகின்றது. அதானால்தான் அவை அவற்றை நிறைவேற்றுவதற்கான அழுத்தங்களைப் பிரயோகிக்கத் தொடங்கி விட்டன. தொழிற்சங்கப் போராட்டங்கள் உக்கிரமடைவதும் நாணய நிதியம் தனது இரண்டாவது தவணைக் கடனை இழுத்தடிப்பதும் இதற்காகவே. இதேவேளை இத்தரப்புகள் யாவற்றினதும் எதிர்பார்ப்புகளை வரவு செலவுத் திட்டத்தின் மூலம் தன்னால் நிறைவேற்ற முடியுமா என்ற ஐயத்துடன் இந்த வரவு செலவுத் திட்டத்தை நிறைவேற்ற முடியுமா என்ற ஐயமும் ரணிலிடம் இருப்பதாகத் தெரிகிறது. மறுபுறத்தில் ராஜபக்ஷ தரப்பு வரவுசெலவுத் திட்டத்திற்கான தமது ஆதரவை வைத்து தனது விருப்பங்களை நிறைவேற்றுவதற்கு அழுத்தம்கொடுக்க முனைகிறது. இவ்வாறான ஒரு சூழ்நிலையில் முன்வைக்கப்படும் வரவு செலவுத் திட்டமானது இத்தரப்புகளின் எதிர்பார்ப்புகளை ஓரளவேனும் நிறைவு செய்யத் தவறுமாயின் அதற்கான விலையைச் செலுத்த வேண்டிய இக்கட்டான ஒரு நிலைக்கு ரணில் தள்ளப்படுவதற்கான வாய்ப்புக் காணப்படுகிறது. இது ஆட்சிக் கவிழ்ப்புக்கோ அல்லது பாராளுமன்றக் கலைப்புக்கோ கூட வழிவகுக்கக் கூடும்.

பல்வேறு தரப்புகளதும் எதிர்பார்ப்புகளைத் திருப்திகரமான முறையில் நிறைவு செய்யும் வகையிலான வரவு செலவுத் திட்டமொன்றை கடும் நிதி நெருக்கடியில் சிக்கித் தவிக்கும் இந்த அரசாங்கத்தினால் முன்வைக்க முடியுமா? நாட்டின் பொருளாதார வளர்ச்சி சுருங்கியுள்ளதுடன் அரச வருமான மூலங்களும் சுருங்கி விட்டன. அதே வேளை அரச செலவுகள் உயர்ந்த மட்டத்தில் இருப்பதுடன் விலைமட்ட உயர்வுகள் அச்செலவுகளை மேலும் அதிகரிக்கச் செய்கின்றன. அரசின் வருமானத்தின் இருமடங்கு அரசின் செலவாகக் காணப்படுகிறது. வருமானத்தை விஞ்சிய செலவுகளில் பெரும் பகுதி கடந்த காலத்தில் உள்நாட்டு வெளிநாட்டுக் கடன்கள் மூலமே ஈடு செய்யப்பட்டு வந்தது. இன்று இவ்வாறு கடன்பெறக்கூடிய வழிகள் முற்றாக மூடப்பட்ட நிலையே காணப்படுகின்றன. அதே வேளை சர்வதேச நாணயநிதியம் அரசின் வரவுக்கும் செலவுக்கும் இடையில் காணப்படும் இந்த இடைவெளியை குறைந்த மட்டத்துக்குக் கொண்டுவர வேண்டும் என நிபந்தனை விதித்துள்ளது. அதாவது உள்நாட்டு உற்பத்தியின் சதவீதமாக 10 ஆகக் காணப்படும் பற்றாக்குறையை 6 சதவீதத்திற்கும் கீழாக மட்டுப்படுத்துமாறு வலியுறுத்தியுள்ளது. இதன் கருத்து அரச வருமானத்தை உயர்த்தும் அதே வேளை செலவைக் குறைக்கவேண்டும் என்பதாகும்.



இதன்காரணமாகத்தான் ஏலவே மின்சாரம், எரிபொருட்கள் போன்ற வற்றின் விலைகள் பன்மடங்கு உயர்த்தப்பட்டுள்ளதுடன் பொருட்கள் மீதான வரிகளும் வருமான வரிகளும் உயர்த்தப்பட்டுள்ளன. மறு புறத்தில் அரச செலவுகள் மட்டுப்படுப்படுத்தப்படுகிறது. இவ்வாறானதொரு நிலையில் சம்பள உயர்வு, வரிச்சலுகைகள், நிவாரணங்கள் மற்றும் சமூகநலன்சார் முதலீடுகள் எவ்வளவு தூரம் சாத்தியமானதாக அமையப் போகிறது? குறைந்தது 20,000 ரூபா சம்பள உயர்வு வழங்கப்படவேண்டும் என்று பல தொழிற்சங்கங்கள் கோரி நிற்கின்றன. இது சாத்தியமானதா? இது



போலவே தமக்கு வரிச்சலுகைகள் வழங்கப்பட வேண்டும் என வைத்தியர்கள் கோரி நிற்கின்றனர். பற்றாக்குறையின் அளவைக் குறைப்பதற்கு வருமானத்தை உயர்த்த வேண்டிய ஒரு கட்டாய நிலையில் அரசாங்கம் இருக்கும்போது வரிச்சலுகைகளை வழங்க முடியுமா? நாட்டில் வறுமையும் வேலையின்மையும் நாளுக்கு நாள் ஏறுமுகமாக உள்ளன. கடந்த நான்கு வருடங்களில் பல்கலைக் கழகங்களிலிருந்து வெளியேறிய பட்டதாரிகள் ஆயிரக்கணக்கில் அரச வேலைகளுக்காகக் காத்திருக்கிறார்கள். அரசின் பொதுச் சேவைகளுக்கான நிதி ஒதுக்கீடுகள் குறைக்கப்பட்டதால் எல்லாத் துறைகளிலும் நாளுக்கு நாள் பிரச்சினைகள் அதிகரித்த வண்ணமுள்ளன. இவ்வாறான எதிர்பார்ப்புகளை ஓரளவேனும் நிறைவேற்றுவதற்கான முன்மொழிவுகள் இந்த வரவு செலவுத்திட்டத்தில் இல்லாதவிடத்து தொழிலாளர்களும் பொதுமக்களும் வீதிக்கு இறங்குவற்கான நிலைமைகள் அதிகரிக்கக் கூடும். இச்சூழ்நிலையை தமக்குச் சாதகமாக்கி அரசாங்கத்திற்கு எதிரான போராட்டங்களை எதிர்க்கட்சிகள் ஊக்குவிக்கும். இவை அரசாங்கத்தின் இருப்புக்கு மேலும் நெருக்கடிகளைத் தோற்றுவிக்கலாம். போராட்டங்களுக்கு எதிராக அரசாங்க அடக்கு முறைகள் அதிகரிப்பதற்கான வாய்ப்புகளையும் உண்டு. இதைத் தணிப்பதற்கான ஒரு உத்தியாக ஜனாதிபதி பாராளுமன்றத்தைக் கலைத்து பொதுத்தேர்தல் ஒன்றுக்குச் செல்லக் கூடும்.

நாட்டின் பொருளாதார, சமூகக் காட்சிகள் இவ்வாறு தென்படும் போது அரசியல் காட்சிகள் வேறுவகையாகக் புலப்படுகிறது. ரணில் - ராஜபக்ஷ அரசாங்கத்தில் இதுவரை உள்ளே புகைந்து கொண்டிருந்த அதிருப்தி எரிமலை இப்போது வெடித்து வெளிக்கிளம்பத் தொடங்கி விட்டது. ரணில் - ராஜபக்ஷ கூட்டானது அடிப்படையில் முரண்பட்ட தேவைகளை நிறைவேற்றிக் கொள்வதற்கான தற்காலிக ஏற்பாடுதான். கோட்டாபயவினால் சிதைக்கப்பட்டு விட்ட தமது அரச குடும்பக் கனவுகளுக்கு மீண்டும் செயல்வடிவம் கொடுப்பதற்கான கால அவகாசம் ராஜபக்ஷ தரப்புக்குத் தேவைப்பட்டது. ரணிலுக்குதான் நீண்ட காலமாக எதிர்பார்த்துக்

> வரவு செலவுத் திட்டத்துக்கு எதிர்த்து வாக்களிப்பது என மொட்டுக்கட்சி தீர்மானித்தால் இன்னும் பலரை அக்கட்சி இழக்கவேண்டி ஏற்படும். இது ரணிலின் கரத்தை மேலும் வலுப்படுத்தவே உதவும். எதிர்பார்ப்புகளுக்கு மாறாக வரவு செலவுத் திட்டம் தோற்கடிக்கப்பட்டாலும் கூட ரணிலின் இருப்புக்கு உடனடியாக எந்தப் பாதிப்பும் ஏற்படப் போவதில்லை.

கைநழுவிப் போன ஜனாதிபதிக் கனவை நனவாக்குவதற்கான தேவை இருந்தது. இந்த அரசியல் சதுரங்கத்தில் ரணில் தனது நிலையை வலுப்படுத்திக்கொண்டு செல்ல ராஜபக்ஷ தரப்பின் கனவுகள் மெல்ல மெல்ல கலையத் தொடங்கின. ரணிலைக் கைப்பிள்ளை ஆக்க நினைத்த ராஜபக்ஷ தரப்பினரே ரணிலின் கைப்பிள்ளையாக இன்று மாறிக் கொண்டிருப்பது ரணிலின் அரசியல் சாணக்கியம் எனலாம். மொட்டுக்கட்சி பல துண்டுகளாகச் சிதறிக்கிடப்பது மட்டுமன்றி கட்சியில் எஞ்சி நிற்போரிடமும் ஒத்த கருத்தில்லை. அது மட்டுமன்றி ராஜபக்ஷ குடும்பத்துக்குள்ளேயும் குத்து வெட்டுகளுக்கு பஞ்சமில்லை. பஷில், நாமல், கோட்டாபயஅணிகள் தனித் தனியே வெவ்வேறு பாதைகளில் பயணிக்க முயற்சிப்பதே இதற்குக் காரணம். மகிந்தவும் அவரது விசுவாசிகளும் நாமலுக்கான எதிர்காலத்தைத் தேடுகிறார்கள். பஷிலும் அவரது விசுவாசிகளும் பஷிலுக்கான வாய்ப்பைத் தேடுகிறார்கள். இதற்கு மாறாக கோட்டாபய தனது விசுவாசிகளை ரணிலுக்குப் பின்னால் அணிவகுக்க வைக்கிறார். இந்த நிலையில்தான் ரணில் ராஜபக்ஷ தரப்புகள் வெளிப்படையாகவே ஒருவரை ஒருவர் விமர்சிக்கும் நிலை தோன்றியிருப்பதுடன் எதிர்த்து சவால்களும் விடுக்கப்பட்டு வருகின்றன. மொட்டுக் கட்சியின் செயலாளர் சாகர காரியவாசம் வரவு செலவுத் திட்டத்திற்கு தாம் ஆதரவளிப்பதா? இல்லையா? என்று முடிவெடுக்க வேண்டிய நிலை வருமென ரணிலை மிரட்ட, தற்போது ரணிலின் முக்கிய செயற்பாட்டாளரான மொட்டுக் கட்சியின் உறுப்பினரும், கோட்டாபயவின் விசுவாசியுமான நிமல் லான்சா "முடிந்தால் வரவு செலவுத் திட்டத்துக்கு எதிராக வாக்களித்துவிட்டு எதிர்க்கட்சியில் அமருங்கள் பார்க்கலாம்" என்று நாமல் தரப்புக்கு சவால் விட்டுள்ளதையும் அவதானிக்கலாம்.

இந்நிலையில் மொட்டுக்கட்சி உறுப்பினர்கள் வரவு செலவுத்திட்டத்திற்கு எதிராக வாக்களித்து வரவு செலவுத்திட்டம் தோற்கடிக்கப்படுமானால் பாராளுமன்றம் கலைக்கப்பட்டு பொதுத்தேர்தல் ஒன்றுக்குச்செல்ல வேண்டிய சூழ்நிலை ஒன்று ஏற்படும். ஆனால் அவ்வாறான ஒரு நிலைமை ஏற்படுவதற்கான சாத்தியம் மிகமிகக் குறைவு. மொட்டுக்கட்சியில் இருப்பவர் பலருக்கு மட்டுமன்றி எதிர்க்கட்சியில் இருக்கும் பலருக்கும் அதில் உடன்பாடில்லை. மொட்டுக் கட்சியிலுள்ள மூத்த தலைவர்கள் அதனை வெளிப்படையாகவே தெரிவித்து விட்டனர். இன்றைய நிலையில் பொதுத் தேர்தல் ஒன்றுக்குச் சென்றால் மொட்டுக்கட்சியிலுள்ள பல பாராளுமன்ற உறுப்பினர்கள் மீண்டும் தெரிவு செய்யப்படுவதற்கான வாய்ப்பு காணப்படவில்லை. இத்தகைய நிலை எதிர்த்தரப்பிலுள்ள பலருக்கும் கூட உண்டு. இதற்கு மேலாக சஜித், அனுர போன்றவர்ளும் பாராளுமன்றத் தேர்தலை விட ஜனாதிபதித் தேர்தலிலேயே அதிக அக்கறை உடையவர்களாக உள்ளனர். ஒட்டுமொத்தமாக நாட்டுமக்களும் அரசியல் தலைவர்களும் பொதுத் தேர்தல் ஒன்றுக்குச் செல்லும் மனநிலையில் இப்போது இல்லை. இந்நிலையில் வரவு செலவுத் திட்டத்துக்கு எதிர்த்து வாக்களிப்பது என மொட்டுக்கட்சி தீர்மானித்தால் இன்னும் பலரை அக்ட்சி இழக்கவேண்டி ஏற்படும். இது ரணிலின் கரத்தை மேலும் வலுப்படுத்தவே உதவும். எதிர்பார்ப்புகளுக்கு மாறாக வரவு செலவுத் திட்டம் தோற்கடிக்கப்பட்டாலும் கூட ரணிலின் இருப்புக்கு உடனடியாக எந்தப் பாதிப்பும் ஏற்படப் போவதில்லை. ஜனாதிபதி என்ற வகையில் தனது அதிகாரத்தைப் பயன்படுத்தி பாராளுமன்றத்தை மூன்று மாதங்களுக்கு ஒத்திவைத்துவிட்டு பின்னர் தேர்தலுக்கான அறிவிப்பை அவர் விடுக்க முடியும். அப்போது கட்சித்தாவல்கள், புதிய அணிகள், புதிய கூட்டுகள் என பல அரசியல் காட்சிகளை நாம் காணலாம். இதில் மொட்டுக்கட்சிக்குப் பலத்த சேதாரம் ஏற்படுவதுடன் சஜித்தின் கட்சிக்குக் கூட சேதாரம் ஏற்படுவதற்கான வாய்ப்புகள் நிறையவுண்டு. எல்லோரையும் விட நாட்டுக்கும் மக்களுக்கும்தான் அதிக சேதாரம் ஏற்படும்.

முடிபாக வரவுள்ள வரவு செலவுத் திட்டம் தேர்தலுக்கு வழிவகுக்குமா என்ற கேள்விக்கு விடை 'வரும் ஆனா வராது'.

●


# தமிழக எழுத்தாளர் ஜெயமோகனுடன் ஒரு சந்திப்பு

**குரு அரவிந்தன்**

கனடா தமிழ் இலக்கியத் தோட்டத்தின் அழைப்பின் பெயரில் எழுத்தாளர் ஜெயமோகன் அவர்கள் தமிழ்நாட்டில் இருந்து ரொறன்ரோவிற்குச் சென்ற வாரம் வருகை தந்திருந்தார். சென்ற வாரம் சனிக்கிழமை *21-10-2023* கனடா இலக்கியத் தோட்டத்தின் ஏற்பாட்டில், மார்க்கம் நகரசபை மண்டபத்தில் 'தமிழ் இலக்கியத்தில் அறம்' என்ற தலைப்பில் அவர் இலக்கிய ஆர்வலர்களுக்கு உரையாற்றினார். கருத்து வேறுபாடுகள், முரண்பாடுகள் எல்லாவற்றையும் ஒரு பக்கம் ஒதுக்கி வைத்துவிட்டு, உரையைக் கேட்கும் ஆர்வத்தில் இலக்கிய ஆர்வலர்கள் பலர் இந்த நிகழ்வில் கலந்து கொண்டனர்.

நிகழ்வின் போது, மார்க்கம் நகரசபைத் தமிழ் அங்கத்தவரான ஜெனிட்டா நாதன் அவர்கள் மலர்ச்செண்டு கொடுத்து எழுத்தாளர் ஜெயமோகனை வரவேற்றார். அமெரிக்காவில் இருந்து வருகை தந்திருந்த மருத்துவ கலாநிதி ரகுராமன் அவர்கள் எழுத்தாளர் ஜெயமோகனைச் சபையினருக்கு அறிமுகம் செய்து வைத்தார்.

எழுத்தாளர் ஜெயமோகன் தனது ஆரம்ப உரையில், தமிழகத்து சிறந்த படைப்பாளிகளை இனம்கண்டு அவர்களைத் தெரிவு செய்து அவர்களுக்குக் கனடாவில் விருதுகள் வழங்குவதைப் பாராட்டி, தமிழகம் செய்யத்






தவறியதைக் கனடா இலக்கியத் தோட்டம் நடைமுறைப் படுத்துவதாகக் குறிப்பிட்டு, இலக்கியத் தோட்டத்தைப் பாராட்டினார். வெளிநாட்டுப் பயணம் என்று சொல்லி முதன் முதலாகத் தான் கனடா நாட்டுக்குத் தான் பல வருடங்களுக்கு முன் வந்ததாகக் குறிப்பிட்டார்.

ரொறன்ரோவில் உள்ள பதினைத்து வயதுக்குட்பட்ட தமிழ் சிறுமிகளுடன் உரையாடிய போது அவர்களின் கேள்விகள் தன்னை மிகவும் கவர்ந்ததாக உரையின் ஆரம்பத்தில் அவர் குறிப்பிட்டார். தமிழ் இலக்கியம் சார்ந்து அவர்கள் கேட்ட சில கேள்விகள் தன்னை வியப்பில் ஆழ்த்தியதாகக் குறிப்பிட்ட அவர், உதாரணமாக ஒரு படைப்பை மொழிமாற்றம் செய்யும் போது தமிழ் பண்பாட்டு தனித்தன்மையை முக்கியமாகக் கருத்தில் கொள்ள வேண்டுமா அல்லது பண்பாட்டுச் சமகால தன்மையைக் கண்டறிய வேண்டுமா என்பது போன்ற கேள்விகளை அவர்கள் முன்வைத்ததாகக் குறிப்பிட்டார். யாருக்காக மொழி பெயர்க்கிறோம் என்பதையும், அது பிரபல படைப்பாயின் சமகாலத் தன்மையையும் கண்டறியவேண்டும் என்று அவர்களுக்குச் சொன்னதாக அவர் குறிப்பிட்டார்.

இதைவிட சங்ககாலத்தில் சாதி முறைகள் இருந்தனவா, தமிழ் இலக்கியத்தில் பெண்களை ஏன் உயர்வாகக் கருதவில்லை என்பன போன்ற கேள்விகளையும் அவர்கள் எழுப்பியதாகக் குறிப்பிட்டார். சங்க காலத்தில் சாதிபேதமின்றி, பெண் அடிமைத்தனமின்றி எல்லாமே சிறப்பாக இருந்ததாகக் குறிப்பிட்ட அவர், நாம் வாழும் இந்தக்காலம் அவ்வாறு அமையவில்லை என்றும் ஆதங்கப்பட்டார்.

ஜெயமோகனின் உரையைத் தொடர்ந்து பார்வையாளர்கள் சிலர் அவரிடம் சில கேள்விகளை முன்வைத்தார்கள். அந்தக் கேள்விகளுக்கெல்லாம் ஜெயமோகன் தெளிவாகவும், சிறப்பாகவும் பதில் அளித்திருந்தார். ஜெயமோகன் குறிப்பிட்டது போல, தமிழ் இலக்கியம் அறிந்த ஒரு ஆரோக்கியமான புதிய தலைமுறை ஒன்று கனடாவில் உருவாக்கப் பட்டிருப்பதையும், கடந்த 40 வருடங்களாக அவர்களை உருவாக்குவதில் நாங்கள் வெற்றி அடைந்திருப்பதிலும் எமக்குப் பெருமையாக இருக்கின்றது.

நிகழ்வு முடிந்ததும் அவருடன் நேரடியாக உரையாட முடிந்தது. அப்போது எனது நூல்களைப் பற்றி அறிந்து கொள்ள விரும்பினார். என்னிடம் இருந்த 'சாக்லட் பெண்ணும் பண்ணை வீடும்' என்ற வெளிநாட்டுக் கதைகள் அடங்கிய எனது புதிய சிறுகதைத் தொகுப்பையும், தமிழகக் கவிஞர் மு. முருகேஸ் அவர்கள் தொகுத்து வெளியிட்ட 'மனதைத் தொட்ட எழுத்தின் பக்கங்கள்' என்ற தொகுப்பையும் கையளித்திருந்தேன். எனது பல சிறுகதைகளைத் தான் வாசித்தாகவும், இந்த நூல்களை வாசித்தபின் தனது கருத்தைத் தெரிவிப்பதாகவும் குறிப்பிட்டிருந்தார். நாகர்கேவிலைச் சேர்ந்த எழுத்தாளர் ஜெயமோகன் 2014 ஆம் ஆண்டு கனடா தமிழ் இலக்கியத் தோட்டத்தின் 'வாழ்நாள் சாதனையாளர்' விருதைப் பெற்றிருந்தது குறிப்பிடத்தக்கது.



---



உங்கள் கேள்விகளை அனுப்பவேண்டிய முகவரி

வியுக்தியார் பதில்கள்
ஈழநாடு, 707 ஆஸ்பத்திரி வீதி,
யாழ்ப்பாணம்.
viyukthiyar@gmail.com

# வியுக்தியார் பதில்கள்

**எம். அகிலேஸ்வரன் சித்தன்கேணி.**

**கேள்வி:** ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்கவை விமர்சிக்கும் நாமல் ராஜபக்ஷ முடிந்தால் வரவு - செலவுத் திட்டத்துக்கு எதிராக வாக்களித்து காட்டட்டும் என்று எதிர்க்கட்சி தலைவர் சஜித் பிரேமதாச சவால் விடுத்துள்ளாரே. சரியான சவால்தானே. நாமல் இதனை ஏற்றுக்கொண்டு வரவுசெலவுத்திட்டத்தை எதிர்த்து வாக்களிப்பார் என்று நீங்கள் நினைக்கின்றீர்களா?.

**வியுக்தியார்:** ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்கவை விமர்சிப்பதையும் வரவுசெலவுத்திட்டத்தை எதிர்ப்பதையும் ஒன்று என்று சஜித் கூறுவதுதான் புரியவில்லை. ஜனாதிபதி தனது அமைச்சரவையை மாற்றியமைத்த போது அரசின் பிரதான கட்சியான தங்களுடன் ஆலோசனை செய்யாமல் மாற்றங்களை செய்துவிட்டார் என்றுதான் நாமல் அவரை விமர்சிக்கிறார். ஒரு தந்தை தனது புதல்வர்களில் ஒருவருக்கு சலுகை காட்டுகிறார் என்று மற்றைய பிள்ளைகள் கோபப்படுவது தவறில்லையே. அதற்காக தந்தையையே கொலைசெய்ய வேண்டும் என்று சொல்ல முடியுமா? அல்லது எந்த மகன்தான் அப்படிச் செய்வான்?. சஜித் என்னடா என்றால் அவரது வரவுசெலவுதிட்டத்தை தோற்கடித்து ஆட்சியையே கலைக்கச் சொல்லி சவால் விடுவதுதான் சின்னப்பிள்ளைத்தனமாக இருக்கின்றது.

---

**சபா. சிவநாதன்,**
**குரும்பசிட்டி, தெல்லிப்பழை.**

**கேள்வி:** வடக்கு விவசாயத் திணைக்களத்தினால் இந்த வருடத்துக்கான முன்மொழிவு ஒன்று ஒழுங்கிணைப்புக் குழுவின் ஒப்புதலுக்காக சமர்ப்பிக்கப்பட்ட போது, 'அரசாங்க நிதியில் செயற்படுத்தப்படும் செயற்திட்டத்தை வருட இறுதியில் நடைமுறைப்படுத்த அனுமதி கோரினால் எவ்வாறு அந்தத் திட்டத்தை முழுமையாக செயற்படுத்த முடியும்? அவ்வாறு செயற்படுத்த முடியாது. இது ஒரு நையாண்டியான விடயம்" எனக் கடுமையான தொனியில் ஆளுநர் அதிகாரிகளை எச்சரித்தாராமே?.

**வியுக்தியார்:** ஆளுநர் நீண்டகாலம் அரச அதிபராக பதவிவகித்தவர். அவருக்கு தெரியாததல்லவே. நமது அதிகாரிகள் நையாண்டி விடுகிறார்கள் என்பதை புரிந்துகொள்ள முடியாதவரா என்ன? அது வேறு ஒன்றுமல்ல, முன்மொழிவுகளை எப்போது கொடுக்கவேண்டும் என்பதைக்கூட தெரியாதவர்கள் தான் அதிகாரிகளாக இருக்கிறார்கள் என்பதை நமது மக்களுக்கு உணர்த்தியிருக்கிறார் ஆளுநர்.

---

**எம். கௌதம்,**
**அமிர்தகழி, மட்டக்களப்பு**

**கேள்வி:** மட்டக்களப்பு எம்.பி. சாணக்கியன் மற்றும் சில அதிகாரிகள் மேற்கொள்ளும் கீழ்த்தரமான நடவடிக்கைகளால் மீண்டும் ஒரு யுத்தம் ஏற்படும் என்றும் அவ்வாறு யுத்தம் ஏற்படுவதை தடுக்க முடியாது என்றும் தெரிவித்துள்ள மட்டக்களப்பு மங்களாராமய விகாரையின் விகாராதிபதி அம்பிட்டிய சுமணரத்ன தேரர், அப்படி யுத்தம் ஏற்படுகின்றபோது அனைத்து தமிழர்களையும் வெட்டுவேன், என்ன செய்கிறார்கள் என பார்ப்போம் என்று தெரிவித்துள்ளாராமே.

**வியுக்தியார்:** அவர் யுத்தம் நடைபெற்ற காலங்களில் விடுதலைப் புலிகளின் வைபவங்களில் கலந்துகொண்டு, புலிகளை போற்றி புகழ்ந்து பேசிய ஒருவர்தான். யார் அதிகாரத்தில் இருந்தாலும் அவர்களுடன் சேர்ந்து இயங்கும் அனுபவம் கொண்டவர். இப்போது யுத்தம் வந்தால் தமிழர்களை வெட்டுவேன் என்கிறார் என்றால், யார் யுத்தத்தை தொடங்கவிருக்கிறார்கள் என்று அவர் எதிர்பார்க்கிறார் என்பதையும் நாம் புரிந்துகொள்ளலாம் தானே. 83இல் தமிழர்களை வெட்டியதால் நாடு அடைந்த இழப்புக்களை இன்னமும் சரிசெய்யமுடி யாமல் இருப்பது எல்லாம் அவரைப்போன்ற பிக்கு களுக்கு எங்கே புரியப்போகின்றது?

---

**இரா. ஜெயருபன்,**
**பூந்தோட்டம், வவுனியா.**

**கேள்வி:** அடுத்த ஆண்டுக்கான வரவுசெலவுத் திட்டத்தை தோற்கடித்து ஆட்சியைக் கவிழ்க்கும் எண்ணம் பொதுஜன பெரமுன கட்சியிடம் இல்லை என்று அக்கட்சியின்

மூத்த பாராளுமன்ற உறுப்பினரான எஸ்.பி. திஸாநாயக்க தெரிவித்துள்ள அதேவேளை பெரமுனவின் அனைத்து தலைவர்களும் அதனை மீண்டும் மீண்டும் சொல்கிறார்களே. சிலவேளை கவிழ்க்கும் எண்ணம் இவர்களிடம் இருக்குமோ?

**வியுக்தியார்:** ஒரு தமிழ் திரைப்படம் ஒன்றில் நகைச்சுவை நடிகர் வடிவேலு, ஒரு சண்டியனாக நடிப்பார். சண்டைக்கு போகின்றபோது வீரவசனங்களுடன் போகும் அவர், போகும் இடமெல்லாம் வாங்கிக்கட்டிக்கொண்டு வருவார். இதனைப்பார்த்துவிட்டு, அவரது சகபாடிகள் கேட்பார்கள், 'எப்பிடி அண்ணே இவ்வளவு அடியையும் வாங்கிக்கொண்டு உங்களால இருக்கமுடியுது?" என்று. அதற்கு வடிவேலு சொல்லுவார், 'என்னடா செய்ய அடிக்கிறதுதான் அடிக்கிறாங்கள். கடைசியலை என்னை நல்லவன் எண்டும் சொல்லுறாங்களேடா?" என்று. அந்தக் காட்சிதான் இப்போது ஞாபகத்திற்கு வருகின்றது.

ஈழநாடு



# இந்தியா - கனடா முறிந்த உறவு சீர்பெறுகிறதா? மேற்குலகை நோக்கி இந்தியா திசை திரும்புகிறதா?

ஐங்கரன் விக்கினேஸ்வரா

கனடா - இந்தியா உறவில் உச்சக்கட்ட முறுகலை சீக்கிய காலிஸ்தானிய தலைவர் ஹர்தீப் சிங் நிஜ்ஜார் படுகொலையே தோற்றுவித்தது. அதன்பின் இரு நாட்டிலும் இராஜ தந்தரிகள் வெளியேற்றப்பட்டனர்.

தற்போது மத்திய கிழக்கு போரில் இந்தியா இஸ்ரேலுக்கு உறுதியான ஆதரவு என்பது, இந்தியா மேற்குலகை நோக்கி திசை திரும்புகிறதா என்றுங் கருதலாம். இப்போது இஸ்ரேலுக்கு ஆதரவாக மாறிய இந்தியாவின் நிலைப்பாடு கனடா நாட்டின் உறவை சீர்செய்ய சாத்தியங்கள் உருவாகி உள்ளது.

**இஸ்ரேலுக்கு ஆதரவாக இந்தியா?**

இந்தியப் பிரதமர் மோடி, இந்தக் கடினமான நேரத்தில் இஸ்ரேலின் பக்கம் நாங்கள் ஒற்றுமையாக நிற்கிறோம் என்று இஸ்ரேலுக்கு தனது வெளிப்படை ஆதரவை தெரிவித்திருந்தார்.

இத்தகைய மாற்றம் உள்நாட்டில் சர்ச்சையை கிளப்பி இருந்தாலும், பாரத நாடு மேற்குலகை நோக்கி ஆதரிக்கும் செயற்பாட்டால், முஸ்லிம் நாடுகளின்





எதிர்ப்பை நேர்கொண்டது. ஆயினும் இந்த இந்தியாவின் மேற்குலகை நோக்கி திசை திரும்புதல் கனடா நாட்டின் உறவை மீண்டும் புதுப்பிக்க அமெரிக்கா முயலும்.

இந்தியா இஸ்ரேலுக்கு உறுதியான ஆதரவாக இப்போது மாறிய நிலைப்பாடும், இந்தியப் பிரதமர் மோடி, இஸ்ரேல் பிரதமர் பெஞ்சமின் நெதன்யாகுவிடம் தொலைபேசி வாயிலாக தற்போதைய கடினமான இந்தத் தருணத்தில் இஸ்ரேலுக்கு இந்திய மக்கள் தங்கள் உறுதியான ஆதரவை அளித்துவருகிறார்கள் என தெரிவித்தார். பயங்கரவாதத்தின் அனைத்து வடிவங்களையும் இந்தியா உறுதியாகக் கண்டிக்கிறது எனவும் மோடி தெரிவித்தார்.

**உச்சக்கட்ட முறுகல் ஏன் ?**

ஹர்தீப் சிங் நிஜ்ஜார் சுட்டுக்கொல்லப்பட்ட சம்பவத்தின் பின்னணியில் இந்திய அரசாங்கம் இருக்கலாம் என பிரதமர் ஜஸ்டின் ட்ரூடோ தெரிவித்திருந்தார். இதன்பின் இந்திய ராஜதந்திரி ஒருவரை கனேடிய அரசாங்கம் நாட்டில் இருந்து வெளியேறுமாறு அறிவித்தது.

ஹர்தீப் சிங்கின் மரணத்திற்கும் இந்திய அரசுக்கும் இடையே தொடர்பை கனடா உளவுத்துறை கண்டறிந்துள்ளதாக தெரிவிக்கப்பட்டது.

**இந்தியாவின் உறவு கனடாவுக்கு முக்கியம் என்று கனடா பாதுகாப்புத் துறை அமைச்சர் பில் பிளேர் தெரிவித்துள்ளமை தற்போது முக்கியத்துவம் வாய்ந்ததாகும்**

கனடா பிரதமர் இந்திய அரசின் முகவர்களுக்கும், கனடா குடிமகனின் படுகொலைக்கும் இடையே உள்ள தொடர்பு பற்றி கனடா புலனாய்வு துறைகள் தொடர்ந்து விசாரித்து வருகின்றன என கூறினார்.

கனடா நாட்டு குடிமகன் ஒருவர் படுகொலையில் அந்நிய வெளிநாட்டு அரசின் தொடர்பு இருப்பது என்பது ஏற்றுகொள்ள முடியாதது என்று அவர் அழுத்திக் கூறியுள்ளார். இதனைத் தொடர்ந்து இந்தியாவுக்கான கனடா தூதர் கேமரூன் மெக்கேவை 19.09.2023 அன்று இந்திய வெளியுறவு அமைச்சுக்கு அழைக்கப்பட்டு, கனடிய இராஜதந்திரி ஒருவரை அடுத்த ஐந்து நாட்களுக்குள் இந்தியாவை விட்டு வெளியேறுமாறு கேட்டுக் கொள்ளப்பட்டமை அறிந்ததே.

இந்தியாவின் உள் விவகாரங்களில் கனேடிய ராஜதந்திரியின் தலையீடு மற்றும் இந்தியாவுக்கு எதிரான நடவடிக்கைகளில் அவர் ஈடுபட்டதை அடுத்தே இந்த முடிவு எடுக்கப்பட்டுள்ளதாக தெரிவிக்கப்பட்டது.

**இந்தியா உறவு கனடாவுக்கு முக்கியமா?**

இந்தியா உடனான உறவு கனடாவுக்கு மிகவும் முக்கியம் என்று கனடா பாதுகாப்பு அமைச்சர் பில் பிளேர் தெரிவித்துள்ளார்.

இந்தியா உடனான உறவு கனடாவுக்கு மிகவும் முக்கியம். தற்போதுள்ள சூழலை நாங்கள் புரிந்து கொள்கிறோம். இந்தியா உடனான உறவை கனடா மிகவும் மதிக்கிறது. இது ஒரு சவாலான




விஷயம். எங்கள் சட்டத்தை, குடிமக்களை பாதுகாக்கும் பொறுப்பு எங்களுக்கு இருக்கிறது.

அதே நேரத்தில் ஒரு முழுமையான விசாரணையை நடத்தி உண்மையைக் கண்டறிவதற்கும் எங்களுக்கு பொறுப்பு உள்ளது. கனடாவின் மண்ணில் கனடாவின் குடிமகன் ஒருவரைக் கொல்வது என்பது கனடாவின் இறையாண்மையை மீறும் செயல் என்பதால் அது கவலை தரக்கூடியதாகவே இருக்கும். ஆயினும்

இந்தோ - பசிபிக் வியூகம் கனடாவுக்கு மிக மிக முக்கியம் என பாதுகாப்புத் துறை அமைச்சர் தெரிவித்துள்ளார்.

**இந்தோ - பசிபிக் பிராந்திய ராணுவ இருப்பு**

இந்தோ - பசிபிக் பிராந்தியத்தில் மேற்குலக ஆதரவு ராணுவத்தின் இருப்பை அதிகரிக்கவும், ரோந்துப் பணிகளை அதிகரிக்கவும் இந்தோ - பசிபிக் ஒப்பந்தம் வழிவகுத்துள்ளது. இதற்காக 5 ஆண்டுகளுக்கான நிதியாக 492.9 மில்லியன் அமெரிக்க டாலர் நிதி ஒதுக்கப்படுகிறது. இதற்கு இந்தியாவின் ஒத்துழைப்பை அமெரிக்கா வேண்டியுள்ளது.

**பா.ஜ.க. மோடி அரசின் நிலைப்பாடு மாற்றம்**

2014ஆம் ஆண்டு பா.ஜ.க வெற்றி பெற்று பிரதமராக பிரதமர் மோடி பொறுப்பேற்ற பிறகு மேற்குலக உறவு மட்டுமின்றி, இஸ்ரேல் - பாலஸ்தீன நிலைப்பாட்டிலும் மாற்றம் ஏற்பட்டது. இதுவரை எந்த இந்தியப் பிரதமரும் இஸ்ரேலுக்குச் சென்றிருக்காத நிலையில், 2017ஆம் ஆண்டு முதன்முறையாக இஸ்ரேல் நாட்டுக்குச் சென்று பல ஒப்பந்தங்களில் கையெழுத்திட்டார்.

இஸ்ரேலுக்குச் சென்ற முதல் இந்திய பிரதமர் மோடி என்ற பெயரையும் பெற்றார். அதேபோல, தற்போதைய போர்ச் சூழலிலும் இஸ்ரேலுக்கே தனது முழு ஆதரவையும் அளித்திருக்கிறார். முன்பு வலதுசாரி - இடதுசாரி, அமெரிக்கா - ரஷ்யா என உலக நாடுகள் இரண்டு தரப்பாக அணிவகுத்தபோதே இந்தியா அணி சேராக் கொள்கையுடன் இரண்டு தரப்புக்கும் இல்லாமல் நடுநிலை வகித்தது. இரண்டு தரப்பு நாடுகளிடமும் நட்புறவைப் பேணிவந்தது.

அனைத்துச் சூழலிலும் மதச்சார்பற்ற ஜனநாயக நாடாகத் தன்னை இருத்திக் கொள்வதிலேயே குறியாக இந்தியா இருந்து வந்தது. இந்த நிலையில், 2014 இந்திய நாடாளுமன்றத் தேர்தலில் பா.ஜ.க வெற்றிபெற்று நரேந்திர மோடி பிரதமராகப் பொறுப்பேற்ற பிறகு இந்தியாவின் நிலைப்பாட்டில் பாரிய மாற்றங்கள் தென்படத் தொடங்கின.

**அமெரிக்க சார்பு நிலைப்பாட்டில் இந்தியா?**

ஆசியப் பெருங்கண்டத்தில் ஓங்கி வரும் சீனாவின் அபரிமிதமான அதிகார மற்றும் பொருளாதார வளர்ச்சி இந்தியாவுக்கு மட்டுமன்றி அமெரிக்க மேற்குலக நாடுகளுக்கும் சவாலாக அமைந்துள்ளது. ஆசிய கண்டத்தையும் தாண்டி, ஆபிரிக்க - ஐரோப்பிய நாடுகளுக்கும் தனது பட்டுப்பாதைக் கனவை சீனா விரிவுபடுத்திச் செல்வதும் பெரும் தலைவலியாக இந்தியாவிற்கு அமைந்து வருகிறது.

சீனா தொடர்ச்சியாக இந்தியாவின் எல்லைப்பகுதிகளில் அத்துமீறி நுழைவது, ஆக்கிரமிப்பு - கட்டுமானங்களை மேற்கொள்வது, இந்திய ராணுவத்தினரோடு மோதலில் ஈடுபடுவது அதிகரித்தபடி சென்றமையால் அமெரிக்கா, பிரிட்டன் உள்ளிட்ட மேற்குலக நாடுகளுடன் இந்தியா நெருக்கத்தை அதிகரித்துள்ளது.

பாலஸ்தீன - இஸ்ரேல் மோதல் நிகழும் இக்கட்டான காலகட்டத்தில் இந்தியா உடனான உறவு கனடாவுக்கு மிகவும் முக்கியம் என்று கனடா பாதுகாப்பு அமைச்சர் பில் பிளேர் தெரிவித்துள்ளமை என்பது கனடா-இந்தியா முறிந்த உறவு சீர்பெற சாத்தியங்களை உருவாக்கியுள்ளது.



# மின் கட்டணம் மறுபரிசீலனை செய்யாவிடின் பேக்கரி பொருட்களின் விலை உயர வாய்ப்பு

## பேக்கரி உரிமையாளர்கள் எச்சரிக்கை

கொழும்பு, ஒக். 29

**மின்சாரக் கட்டண உயர்வை அரசாங்கம் மீள்பரிசீலனை செய்யாவிட்டால், அது பேக்கரித் தொழிலைப் பாதிப்ப தோடு, எதிர்காலத்தில் பேக்கரிப் பொருட்களில் விலையேற்றத்தை ஏற்படுத்தும் என அகில இலங்கை பேக்கரி உரிமையாளர்கள் சங்கத்தின் தலைவர் என். கே. ஜெயவர்தன தெரிவித்தார்.**



அவர் மேலும் தெரிவிக்கையில்-

பேக்கரி பொருட்களின் விலை அதிகரித்தால், மக்கள் வாங்க மாட்டார்கள், அது தொழில்துறையின் வீழ்ச்சிக்கு வழிவகுக்கும். பேக்கரி உற்பத்திகளுக்கு 100 வீதம் மின்சாரம் தேவைப்படுவதால், நாட்டில் இயங்கும் பேக்கரிகள் உள்ளிட்ட தொழிற்சாலைகளால் தற்போதைய மின் கட்டண உயர்வை தாங்க முடியாது. மின்சாரம் பயன்படுத்தாமல் இயங்கும் பேக்கரியை கண்டுபிடிப்பது கடினம்.

மின்சாரக் கட்டணம் 400 சதவீதம் உயர்த்தப்பட்டுள்ளது. 36 சதவீத வருமான வரியும், 15 சதவீத வற் வரியும் செலுத்த வேண்டும். இத்தனை அதிகரிப்பால் இந்தத் தொழிலை தொடர முடியாது.

நாங்கள் பேக்கரி பொருட்களின் விலைகளை அதிகரிக்க வேண்டும், ஆனால் நாங்கள் இன்னும் அரசாங்கத்தின் பதிலுக்காக காத்திருக்கிறோம், இருப்பினும், நாங்கள் எங்களால் முடிந்தவரை தற்போதைய மட்டத்தில் விலைகளை பராமரிக்கிறோம்.

எனவே, தொழிற்சாலைகளுக்கும், பேக்கரி தொழிலுக்கும் மின் கட்டண திருத்தம் செய்யப்பட வேண்டும், எங்கள் மீது சுமத்தப்பட்டுள்ள அதிக வரியை மறுபரிசீலனை செய்து நிவாரணம் வழங்க வேண்டும்- என்றார். (அ)

# 9,900 மில்லியன் ரூபா மோசடி; நிதி நிறுவன பணிப்பாளர் கைது

கொழும்பு, ஒக். 29

இலங்கை மத்திய வங்கியின் முறையான அனுமதியின்றி போலி நிதி நிறுவனம் ஒன்றை நடத்தி 9,900 மில்லியன் ரூபாவை மோசடி செய்ததாக கூறப்படும் நிதி நிறுவனத்தின் பணிப்பாளர் கைது செய்யப்பட்டுள்ளதாக நிதி மற்றும் வர்த்தக குற்றப் பிரிவு தெரிவித்துள்ளது.

கண்டியைச் சேர்ந்த 54 வயதுடைய சந்தேகநபர் நிதி நிறுவனத்தின் பணிப்பாளராகவும் பங்குதாரராகவும் இருந்ததாகவும் பொலிஸார் தெரிவித்தனர்.

சந்தேக நபருக்கு எதிராக நம்பிக்கை துரோகம் மற்றும் பணமோசடி ஆகிய குற்றச்சாட்டுகள் முன்வைக்கப்பட்டுள்ளதுடன், சம்பவம் தொடர்பான மேலதிக விசாரணைகளை நிதி மற்றும் வர்த்தக குற்றப் பிரிவினர் மேற்கொண்டுள்ளனர். (அ)

# நுகர்வோர் அதிகாரசபைக்கான பொலிஸ் அதிகாரிகள் நியமனம்

கொழும்பு, ஒக். 29

நுகர்வோர் அதிகார சபைக்கு பொலிஸ் உத்தியோகத்தர்களை நியமிக்க நடவடிக்கை எடுக்கப்படும் என வர்த்தக, வர்த்தக மற்றும் உணவு பாதுகாப்பு அமைச்சர் நளின் பெர்னாண்டோ தெரிவித்தார்.

விசேட புலனாய்வுப் பிரிவுக்கு பொலிஸ் உத்தியோகத்தர்கள் இணைத்துக் கொள்ளப்படவுள்ளதாக அமைச்சர் கூறினார்.

நுகர்வோர் அதிகாரசபை அதிகாரிகள் மேற்கொள்ளும் சோதனை நடவடிக்கைகளுக்கு பூரண பாதுகாப்பை வழங்க நடவடிக்கை எடுக்கப்படும் என அமைச்சர் குறிப்பிட்டார்.(அ)

# எந்தவொரு பிரச்னைக்கும் போர் தீர்வல்ல

கூறுகிறார் ஜீவன் தொண்டமான்



கொழும்பு, ஒக். 29

பலஸ்தீனத்தில் விரைவில் அமைதி நிலை திரும்ப வேண்டும் என்பதே தனது எதிர்பார்ப்பு எனவும், போரால் பாதிக்கப்பட்டுள்ள மக்களின் நிலையைக் காணும்போது கவலையளிக்கின்றது எனவும் இலங்கை தொழிலாளர் காங்கிரஸின் பொதுச்செயலாளரும், நீர்வழங்கல் மற்றும் தோட்ட உட்கட்டமைப்பு அபிவிருத்தி அமைச்சருமான ஜீவன் தொண்டமான் தெரிவித்தார்.

பலஸ்தீன தூதரகத்துக்கு சென்றிருந்த அமைச்சர் ஜீவன் தொண்டமான், இலங்கைக்கான பலஸ்தீன தூதுவர் கலாநிதி சுஹைர் ஹம்தல்லா செயிட்டை சந்தித்து கலந்துரையாடினார்.

அமைச்சருடன், இலங்கை தொழிலாளர் காங்கிரஸின் தவிசாளரும், பாராளுமன்ற உறுப்பினருமான மருதபாண்டி ராமேஸ்வரன், பிரதி தவிசாளரும், முன்னாள் பாராளுமன்ற உறுப்பினருமான எஸ்.இராஜதுரை ஆகியோர் கலந்துகொண்டனர்.

போரில் உயிரிழந்த மக்களுக்கு தமது அனுதாபங்களையும் வெளியிட்டார். பலஸ்தீன் விவகாரத்தில் இலங்கை மக்கள் உள்ள நிலைப்பாட்டிலேயே தானும் இருப்பதாகவும், எந்த வொரு பிரச்சினைக்கும் போர் தீர்வல்ல எனவும் அமைச்சர் சுட்டிக்காட்டினார். (அ)

# நசீர் அஹமட்டுக்கு எதிரான தீர்ப்பு...

(08ஆம் பக்கத் தொடர்ச்சி)

நீதிமன்றத்தினால் பிறப்பிக்கப்படக்கூடிய இடைக்காலத் தடை உத்தரவு களின் விளைவாக தீர்ப்பு வழங்கப்படும் வரை அவர் பாராளுமன்ற உறுப்பினராக தொடரமுடியும். இதற்கு பல உதாரணங்களைக் கூறமுடியும்.

ஆனால், 1999 ஆம் ஆண்டு முன் னாள் அமைச்சர்கள் சரத் அமுனுகம, விஜேபால மெண்டிஸ், நந்தா மத்தியூ மற்றும் சுசில் முனசிங்க ஆகியோர் ஜனாதிபதி திருமதி சந்திரிகா பண்டார நாயக்க குமாரதுங்கவின் அரசாங்கத்தில் இணைந்து கொண்டதை அடுத்து ஐக்கிய தேசிய கட்சி தங்களை வெளியேற்றியதை ஆட்சேபித்து அவர்கள் தொடுத்த வழக்கில் உயர் நீதிமன்றம் வழங்கிய தீர்ப்பு எதிர்மறையான ஒரு திருப்புமுனையாக அமைந்தது.

பிரதம நீதியரசராக சரத் என்.சில்வா பதவி வகித்த நாட்களில் வழங்கப்பட்ட அந்த தீர்ப்பு கட்சித்தாவலை செல்லுபடியானதாக்கி தவறான முன்னுதாரணத்தை ஏற்படுத்தி மோசமான அரசியல் கலாசாரத்துக்கு வழிவகுத்ததாக இன்று வரை கடுமையாக விமர்சிக்கப்படுகிறது.

பதவியில் இருந்து ஓய்வு பெற்று சில வருடங்கள் கழித்து சரத் என். சில்வா ஆங்கிலப் பத்திரிகை ஒன்றுக்கு வழங்கிய நேர்காணலில் தான் வெளிநாட்டுக்கு சென்றிருந்த வேளையில் பதில் பிரதம நீதியரசாக இருந்த ரஞ்சித் அமரசிங் கவே சரத் அமுனுகம வழக்கில் தீர்ப்பை வழங்கியதாகவும் ஆனால் அதை பிறகு தான் அங்கீகரித்ததாகவும் கூறியிருந்தார்.

எது எவ்வாறிருந்தாலும் கடந்த இரு தசாப்தங்களுக்கும் அதிகமான காலமாக கட்சித் தாவல்கள் சர்வசாதாரணமானவையாக மாறியதற் கும் பாராளுமன்ற உறுப்புரிமையை இழக்கவேண்டிவரும் என்ற பயமின்றி, அரசியல்வாதிகள் தங்களை தெரிவு செய்த மக்களின் விருப்பு வெறுப்புக்களை அலட்சியம் செய்து, பணத்துக்கும் பதவிகளுக்கும் விலை போகும் மோசமான அரசியல் கலாசாரத்துக்கு அந்த தீர்ப்பே காரணமாக அமைந்தது என்பதில் சந்தேகமில்லை. இந்த கலாசாரத்தினால் உச்சபட்சத்துக்கு பயனடைந்தவர்கள் ராஜபக்சாக்களே.

இந்த கட்சித்தாவல் கலாசாரத்தினால் மோசமாகப் பாதக்கப்பட்ட ஐக்கிய தேசிய கட்சியின் தலைவர் ஜனாதிபதி விக்கிரமசிங்கவும் கூட தனது அரசாங்கத்துடன் இணைந்து கொள்ளவதற்கு கட்சிக் கட்டுப்பாட்டையும் மீறி எதிரணியில் இருந்து பாராளுமன்ற உறுப்பினர்கள் வரவேண்டும் என்று எதிர்பார்த்துக் கொண்டிருந்தார் என்பது இலங்கை அரசியலின் சீரழிவின் தெளிவான ஒரு வெளிப்பாடாகும்.

அவரவருடைய அரசியல் அனுகூலமே கட்சித்தாவல் தொடர்பிலான அவர்களுடைய நிலைப்பாடுகளைத் தீர்மானித்தனவே அன்றி ஒழுக்கநியாயம் என்பதை பற்றி அரசியல்வாதிகளுக்கு அக்கறை கிடையாது.

நசீர் அஹமட்டுக்கு எதிரான தீர்ப்பு பாராளுமன்ற முறைமையில் மக்களுக்கு மீண்டும் நம்பிக்கையை ஏற்படுத்துவதற்கு பயனுறுதியுடைய நடவடிக்கைகள் எடுக்கப்பட வேண்டியதன் அவசியம் குறித்து பொதுவெளியில் விவாதத்தை மூளவைத்திருக்கிறது.

அரசியல் கட்சிகளுக்குள் ஜனநாயகம் கடைப்பிடிக்கப்படாத போக்கும் அரசில்வாதிகளின் ஒழுக்க நியாயமற்ற நடவடிக்கைகளும் எமது அரசியல் முறைமையை பாழ்படுத்திவிட்டன. இந்த கவலைக்குரிய நிலைவரத்தை சீர்செய்வதற்கு நீதித்துறையினால் எந்தளவு தூரத்துக்கு உதவமுடியும் என்பது முக்கியமான கேள்வி.



ஈழநாடு
Eelanadu

# பொதுத்தேர்தலில் எந்தக் கட்சியாலும் அறுதிபெரும்பான்மை பெறமுடியாது!

## கூறுகிறார் ஷான் விஜேலால் எம்.பி.



கொழும்பு, ஒக். 29

**அடுத்த பாராளுமன்றத் தேர்தலில் எந்தவொரு கட்சியாலும் அறுதிப் பெரும்பான்மையைக்கூட (113) பெறமுடியாத சூழ்நிலையே காணப்படுகின்றது - என்று ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சியின் சிரேஷ்ட உப தலைவரான பாராளுமன்ற உறுப்பினர் ஷான் விஜேலால் தெரிவித்தார்.**

எனவே, தற்போதைவிடவும் குழப்பகரமான தொங்கு அரசே அமையக்கூடும் எனவும் அவர் கூறினார்.

"அடுத்த தேர்தல்களில் கூட்டணி அமைப்பது தொடர்பில் ஸ்ரீ லங்கா சுதந்திரக் கட்சி இன்னும் முடிவெடுக்கவில்லை. கூட்டணி அமைப்பது தொடர்பில் கட்சிக்குள் கருத்து வேறுபாடுகள் உள்ளன. எனினும், மக்கள் மற்றும் கட்சிக்கு நன்மை பயக்கும் வகையில் எமது முடிவு அமையும்.

அடுத்த நாடாளுமன்ற தேர்தலில் பல அணிகள் இருப்பதால் வாக்குகள் பிரிந்துசெல்லும். எந்தவொரு கட்சியாலும் 75 ஆசனங்களுக்குமேல் கைப்பற்ற முடியாத நிலையே ஏற்படும். ஆட்சி அமைப்பதற்காக கூட்டு சேரவேண்டும். " - எனவும் அவர் கூறினார். (அ)

# ஜே.வி.பி. அதிகாரம் கோருவது மக்களை சோதனை செய்யவே!

## கூறுகிறார் ஆஷூ மாரசிங்க



கொழும்பு, ஒக். 29

நாட்டின் அதிகாரத்தினை சோதனை செய்யவே மக்கள் விடுதலை முன்னணி தனக்கு ஆட்சியை கோருவதாகவும், கோட்டாபய ராஜபக்ஷவை கொண்டு வந்து நல்ல பாடம் கற்பித்த மக்களுக்கு இனி பாடங்கள் தேவையில்லை எனவும் பாராளுமன்ற விவகாரங்களுக்கான ஜனாதிபதியின் ஆலோசகர் பேராசிரியர் ஆஷூமாரசிங்க தெரிவித்தார்.

அவர் மேலும் தெரிவிக்கையில்-

முதிர்ச்சியற்ற அரசியல் தலைமையினால் நாட்டில் பயனில்லை. முதிர்ச்சியற்ற அரசியல்வாதிகளால் செயற்பட முடியாது என்பது இலங்கையிலும், உலகிலும் நிரூபணமாகியுள்ளது.

விளாடிமிர் சோலன்ஸ்கி ஐரோப்பிய யூனியனுடன் இணைந்து உக்ரேனில் அதிகாரத்தை கைப்பற்றினார். ஆனால் இன்று யுத்தம் காரணமாக அவர் கட்டுப்பாட்டை இழந்து வருகிறார்.

மக்கள் விடுதலை முன்னணி தனது கட்டுப்பாட்டில் கொண்டு டொலர் பிரச்சினையை எவ்வாறு தீர்ப்பது என்பது தொடர்பிலான எந்தவொரு வேலைத்திட்டத்தையும் முன்வைக்கவில்லை - என்றார். (அ)

## ஒரு லட்சம் வேலைவாய்ப்புத் திட்டத்தின் கீழ்

# பெரும்பான்மை இனத்தவர்கள் ஏழு பேர் யாழ்.பல்கலைக்கழகத்துக்கு நியமனம்!

கொழும்பு, ஒக். 29

முன்னாள் ஜனாதிபதி கோட்டாபய ராஜபக்ஷவினால் அறிமுகப்படுத்தப்பட்ட ஒரு லட்சம் வேலைவாய்ப்புத் திட்டத்தின் கீழ் பயிற்சி பெற்ற தென்னிலங்கையைச் சேர்ந்த பெரும்பான்மையினத்தவர்களை யாழ்ப்பாணப் பல்கலைக்கழகத்தில் உள்ள சிற்றூழியர் பதவி வெற்றிடங்களுக்கு நியமிப்பதற்கு நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டுள்ளன என்று அறியவருகிறது.

பல்நோக்கு அபிவிருத்திச் செயலணித் திணைக்களப் பணிப்பாளரின் பணிப்புரைக்கு அமைய இந்த நியமனங்கள் வழங்கப்படவுள்ளன.

அங்கீகரிக்கப்பட்ட பணியாளர் வெற்றிடங்களுக்குப் பல்பணி மேம்பாட்டு உதவியாளர்களை வழங்குதல் என்ற தலைப்பின் கீழ் பல்கலைக்கழகங்களில் உள்ள பதவி வெற்றிடங்களுக்காக நியமனங்கள் வழங்கப்படவுள்ளன.


நாடளாவிய ரீதியில் ஒரு லட்சம் வேலைவாய்ப்புத் திட்டத்தின் கீழ் பயிற்சி பெற்ற ஆயிரத்து 139 பேர் நியமனத்துக்குத் தகுதி பெற்றவர்கள் எனப் பட்டியலிடப்பட்டுள்ள நிலையில், பெரும்பான்மையினத்தைச் சேர்ந்த 7 பேர் யாழ்ப்பாணம் பல்கலைக்கழகத்தில் உள்ள வெற்றிடங்களுக்கு நியமிக்கப்படவுள்ளனர்.

எதிர்வரும் 30ஆம் திகதிக்குள் இவர்களுக்கான நேர்காணல் மற்றும் ஆட்சேர்ப்பு நடவடிக்கைகளை முன்னுரிமை அடிப்படையில் நடத்தி முடிக்குமாறு பல்நோக்கு அபிவிருத்திச் செயலணித் திணைக்களப் பணிப்பாளரால் பல்கலைக்கழக மானியங்கள் ஆணைக்குழுவுக்கு அறிவுறுத்தல் வழங்கப்பட்டுள்ளது.

வடக்கு - கிழக்கு மாகாணங்களில் இருந்தும் ஒரு லட்சம் வேலைவாய்ப்புத் திட்டத்தின் கீழ் பயிற்சி பெற்ற பலர் தொழில் வாய்ப்புக்காக விண்ணப்பத்திருக்கும் நிலையில், யாழ்ப்பாணம் பல்கலைக் கழகத்தில் உள்ள பதவி வெற்றிடங்களுக்கு பெரும்பான்மையினத்தைச் சேர்ந்தவர்களை நியமிக்க நடவடிக்கை எடுத்துள்ளமை தமிழ் மக்கள் மத்தியில் விசனத்தை ஏற்படுத்தியுள்ளதுடன், பல்வேறு சந்தேகங்களையும் உருவாக்கியுள்ளது. (அ)

# மட்டக்களப்பில் பௌத்தம் ஒடுக்கப்பட்டு வருகின்றது

## ஓமல்பே சோபித தேரர் குற்றச்சாட்டு



மட்டக்களப்பு, ஒக். 28

மட்டக்களப்பில் பௌத்த மதம் ஒடுக்கப்படுவது தொடர்பில் கேள்வியெழுப்பிய ஓமல்பே சோபித தேரர், அரசியலமைப்புக்கமைய மக்களுக்கு வழங்கப்பட்டுள்ள மதச்சுதந்திரம் குறித்து ரணில் விக்கிரமசிங்க மக்களுக்கு தெளிவுபடுத்த வேண்டுமென அவர் வலியு றுத்தியுள்ளார்.

மட்டக்களப்பில் பௌத்த மக்கள் பல அசௌகரியங்களை எதிர்நோக்குவதாகவும் திபுல பெத்தான பகுதியில் வைக்கப்பட்ட புத்தரின் சிலை காணாமல் போயுள்ளதாகவும் மங்களராமய விகாரையின் விகாராதி பதி அம்பிட்டிய சுமனரத்ன குற்றஞ்சாட்டியுள்ள நிலையிலேயே, ஓமல்பே சோபித தேரர் இதனை நேற்று ஊடகங்களுக்கு தெரிவித்தார்.

அவர் மேலும் தெரிவிக்கையில் -

மட்டக்களப்பு மற்றும் அதனை சுற்றியுள்ள பகுதிகளில் புத்தரின் சிலையை வைக்க முடியாத நிலை ஏற்பட்டுள்ளது.

குறித்த பகுதியில் வேறு ஒரு நாடு அமைக்கப்பட்டுள்ளதா? கிழக்கில் கோவில்களை அமைக்கலாம். ஆலயங்கள் இருக்கலாம். முஸ்லிம் பள்ளிவாசல்கள் இருக்கலாம். அதில் எந்த பிரச்னையும் இல்லை.

நாடாளாவிய ரீதியில் மக்கள் அனைவரும் சமாதானத்துடன் தங்கள் மதச்சார்பான நடவடிக்கைகளை முன்னெடுக்கிறார்கள். இதற்கு யாரும் எந்த எதிர்ப்பையும் தெரிவிக்கவில்லை. அவ்வாறிருக்க ஏன் கிழக்கில், முக்கியமாக மட்டக்களப்பில் மாத்திரம் இவ்வாறான அசாதாரணமாக நடவடிக்கைகள் மேற்கொள்ளப்படுகின்றன?

சிறிலங்காவின் அரசியலமைப்புக்கமைய மக்களுக்குள்ள மதச்சுதந்திரம் குறித்து ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க தெளிவு படுத்தவேண்டும்.

வடக்கு மற்றும் கிழக்கு மாத்திரமின்றி நாடளாவிய ரீதியில் பிரிவினைகளை ஏற்படுத்தும் தரப்பினருக்கு எதிராக அவர் சட்ட நடவடிக்கைகளை எடுக்க வேண்டும். இது தொடர்பான முழு அதிகாரமும் அவருக்கு வழங்கப்பட்டுள்ளது - என்றார். (அ)

# தையிட்டி சிவன் ஆலயத்தில் பொங்கலிட்டு வழிபட்டவர்களுடன் பொலிஸ் முரண்பாடு!



யாழ்ப்பாணம், ஒக். 29

தையிட்டி சிவன் ஆலயத்தில் பொங்கலிட்டு வழிபட்டவர்களுடன் பொலிஸாருடன் முரண்பாட்டதாக தெரிவிக்கப்பட்டது.

தையிட்டியில் அமைக்கப்பட்ட சட்டவிரோத விகாரைக்கெதிராக ஒவ்வொரு பௌர்ணமி தினத்திலும் தமிழ்த் தேசிய மக்கள் முன்னணியால் முன்னெடுக்கப்படும் போராட்டம் நேற்று முன் தினம் மாலை ஆரம்பமானது.

பௌர்ணமி தினமான நேற்று குறித்த விகாரைக்கு தென்னிலங்கையிலிருந்து சிங்கள மக்கள் வழிபாடுகளுக்காக அழைத்து வரப்பட்ட சம காலப்பரப்பில் தையிட்டி விகாரைக்கு அண்மையிலுள்ள சிவன் கோயிலில் போராட்டக்காரர்களால் பொங்கல் வழிபாடுகளை மேற்கொள்ள ஆயத்தங்கள் மேற்கொள்ளப்பட்டன.

சிவன் ஆலயத்தில் ஒலிபரப்பப்படும் பக்திப் பாடல்கள் திஸ்ஸ விகாரையில் மேற்கொள்ளப்படும் பிரித் ஓதுதலுக்கு இடையூறாக காணப்படுவதாக கூறியே பொங்கல் வழிபாடுகளை மேற்கொண்டவர்களுடன் பொலிஸார் முரண்பட்டுள்ளனர்.

ஆனால் போராட்டத்தில் ஈடுபட்டவர்கள் பிரித் ஓதும் சத்தம் தமக்கும் கேட்பதாகவும், அதனை நிறுத்தினால் தாமும் பாடல் சத்தத்தை குறைப்பதாகவும் தெரிவித்தனர்.

இறுதியில் இரு தரப்பினரதும் செயற்பாடுகளைத் தடுக்க பொலிஸார் நடவடிக்கைகளை மேற்கொண்டதாக தெரிவிக்கப்படுகிறது. (அ)

# பட்ஜெட்டில் புதிய வரிகளை சேர்க்க அரசு திட்டம்!

கொழும்பு, ஒக். 29

2024ஆம் ஆண்டுக்கான பட்ஜெட் முன்மொழிவில், சொத்து வரி அல்லது பரம்பரை வரி மீதான சொத்து வரியை கொண்டு வர அரசாங்கம் தயாராகி வருகிறது.

ஒருவருக்குச் சொந்தமான சொத்துகளின் அளவை மதிப்பீடு செய்து, அதற்கேற்ப வரி விதிப்பதே இந்தப் புதிய வரியின் நோக்கமாகும்.


இந்த வரியில் சொத்துகள், வங்கி வைப்பு, அசையா சொத்து, காப்பீடு, ஓய்வூதியம், வணிக உரிமை மற்றும் நிதிப் பத்திரங்கள் உள்ளிட்ட தனிப்பட்ட சொத்துகளின் முழு மதிப்பும் அடங்கும். தற்போது அரசாங்கத்தின் வரி வருமானம் குறை வடைந்துள்ளதால் இந்த வரியை எதிர்வரும் வருடம் முதல் நடைமுறைப்படுத்துவது தொடர்பில் கலந்துரை யாடப்பட்டுள்ளது.

எவ்வாறாயினும், வீடு, வாகனம், சிறிய காணி போன்ற அடிப்படை சொத்துக்களை தவிர்த்து ஒருவர் சம்பாதித்த பிற கூடுதல் சொத்துக்களுக்கு இந்த வரிகளை விதிக்க முன்மொழியப்பட்டுள்ளது. (அ)

இப்பத்திரிகை 707, ஆஸ்பத்திரி வீதி, யாழ்ப்பாணம் என்ற முகவரியில் அமைந்துள்ள ஈழநாடு பிறைவேற் லிமிட்டெட் நிறுவனத்தினரால் 29.10.2023 அன்று ஏ9 வீதி, நாவற்குழியில் உள்ள ஈழநாடு பிறைவேற் லிமிட்டெட் அச்சகத்தில் அச்சிட்டு வெளியிடப்பட்டது.

சு.அருண் பிரசாத்

# மனித நாகரிகத்தின் திசைவழி




“சினமுற்ற ஒருவன் கோபாவேசத்தில் பாறையைத் தூக்கி எறிவதற்குப் பதிலாக வார்த்தையை எறிந்த சமயத்தில் மனித நாகரிகம் தோன்றிவிட்டது” என நாகரிகத்தின் தோற்றம் குறித்து சிக்மண்ட் ஃபிராய்ட் கூறியதாகப் பிரபலமான கூற்று ஒன்று உண்டு.

மனித நாகரிகத்தின் இயங்குவிசையாக மொழி பரிணமித்தது ஒருபுறம் இருந்தாலும், மறுபுறம் கற்களும் கம்புகளுமாக இருந்து காலப்போக்கில் மேம்பட்டுவிட்ட தொழில்நுட்பங்களுடன் கூடிய ஆயுதங்களே மனித நாகரிகத்தின் திசைவழியைத் தீர்மானிக்கும் முதன்மையான விசையாக எல்லா காலத்திலும் இருந்து வந்தன; இன்றும் அவ்வாறே இருந்து வருகின்றன. ஆக, ஒவ்வொரு காலகட்டத்திலும் ‘மனித நாகரிகம்’ என்றால் என்ன என்பதை வரையறுப்பதைத் தீர்மானிக்கும் கருவிகளாக ஆயுதமும் மொழியும் இருந்துவருகின்றன என்பது உண்மை.

மனித நாகரிகம் அளப்பரிய சாத்தியங்களை எட்டி முன்னேறிக்கொண்டிருப்பதாக நம்பப்படும் இந்த 21ஆம் நூற்றாண்டில்தான், இரண்டு வெவ்வேறு இனக்குழுக்கள் ஒரே நிலப்பகுதியில் ஒன்றிணைந்து இணக்கமாக வாழ்வது பிரச்சினைக்குரிய நிலையாக - நாகரிகத்தின் வெட்கக்கேடான ஓர் அம்சமாகத் தொடர்கிறது. அறிவியல்-தொழில்நுட்ப ரீதியில் மனித நாகரிகம் எத்தகைய எல்லைகளைக் கடந்தாலும் மற்றவை (other) மீதான கடக்க முடியாத வெறுப்பும் சகிப்பின்மையும் நாகரிகத்தின் அழிக்க முடியாத கறைகளாக உள்ளன.

ஆனானப்பட்ட (தத்துவவியலாளர்) சார்த்ரே (Jean-Paul Sartre), “நரகம் என்பது மற்றமைதான்” (The other is hell) என்கிற அவப்புகழ் பெற்ற வரியை எழுதிக் கடுமையான எதிர்வினைகளைப் பெற்றார். பின்னாள்களில் அதற்கு அவர் வருத்தம் தெரிவித்தாலும்,மற்றமை பற்றிய விவாதங்களில் எல்லாம் எடுத்தாளப்படும் ஒரு கருத்தாகவே அது இன்றளவும் தொடர்கிறது.

**தோட்டம், விலங்குகள், கரையான்கள்**

“ஐரோப்பா ஒரு தோட்டம். நாம் ஒரு தோட்டத்தை உருவாக்கியுள்ளோம். இங்கு எல்லாமே செயல்படுகிறது. அரசியல் சுதந்திரம், பொருளாதாரச் செழுமை, சமூகக் கூட்டிணைவு ஆகியவற்றின் சிறந்த கலவையாகும்... உலகின் பெரும்பாலான மற்ற பகுதிகள் காடாக உள்ளன. அந்தக் காடுகள் ஐரோப்பா என்கிறஸ தோட்டத்தை ஆக்கிரமிக்கும்” - ஐரோப்பிய ஒன்றியத்தின் வெளியுறவு-பாதுகாப்புக் கொள்கைகளுக்கான பிரதிநிதி ஜோசப் போரெல், இனவாதம் கொப்பளிக்கும் இந்த ஐரோப்பிய மையவாதக் கருத்தை அக்டோபர் 2022இல் நிகழ்த்திய உரை ஒன்றில் வெளிப்படுத்தினார்.

இந்தக் கருத்துக்குச் சர்வதேச அளவில் கடும் கண்டனங்கள் எழுந்த நிலையில், ‘தோட்டம் - காடு’ ஒப்புமைக்கு மன்னிப்புக் கோரினாலும் இன்றைய புவிஅரசியலின் பின்னணியில் தான் பேசியவை சரிதான் என்று போரெல் வாதிட்டார். கடந்த 500 ஆண்டுகளில், ‘ஐரோப்பியத் தோட்டக்காரர்கள்’ உலகின் பெரும்பாலான ‘காடு’களை ஆக்கிரமித்துச் சீரழித்த காலனியாதிக்க வரலாற்றை நினைவில்கொள்ள அவர் ஒருவேளை (விருப்பத்துடன்) மறந்திருக்கலாம்.

போரெலின் கருத்து ஐரோப்பிய மேட்டிமை வாதத்தின் குரலாக ஒலித்தாலும் மற்றமை மீதான இத்தகைய குரூர மனப்பான்மையை ஒத்த கருத்துகளை மேற்கு - கிழக்கு பாகுபாடில்லாமல் தலைவர்கள் பலரும் தொடர்ச்சியாக வெளிப்படுத்தி வருகின்றனர்.

பாலஸ்தீனத்தை ஆக்கிரமித்து உருவான இஸ்ரேல், கடந்த 75 ஆண்டுகளாகப் பாலஸ்தீன மக்கள் மீது சொல்லொணா அடக்குமுறைகளை ஏவிவருகிறது. இந்நிலையில், இஸ்ரேலுக்கு எதிராக ஹமாஸ் தொடங்கிய அதிரடித் தாக்குதலை எதிர்கொள்வது குறித்த இஸ்ரேலியப் பாதுகாப்பு அமைச்சர் யோவ் காலன்ட் - இன் பேச்சிலிருந்து, மனித ‘நாகரிகம்’ இன்று வந்தடைந்துள்ள இடத்தை நாம் அடையாளம் காணமுடியும்: “நாங்கள் மனித விலங்குகளுக்கு எதிராகப் போராடிக் கொண்டிருக்கிறோம்.” அதேபோல், இந்திய உள்துறை அமைச்சர் அமித் ஷா, 2019 இல்நடந்த ஒரு கூட்டத்தில் குடியுரிமை பற்றிப் பேசும்போது “வங்கதேசத்தில் இருந்து வந்தவர்கள் கரையான்கள் போன்றவர்கள்” என்கிற கருத்தை வெளிப்படுத்தியிருந்தார்.

> சினமுற்ற மனிதன் கோபாவேசத்தில் ஆயுதங்களை வீசுவது இன்றும் தொடர்ந்து கொண்டு தான் இருக்கிறது. பேச்சுவார்த்தைகள் என்கிற பெயரில் மொழி எனும் அதிகாரத்தைக் கொண்டும் மனிதன் போரிட்டு வருகிறான்.

சினமுற்ற மனிதன் கோபாவேசத்தில் ஆயுதங்களை வீசுவது இன்றும் தொடர்ந்து கொண்டு தான் இருக்கிறது. பேச்சுவார்த்தைகள் என்கிற பெயரில் மொழி எனும் அதிகாரத்தைக் கொண்டும் மனிதன் போரிட்டு வருகிறான்.

ஒருபுறம், அரசியல்ரீதியாக மனித நாகரிகத்தை முன்னெடுத்துச் செல்லும் செல்வாக்கும் அதிகாரமும் பொறுப்பும் கொண்ட தலைவர்களும் அரசாங்கப் பிரதிநிதிகளும் பிற நாடுகளைக் காடுகளாகவும் பிற மனிதர்களை விலங்குகளாகவும் கரையான்களாகவும் கருதும் நிலை. மறுபுறம், விளையாட்டில் மாற்று மதத்தைச் சேர்ந்த எதிர்நாட்டு வீரரை மதக் கோஷங்களால் அவமதிக்கும் மக்கள் கூட்டம்.

அடிப்படையில் மனிதர்கள் சுயநலமிக்கவர்கள், தீய இயல்பைக் கொண்டவர்கள் என்பதை நிரூபிக்கும் விதமான அறிவியல் ஆய்வுகள், வரலாற்று நூல்கள் பலவும் தொடர்ச்சியாக வெளிவந்து கொண்டிருக்கும் நிலையில், மறுபுறம் ருட்கர் பிரெக்மன் போன்ற ஆய்வாளர்கள் மனித குலத்தின் நல்லியல் புகளையும் ஆராய்ச்சி செய்து மனித குலம் பற்றிய ‘நம்பிக்கைக்குரிய’ நூல்களை (உதாரணம்: ‘Humankind: A Hopeful History’) எழுதிவருவது கவனிக்கத்தக்கது.



**வீழும் பூவுலகு**

மனித நாகரிகம் அரசியல்-பண்பாட்டுத் தளங்களில் வருந்தத்தக்க நிலையை எட்டியிருக்கிறது என்றால், சுற்றுச்சூழல் சார்ந்த மனிதச் செயல்பாடுகள் ஏற்படுத்திக் கொண்டிருக்கும் விளைவுகள் அந்நிலையை மேலும் சிக்கலாக்கியிருக் கின்றன. எல்லாமே இன்று ஒன்றோடு ஒன்று பின்னிப் பிணைந்திருக்கும் சூழ லில், மனித சமுதாயத்தின் எதிர்காலம் பற்றி அறிஞர் நோம் சோம்ஸ்கியின் எச்சரிக்கை திடுக்கிடச் செய்கிறது: “இன் னும் இரண்டு தலைமுறைகளில், ஒருங்கி ணைந்த மனித சமுதாயம் நீடித்திருக்கப் போவதில்லை. இது மக்களின் அறிவில் ஆழமாகப் பதிவுசெய்யப்பட வேண்டும். ஒட்டுமொத்த மனிதகுல வரலாற்றில் இதுபோன்று முன்பு நிகழ்ந்ததில்லை. ஒருங்கிணைந்த மனித சமுதாயம் மேலும் இரண்டு தலைமுறைகளுக்குத் தாக்குப் பிடிக்குமா என்பது தற்போதைய தலை முறை எடுக்கும் முடிவில்தான் இருக்கிறது.”

புவி என்பது மனிதர்களால் ஆனதோ மனிதர்களுக்கு மட்டுமானதோ அல்ல. அது பல கோடிக்கணக்கான உயிர்களுடனும் உயிரற்ற பொருள்களுடனும் மனிதர்களையும் ஓர் அங்கமாகக் கொண் டிருக்கிறது. காடு, மலை, கடல் போன்ற வற்றை உள்ளடக்கிய அதன் புவியியல் அமைப்புகள் மிகச் சிக்கலானவை. அவற்றுள் காலநிலை அமைப்பும் ஒன்று. பல நூற்றாண்டுகளாகச் சூழலியல் சமநிலையை இவை பேணிவந்தன.

ஆனால், புவியின் பிரம்மாண்ட வரலாற்றில் மிக அண்மைக் காலத்தில் தோன்றிய மனிதர்களால் அந்தச் சமநிலை கடுமையாகக் குலைக்கப்பட்டிருக்கிறது. மனிதச்செயல்பாடுகள் புவியின் சுற்றுச்சூழல், புவியியல் அமைப்புகள் ஆகியவற்றில் தாக்கம் செலுத்தி, அதன்போக்கை மாற்றியமைத்திருக்கும் இந்தக் காலகட்டத்துக்குப் புவியியல் அடிப்படையில் ‘ஆந்த்ரோபோசீன்’ (Anthropocene) என்கிற பெயரை அறிவியலாளர்கள் முன்மொழிந்துள்ளனர்.

கட்டுக்குள் அடங்காத காட்டுத் தீ, தாள முடியாத வெப்ப அலைகள், தப்பிக்க முடியாத பெருவெள்ளம் என மனிதச் செயல்பாடுகளால் தூண்டப்பட்ட காலநிலை மாற்றத்தின் விளைவுகள், உலக வரைபடத்தில் எந்தப் புள்ளியைத் தொட்டாலும், அங்கு ‘புதிய இயல்’பாக மாறிவருகின்றன.

அதே வேளை, அமெரிக்காவில் ஒரு நாளில் விமானத்தில் பயணித்தவர்களின் எண்ணிக்கை புதிய உச்சத்தைத் தொட்டது (ஜூன் 30: 28,83,595 பேர்)' ஐஏஜி, ஏர் பிரான்ஸ்-கேஎல்எம் போன்ற ஐரோப்பிய விமான சேவை நிறுவனங்கள் உச்சபட்ச லாபத்தை ஈட்டின. (கச்சா) எண்ணெய், நிலக்கரி ஆகியவற்றின் உற்பத்தியில் புதிய உச்சம் எனக் காலநிலை மாற்றத்துக்குப் பங்களித்தும் மனிதச் செயல்பாடுகளில் முன்பைவிட தீவிரம்கூடியிருப்பது உண்மையில் வெட்கக் கேடானது.

உலக மக்கள்தொகை இன்று 800 கோடியைத் தாண்டிவிட்டது. காலநிலை மாற்றத்தின் விளைவுகளால், வளங்கள் கட்டுப்பாடின்றி குறைந்து வருகின்றன் பூவுலகின் உயிர்ப்பன்மைச் சுருங்கிக் கொண்டிருக்கிறது. ஏராளமான உயிரினங்கள் அற்றுப்போய்க்கொண்டிருக் கின்றன.

சுற்றுச்சூழலைப் பொறுத்தமட்டில், மனித நாகரிகம் ஏற்கெனவே தோல்வியின் விளிம்பைத் தொட்டு நிற்கிறது. சுற்றுச்சூழலைக் காப்பாற்றுவதன் மூலம், சமூகத்தில் அரசியல் - பண்பாட்டு நிலையின் சமநிலையைப் பேணுவது மனித குலம் இன்று எதிர்கொண்டிருக் கும் முக்கியச் சவால். இதை உணர்ந்து கொள்ளும் சுரணை நமக்கு இருக்கிறதா என்பது அதைவிட முக்கியமான கேள்வி.



**திரைப்படம் - மார்கழி திங்கள்**
**இயக்கம் - மனோஜ் கே பாரதிராஜா**
**இசை - இளையராஜா**
**நடிப்பு - ஷியாம் செல்வன், ரக்‌ஷனா, பாரதிராஜா**




தமிழ் திரையுலகில் ஒரு காலத்தில் எந்தவிதமான காதல் கதைகளையும் ரசிகர்கள் ஓரளவுக்கு ரசித்துப் பார்த்தார்கள். ஆனால், சில விதமான காதல் கதைகள் போகப்போக ரசிகர்களுக்குப் போரடித்துவிட்டன. அப்படியான ஒரு கதையைத்தான் இந்தப் படத்தில் கொடுத்திருக்கிறார்கள்.

பாடசாலையில் படிக்கும் மாணவன், மாணவி இருவரிடைய, 'அறியாத வயதில், புரியாத மனதில்' காதல் என்பதெல்லாம் தற்போது மக்களிடம் கடும் அதிர்வலைகளை ஏற்படுத்தியுள்ளது. இப்படிப்பட்ட காதல் கதைகளை பார்த்து சிறுவர், சிறுமியர்கூட கெட்டுப் போகும் அளவுக்கு உள்ளது என்பதுதான் பலரது கருத்து. சாதி மீறிய காதல் என காரணத்தை சொல்லி இந்தப் படத்தில் அப்படியான ஒரு பள்ளிக் காதலைச் சொல்லி இருக்கிறார் இயக்குநர் மனோஜ் கே பாரதிராஜா.

பெற்றோர் இறந்து போய் விட்டதால் தாத்தா பாரதிராஜாவால் வளர்க்கப்படுகிறார் ரக்‌ஷனா. பள்ளியில் முதல் மாணவியாக இருப்பவர். அவருடைய பள்ளியில் நன்றாகப் படிக்கும்




மற்றொரு மாணவர் ஷியாம் செல்வன். ரக்‌ஷனா, ஷியாம் செல்வன் இருவரும் வெவ்வேறு சாதியை சேர்ந்தவர்கள். இருவருக்கும் காதல் வருகிறது. தனது தாத்தாவிடம் காதலைச் சொல்கிறார் ரக்‌ஷனா. அதைக் கேட்ட அவரும் கல்லூரி சென்று படித்து முடித்த பின் திருமணம் செய்து வைப்பதாகக் கூறுகிறார். மூன்று ஆண்டுகள் கழித்து ஊருக்குத் திரும்பி வருகிறார். ஆனால், ஷியாம் குடும்பத்தினர் அந்த ஊரிலேயே இல்லை. அவர்கள் எங்கே போனார்கள் எனத் தேட ஆரம்பிக்கிறார் ரக்‌ஷனா. இதன் பின் என்ன நடக்கிறது என்பதுதான் படத்தின் மீதிக் கதை.

கடந்த சில வருடங்களில் வரும் தமிழ் படங்களில் காதலர்களுக்கு எதிர்ப்பாக இருக்கும் அதே சாதி விஷயத்தைத்தான் இந்தப் படத்திலும் கையாண்டிருக்கிறார்கள். ஆனால், அதிர்ச்சியைத் தரக்கூடிய ஒரு உச்சக்கட்ட காட்சியை வைத்துவிட்டு அதன் தாக்கம் நம் மனதில் அழுத்தமாகப் பதியாதபடி சொல்லியிருக்கிறார்கள்.

புதுமுகங்கள் ஷியாம் செல்வன், ரக்‌ஷனா பள்ளி மாணவன், மாணவியாக நடித்திருக்கிறார்கள். ஷியாமை விட ரக்‌ஷனாவுக்குத்தான் படத்தில் காட்சிகளும், முக்கியத்துவமும் அதிகமாக இருக்கின்றன. அவரும் முதல் பட நாயகி போலில்லாமல் சமாளித்து நடித்திருக்கிறார். கொடுத்த கதாபாத்திரத்தை சரியாகச் செய்ய முயற்சித்திருக்கிறார் புதுமுக நடிகர் ஷியாம் செல்வன்.

தாத்தா கதாபாத்திரத்தில் பாரதிராஜா, யோசித்து யோசித்துப் பேசி நடிக்கிறார். வில்லனாக ஒரு சில காட்சிகளில் வந்து போகிறார் சுசீந்திரன். ரக்‌ஷனாவின் தோழியாக நக்‌ஷா.

இளையராஜா அவருடைய முந்தைய படங்களின் இசையை ஞாபகப்படுத்துகிறார்.

ஒரு வரியில் சொல்லக்கூடிய ஒரு கதைய இவ்வளவு நீட்டி முழக்கி சொல்லியிருக்கத் தேவையில்லை.

# வசூல் வேட்டை

லோகேஷ் கனகராஜ் இயக்கத்தில் விஜய் நடித்துள்ள 'லியோ' திரைப்படம் வெளியான 7 நாட்களில் உலகளவில் 461 கோடி (இந்திய) ரூபாய்க்கும் அதிகமாக வசூலித்துள்ளதாக படத்தின் தயாரிப்பு நிறுவனம் அறிவித்துள்ளது.

'மாஸ்டர்' படத்துக்கு பிறகு விஜய் - லோகேஷ் கனகராஜ் கூட்டணியில் உருவான 'லியோ' திரைப்படம் கடந்த ஒக்ரோபர் 19ஆம் திகதி திரையரங்குகளில் வெளியானது.

கலவையான விமர்சனங்களை பெற்று வரும் இப்படம் வெளியான முதல் நாளில் உலகம் முழுவதும் ரூ.148.5 கோடி வசூலை ஈட்டியது.

இந்நிலையில், படம் வெளியாகி 7 நாட்கள் கடந்த நிலையில், உலக அளவில் இதுவரை 461 கோடி ரூபாய்க்கும் அதிகமான வசூலை 'லியோ' ஈட்டியுள்ளதாக தயாரிப்பு நிறுவனம் அதிகாரபூர்வமாக அறிவித்துள்ளது.



# அன்னபூரணியான நயன்தாரா

நயன்தாராவின் 75ஆவது படத்துக்கு 'அன்னபூரணி' என்று பெயர் வைக்கப்பட்டுள்ளது. இதை ஷங்கரிடம் உதவி இயக்குநராகப் பணியாற்றிய நிலேஷ் கிருஷ்ணா இயக்குகிறார். ஜெய், சத்யராஜ் உட்பட பலர் நடிக்கின்றனர். 'ராஜா ராணி'படத்துக்கு பிறகு நயன்தாரா, ஜெய், சத்யராஜ் 3 பேரும் இதில் மீண்டும் இணைந்துள்ளனர்.

கே. எஸ். ரவிகுமார், ரெடின் கிங்ஸ்லி, சுரேஷ் சக்கரவர்த்தி, சச்சு, கார்த்திக் குமார் உட்பட பலர் நடிக்கின்றனர். சத்யன் சூரியன் ஒளிப்பதிவு செய்கிறார்.




# சூர்யாவின் மிரட்டல்

சுதா கொங்கரா இயக்கத்தில் நட்சத்திர பட்டாளமே நடிக்கும் புதிய படத்தின் அறிவிப்பை படக்குழு வெளியிட்டுள்ளது. சுதா கொங்கரா இயக்கத்தில் சூர்யா நடிப்பில் கடந்த 2022ஆம் ஆண்டு வெளியான 'சூரரைப் போற்று' திரைப்படம் ரசிகர்களிடையே வரவேற்பை பெற்றதுடன் விருதுகளையும் அள்ளியது. இந்நிலையில், இந்தக் கூட்டணி மீண்டும் இணைய உள்ளது.

இதன்படி சுதா கொங்கரா இயக்கும் புதிய படத்தில் சூர்யாவுடன் இணைந்து துல்கர் சல்மான், நஸ்ரியா, விஜய் வர்மா உள்ளிட்ட பலர் நடிக்கின்றனர். இந்தப் படத்துக்கு ஜி. வி. பிரகாஷ்குமார் இசையமைக்கிறார். இது அவரின் 100ஆவது படம் என்பது குறிப்பிடத்தக்கது.

இது தொடர்பான அறிவிப்பு காணொலி படத்தின் தலைப்பில் 'புறநானூறு' என எழுதப்பட்டுள்ளது. ஆனால், அதற்கு மேல் உள்ள இரண்டு வார்த்தைகள் மறைத்து வைக்கப்பட்டுள்ளதால் படத்தின் தலைப்பை படக்குழு முழுமையாக வெளியிடவில்லை. படத்தின் நடிகர்கள் தேர்வு ரசிகர்களை ஈர்த்துள்ளது.

# கமல் - மணி இணைவு



இயக்குநர் மணிரத்னம் இயக்கத்தில் கமல்ஹாசன் நடிக்கும் பெயரிடப்படாத அவரின் 234ஆவது திரைப் படத்தின் பணிகள் தொடங்கியுள்ளதை படக்குழு காணொலி வெளியிட்டு அறிவித்துள்ளது.

ஷங்கர் இயக்கத்தில் 'இந்தியன் 2' படத்தை கமல்ஹாசன் முடித்துவிட்டார். அடுத்து பிரபாஸின் 'கல்கி 2829 ஏ.டி', ஹெச்.வினோத், மணிரத்னம் இயக்கும் படங்களில் நடிக்கவுள்ளார்.

இந்நிலையில், கமல்ஹாசன் - மணிரத்னம் 35 ஆண்டுகளுக்குப் பிறகு மீண்டும் இணையும் ''கமல் 234' படத்தின் காணொலி பதிவு வெளியானது. இந்தப் படத்தை மெட்ராஸ் டாக்கீஸ், ராஜ்கமல் பிலிம்ஸ் இன்ரர்நஷனல், ரெட் ஜெயன்ட் இணைந்து தயாரிக்கின்றன. ஏ.ஆர். ரஹ்மான் இசையமைக்கிறார்.

# ஜனவரியில் 'தங்கலான்'

பா.ரஞ்சித் இயக்கத்தில் விக்ரம் நடிக்கும் 'தங்கலான்' படம் அடுத்த ஆண்டு ஜனவரி 26ஆம் திகதி திரையரங்குகளில் வெளியாகும் என அறிவிக்கப்பட்டுள்ளது.

பா. ரஞ்சித்தும், விக்ரமும் இணையும் படம் 'தங்கலான்'. அதிக பொருட்செலவில் வரலாற்று பின்னணியுடன் உருவாகிவரும் இப்படத்துக்கு ஜி. வி. பிரகாஷ்குமார் இசையமைத்துள்ளார். தமிழ், தெலுங்கு, இந்தி, மலையாளம், கன்னட மொழிகளில் இந்தப் படம் வெளியாக இருக்கிறது.

பார்வதி, மாளவிகா மோகனன், பசுபதி உள்ளிட்ட பலர் நடித்துள்ளனர். இப்படத்தின் படப்பிடிப்பு கர்நாடகா மாநிலத்தில் நடைபெற்றது. படத்தின் படப்பிடிப்பு அண்மையில் நிறைவடைந்து அடுத்த கட்டப் பணிகள் தீவிரமாக நடைபெற்று வருகிறது.



# சர்ச்சையாகும் நடுவரின் முடிவு




நேற்று முன்தினம் சென்னையில் நடந்த தென்னாபிரிக்கா - பாகிஸ்தான் அணிகளிடையேயான உலகக் கிண்ணப் போட்டி கடைசி வரை த்ரில்லாக சென்று, இறுதியில் தென்னாபிரிக்கா அணி ஒரு விக்கெட் வித்தியாசத்தில் வென்றிருக்கிறது.

இந்தப் போட்டியின் முக்கியமான கட்டத்தில் நடுவர்கள் பாகிஸ்தான் அணிக்கு எதிராக முடிவு வழங்கிவிட்டனரென இணையதளத்தில் பயங்கரமான விமர்சனங்கள் முன்வைக்கப்படுகின்றன. போட்டியில் என்ன நடந்தது? நிஜமாகவே நடுவர்கள் பாகிஸ்தானுக்கு எதிராகச் செயல்பட்டார்களா?

46ஆவது ஓவரின் கடைசி பந்தில்தான் அந்தச் சம்பவம் நடந்திருந்தது. அந்த சமயத்தில் தென்னாபிரிக்க அணிக்கு வெற்றியை எட்ட 8 ஓட்டங்கள் தேவைப்பட்டன. கையில் ஒரு விக்கெட்டை மட்டுமே வைத்திருந்தார்கள். களத்தில் கேசவ் மகாராஜும் தப்ரேஸ் ஷம்சியும் இருந்தார். தப்ரேஸ் ஷம்சிதான் பந்தை எதிர்கொள்ளவிருந் தார். ஹரீஷ் ரவூப் அந்த ஓவரில் நிகி டியை சிறப்பாக வீழ்த்தியிருந்தார். அந்தக் கடைசிப் பந்தையும் ரொம்பவே அழகாக தப்ரேஸ் ஷம்சியை நோக்கி உள்பக்கமாக நன்றாகத் திருப்பி வீசினார். பந்தை எதிர்கொள்ள முடியாத ஷம்சி துடுப்பில் வாங்கினார். உடனே ஹரீஸ் ரவூப் உட்பட பாகிஸ்தான் அணி மொத்தமும் எல். பி. டபிள்யூ ஆட்டமிழப்பு முறை கோரியது. ஆனால், களநடுவர் ஆட்டமிழப்பு கொடுக்கவில்லை.

உடனே பாபர் அசாம் மீள் பரிசீலனை முடிவை எடுத்தார். மூன்றாம் நடுவரின் ஆய்வில் பந்து விக்கெட்டை உரசி செல்வது நன்றாகத் தெரிந்தது. ஆனாலும், மூன்றாம் நடுவர் அதை நடுவரின் தீர்மானம் (Umpires Call) என கொடுத்தார். அதாவது, களநடுவரின் முடிவே இறுதியானது என்றார். களநடுவர் ஏற்கெனவே ஆட்டமிழப்பு இல்லை என்று கொடுத்திருந்ததால் தப்ரேஸ் ஷம்சி தப்பித்திருந்தார். தென்னாபிரிக்க அணியும் த்ரில் வெற்றியைப் பெற்றது.

இந்த இடத்தில்தான் அதிக விமர்சனங்களும் எழுந்துள்ளன. பந்து விக்கெட்டை உரசுவது தெளிவாகத் தெரிந்தும் நடுவர் ஆட்டமிழப்பு கொடுக்கவில்லை. நடுவர்களின் தவறான முடிவுகளை குறைக்க வேண்டும் என்றுதான் தொழில்நுட்பத்தை பயன்படுத்துகிறார்கள். அதிலும் நடுவர் தீர்மானம் என ஒன்று இருப்பது அநியாயமாக இருக்கிறது. ஷம்சிக்கு மட்டும் ஆட்டமிழப்பு வழங்கப்பட்டிருந்தால் பாகிஸ்தான் வென்றிருக்கும். அவர்களுக்கான அரையிறுதி வாய்ப்பும் பிரகாசமாகியிருக்கும்.

நடுவர்களின் தவறான முடிவுதான் எல்லாவற்றையும் மாற்றிவிட்டது என இணைய சமூகம் கொந்தளித்துக் கொண்டிருக்கிறது. ரசிகர்கள் மட்டுமல்ல முன்னாள் வீரர்களுமே இந்த விஷயத்தை பேசத் தொடங்கியிருக்கின்றனர்.

“பந்து விக்கெட்டைத் தாக்கினால் அது ஆட்டமிழப்புதான். அதில் நடுவரின் முடிவை கேட்பதற்கு என்ன இருக்கிறது. பிறகு தொழில்நுட்பத்தை பயன்படுத்தி என்ன பயன்? இங்கே மோசமான நடுவர் தீர்ப்பு மற்றும் ஐ.சி.சி-யின் மோசமான விதிகளால் பாகிஸ்தான் ஓர் உலகக் கிண்ணப் போட்டியை இழந்திருக்கிறது. ஐ.சி.சி தங்களின் விதிமுறையை மாற்ற வேண்டும்!” என பதிவிட்டுள்ளார் இந்திய அணியின் முன்னாள் பந்துவீச்சாளர் ஹர்பஜன் சிங்.

எல். பி. டபிள்யூ ஆட்டமிழப்புக்களுக்கு மீள் பரிசீலனைக்கு செல்லும் போது இப்போதைக்கு ஒரு முறை பின்பற்றப்பட்டிருக்கிறது. அதாவது அந்த பந்து டிராக்கரில் பார்க்கையில் பந்தின் 50வீதம் அல்லது அதற்கு மேல் ஸ்டம்பைத் தாக்கியிருந்தால் ஆட்டமிழப்பு கொடுத்துவிடுவார்கள். 50வீதத்துக்கு கீழ்தான் பந்து விக்கெட்டை தாக்கியிருக்கிறது எனில் அதை நடுவரின் தீர்ப்பு என கொடுத்துவிடுவார்கள். அதன்படி களநடுவர் ஆட்டமிழப்பு கொடுத்திருந்தால் ஆட்டமிழப்பு இல்லையேல், ஆட்டமிழப்பு இல்லை. ஹரீஸ் ரவூப் விஷயத்தில் இதுதான் நடந்தது. அவர் வீசிய பந்துக்கு மீள்பரிசீலனைக்கு சென்று பந்து ட்ராக்கரில் பார்க்கையில் பந்து விக்கெட்டை உரசி செல்வதை போலத்தான் இருந்தது. அதாவது 50வீதத்துக்கும் குறைவான பந்தின் பகுதிதான் விக்கெட்டில் பட்டிருந்தது. அதனால்தான் மூன்றாம் நடுவர் நடுவரின் தீர்ப்பு என கொடுத்தார்.

சரி இந்த 50வீத கணக்கெல்லாம் எதற்கு? ஏனெனில், இப்போது பயன்படுத்தப்படும் இந்த தொழில்நுட்பம் 100வீத துல்லியமான முடிவை கொடுக்கக்கூடியது இல்லை. ஒரு கணிப்பாகத்தான் பந்து இந்தத் திசையில் பயணித்து இப்படி விக்கெட்டைத் தாக்கியிருக்கும் என காட்டுகிறது. அதில் கொஞ்சம் தவறு இருக்கவும் வாய்ப்பிருக்கிறது. ஏனெனில், இது சாத்தியங்களின் படி காட்டப்படும் கணிப்புதான். இதனால்தான் நடுவரின் தீர்ப்பு என்ற விஷயம் கொண்டு வரப்படுகிறது.

இதைத்தான் ஹர்ஷ போக்லேவும் தனது பதிவில் விரிவாக விளக்கியிருக்கிறார். அதாவது, ”நடுவரின் தீர்ப்பு அல்லது முடிவு என்பதை விளக்க இதுதான் சரியான நேரம். பந்து வீரரின் துடுப்பில் பட்டு எங்கே சென்றிருக்கும் என்பதன் கணிப்பைத்தான் நாம் பார்க்கிறோம். 50வீத்துக்கு மேல் பந்து ஸ்டம்பைத் தாக்கியிருந்தால் நாம் உறுதியாகச் சொல்லிவிடலாம் அது ஆட்டமிழப்புதான். ஒருவேளை 50வீதத்துக்கும் கீழ்தான் பந்து விக்கெட்டைத் தாக்கியிருக்கிறது என்றால் அது சந்தேகம்தான். அது விக்கெட்டை தாக்கியிருக்கவும் செய்யலாம் அல்லது தாக்காமலும் சென்றிருக்கலாம். அந்த மாதிரியான சமயங்களில்தான் நடுவரின் முடிவு என்பது பயன்படுகிறது. இதுதான் நியாயமான அணுகுமுறை என நினைக்கிறேன். இப்போது பயன்படுத்தப்படும் தொழில்நுட்பத்தால் 100 வீதம் துல்லியமான முடிவுகளைக் கொடுக்க முடியவில்லை. வருங்காலத்தில் இந்த தொழில்நுடபமெல்லாம் நல்ல முன்னேற்றமடைந்து பந்து ஸ்டம்பை உரசினாலே அது 100வீதம் சரியானதாக இருக்கும் என தீர்க்கமாக முடிவை அறிவிக்கும் நாள் வரும்” என்றார்.

ஹர்ஷா போக்லேவின் விளக்கம்தான் ரொம்பவே தெளிவானது. ஆனால், இதற்கும் ஹர்பஜன் தனது மறுப்பை தெரிவித்திருக்கிறார். ”பந்து ஸ்டம்பில் பட்டாலே அது ஆட்டமிழப்புதான். இதை சாதாரணமாகவே புரிந்துகொள்ளலாம். பாகிஸ்தானுக்கு நடந்தது நாளை இந்தியாவுக்கும் நடக்கலாம். ஐ.சி.சி இந்த விதிமுறைகளை மாற்ற வேண்டும். ஒன்று களநடுவரிடம் முழு முடிவையும் கொடுங்கள் அல்லது தொழில்நுட்பத்தை முழுமையாக நம்ப வேண்டும்” என ஹர்பஜன் பதிலளித்திருக்கிறார்.

”நடுவரின் முடிவு என்பது போட்டியின் ஓர் அங்கம். இந்தப் போட்டியில் அது எங்களுக்குச் சாதகமாக அமையவில்லை. அவ்வளவுதான்” என பாகிஸ்தான் அணியின் தலைவர் பாபர் அசாமே இந்த விஷயத்தை நன்றாகவே கையாண்டுள்ளார்.

# இன்னும் ஓய்வில்லை...!




கடந்த ஆண்டு ஐ. பி. எல். தொடரில் டோனி தலைமையிலான சென்னை அணி 5ஆவது முறையாக கிண்ணத்தை தட்டிச் சென்று அசத்தியது. அந்தத் தொடரின் தொடக்கத்தில் இருந்தே இடது முழங்காலில் ஏற்பட்ட காயத்துடனே டோனி விளையாடி வந்தார். விக்கெட் காப்பாளர் பணியை அவர் சிறப்பாக கையாண்ட போதிலும் துடுப்பாட்டத்தின்போது ஓட்டங்களை விரைவாக ஓடி எடுப்பதில் சில போட்டிகளில் சிரமங்களை சந்தித்திருந்தார்.

போட்டி முடிந்த பிறகு மும்பையில் உள்ள தனியார் மருத்துவமனையில் முழங்காலில் சத்திர சிகிச்சை செய்து கொண்டார். இந்நிலையில், அண்மையில் பெங்களூரில் நடைபெற்ற நிகழ்ச்சி ஒன்றில் கலந்துகொண்ட டோனி முழங்காலில் செய்யப்பட்ட சத்திர சிகிச்சை குறித்துப் பேசியிருக்கிறார். “சத்திர சிகிச்சைக்கு பின் காயத்தில் இருந்து விடுபட்டுவிட்டேன்.

ஆனால், இன்னும் முழுமையாக குணமடையவில்லை. நவம்பர் மாதத்துக்குள் நல்ல முன்னேற்றம் இருக்கும் எனவும் முழுமையாக குணமடைவேன் என்றும் கூறியிருக்கிறார்கள். இப்போது தினசரி வாழ்க்கையில் எந்தப் பிரச்னையும் இல்லை” என்று தெரிவித்திருக்கிறார்.

2019 உலகக் கிண்ணத்தின் அரையிறுதியில் நியூசிலாந்துக்கு எதிராகத் தோற்று இந்திய அணி வெளியேறியிருந்தது. அந்தப் போட்டிக்குப் பிறகு கிட்டத்தட்ட ஒரு வருடத்துக்கு டோனி கிரிக்கெட்டே ஆடவில்லை. இந்திய அணியில் தன்னுடைய எதிர்காலம் என்ன என்பது குறித்தும் வெளியே பேசாமலேயே இருந்தார். கிட்டத்தட்ட ஒரு வருடம் கழித்து 2020 ஓகஸ்ட் 15 ஆம் திகதி டோனி தனது ஓய்வு முடிவை அறிவித்தார்.

அந்த ஒரு வருட தாமதம் குறித்தும் டோனி இப்போது பேசியிருக்கிறார். அவர் கூறியிருப்பதாவது, “நியூசிலாந்துக்கு எதிரான அரையிறுதி போட்டியில் தோற்றிருந்தோம். அந்த மாதிரியான நெருக்கமான போட்டிகளில் தோல்வியடையும் போது உணர்ச்சிகளைக்கூட கட்டுப்படுத்துவது கடினமாக இருக்கும். அப்போதே எனக்குள் என்னுடைய எதிர்காலம் குறித்து ஒரு முழுமையான திட்டம் இருந்தது. அதுதான் இந்திய அணிக்காக நான் ஆடும் கடைசிப்போட்டி என்பது எனக்குத் தெரியும். நான் அந்த நாளிலேயே ஓய்வு முடிவை எடுத்துவிட்டேன். ஆனால், அதை ஒரு வருடம் கழித்துதான் அறிவித்தேன்!“ என டோனி கூறியிருக்கிறார்.

மேலும், “நான் சர்வதேச கிரிக்கெட்டிலிருந்துதான் ஓய்வு பெற்றிருக்கிறேன். இன்னும் ஐ.பி.எல்லிலிருந்து ஓய்வு பெறவில்லை.“ எனவும் டோனி கூறியிருக்கிறார். இதன் மூலம் அடுத்த ஆண்டு ஐ.பி.எல் இல் ஆடவிருப்பதை டோனி உறுதி செய்திருக்கிறார்.

# மாகாண சபைத் தேர்தலை உடன் நடத்தி ஜனநாயக மரபைக் காப்பாற்றவேண்டும்

## சுரேஷ் பிரேமச்சந்திரன் சுட்டிக்காட்டு



யாழ்ப்பாணம், ஒக். 29

மாகாணசபைத் தேர்தலை உடனடியாக நடத்தி நாட்டின் ஜனநாயக மரபைக் காக்குமாறு ஈழ மக்கள் புரட்சிகர விடுதலை முன்னணியின் தலைவரும் ஜனநாயக தமிழ் தேசியக் கூட்டணியின் ஊடகப் பேச்சாளருமான சுரேஷ் பிரேமச்சந்திரன் அரசாங்கத்தைக் கோரியுள்ளார்.

அவர் விடுத்துள்ள ஊடக அறிக்கையில் மேலும் சுட்டிக்காட்டியுள்ளதாவது:-

2024ஆம் ஆண்டு தேர்தல் ஆண்டாக ஜனாதிபதி கூறியிருக்கின்றார். அநேகமாக அடுத்த வருடம் நவம்பர் மாதத்திற்கு முன்பாக ஜனாபதித் தேர்தல் நடைபெறும் என்றும் அதனைத் தொடர்ந்து பாராளுமன்றம் கலைக்கப்பட்டு பாராளுமன்றத் தேர்தல் நடைபெறும் என்றும் அறிவித்துள்ளார்.

வருகிற 2024ஆம் ஆண்டிற்கான வரவு-செலவுத் திட்டத்திலும் தேர்தலுக்கான நிதி ஒதுக்கப்படும் என்று தெரிவிக்கப்பட்டுள்ளது.

கடந்த இரண்டு வருடங்களுக்கும் மேலாக உள்ளூராட்சித் தேர்தல்கள் நடத்தப்படவில்லை. ஏற்கனவே வேட்புமனுக்கள் கோரப்பட்டு கட்சிகளும் சுயேட்சைக் குழுக்களும் பலகோடி நிதியை வேட்புமனு தாக்கலுக்காக கட்டியுள்ளனர்.

ஆனால், தேர்தலுக்கு நிதி இல்லை என்று அரசாங்கம் சாக்குபோக்கு சொல்லி குறித்த தேர்தல் எப்பொழுது நடைபெறும் என்பது தெரியாத நிலையில் உள்ளது.

உள்ளூராட்சிச் சபைகளுக்கான வேட்புமனுக்கள் இரத்து செய்யப்படலாம் என்றும் அதற்கான சட்டதிருத்தம் கொண்டுவரப்படும் என்றும் சொல்லப்படுகின்றது.

கடந்த ஐந்து வருடங்களுக்கும் மேலாக மாகாணசபைத் தேர்தல்கள் ஒத்திவைக்கப்பட்டுள்ளன. மாகாண சபைகளுக்கான எல்லை மீள்நிர்ணயங்கள் ஏற்றுக்கொள்ளப்படாததன் காரணமாக அது ஒத்திவைக்கப்பட்டதாகவும் மீள்நிர்ணயம் செய்த பின்பு தேர்தல்கள் நடைபெறும் என்றும் பேசப்பட்டாலும் எல்லைகளை மீளவும் திருத்திக்கொள்வதற்கான எத்தகைய நடவடிக்கைகளும் மேற்கொள்ளப்பட்டதாகத் தெரியவில்லை.

ஆகவே, மாகாண தேர்தல் சட்டதிட்டங்களுக்கு இணங்க மாகாணசபைத் தேர்தல்களை நடத்தும்படி தமிழர் தரப்பு கோரிய பொழுதும் அதற்கான எத்தகைய நடவடிக்கைகளையும் அரசாங்கம் மேற்கொள்ளவில்லை.

மாறாக, வடக்கு-கிழக்கில் தான் விரும்பிய ஆளுநர்களை நியமித்து, தான்தோன்றித்தனமான முறையில் பௌத்த பிக்குகளும் இராணுவமும் பொலிஸாரும் கூட்டாக காணிகளைக் சுவிகரித்து, அத்தகைய இடங்களில் புதிது புதிதாக புத்த கோயில்களைக் கட்டுவதும் எங்கோ தூரப்பிரதேசங்களில் உள்ள சிங்கள மக்களைக் கொண்டுவந்து இங்கு குடியேற்றுவதுமாக அரசாங்கம் தனது நிகழ்ச்சி நிரலை முன்னெடுத்துச் செல்கின்றது.

இந்திய - இலங்கை ஒப்பந்தத்தின் பிரகாரம் இலங்கை தமிழ் மக்களின் இனப்பிரச்னைக்குத் தீர்வாக ஒற்றையாட்சி முறைக்குள் அதிகார பரவலாக்கத்தின் ஊடாக மாகாணசபை முறைமை ஒன்று உருவாக்கப்பட்டது.

வடக்கு-கிழக்கு தமிழ் மக்களின் இனப்பிரச்னைக்குத் தீர்வாக மாகாணசபை முறைமை இல்லாவிட்டாலும் கூட, அதுவே இந்த அரசியல் சாசனத்தில் ஏற்றுக்கொள்ளப்பட்ட விடயமாகவும் இருக்கின்றது. அதிகாரங்களைப் பரவலாக்கம் செய்வதற்காக அரசியல் சாசனத்தில் பதின்மூன்றாவது திருத்தம் மேற்கொள்ளப்பட்டது.

மாகாணசபை அதிகாரத்தில் இல்லாத காலத்தில் பாராளுமன்றத்தின் ஊடாகவும் ஏனைய வழிமுறைகளிலும் மாகாணத்திற்கு உரித்தான பல அதிகாரங்களை மத்திய அரசாங்கம் மீளப்பறித்துக் கொண்டது. இன்றும் அது நடைபெற்றுக்கொண்டிருக்கின்றது.

இதனூடாக மாகாணசபை ஒரு அர்த்தமற்ற நிர்வாக அலகாக மாற்றப்பட்டு, உரிமைகள் மறுக்கப்பட்டு, வாழ்வுரிமை மறுக்கப்பட்ட தமிழ்த் தேசிய இனம் அச்சத்தில் வாழ்கின்ற சூழ்நிலையை அரசாங்கம் ஏற்படுத்தி உள்ளது.

சிங்கள பௌத்த மேலாதிக்கத்தை தடுத்து நிறுத்தி தமிழ் மக்கள் தமது இருப்பைப் பாதுகாத்துக்கொண்டு கௌரவமாக வாழ வேண்டுமென்ற அடிப்படையிலேயே இந்திய-இலங்கை ஒப்பந்தம் உருவாக்கப்பட்டதுடன், பதின்மூன்றாவது திருத்தச் சட்டமும் நிறைவேற்றப்பட்டது.

ஆனால், இன்று மாகாணசபைக்கான தேர்தலை காலவரையறையின்றி ஒத்திவைத்து அதே சிங்கள பௌத்த மேலாதிக்கத்தை நிறுவுவதற்கான நடவடிக்கைகளை இலங்கை அரசாங்கம் மேற்கொண்டு வருகின்றது.

இந்த நிலையில், ஜனாதிபதி தேர்தல், நாடாளுமன்றத் தேர்தல்களை எதிர்கொள்ள இருக்கின்ற ஜனாதிபதியோ அல்லது ஏனைய அரசியல் கட்சிகளோ தமிழ் மக்களின் நம்பிக்கையைப் பெற்றுக்கொள்ள விரும்பின், குறைந்தபட்சம் வடக்கு-கிழக்கிற்கான மாகாண சபைகளுக்கான தேர்தல்களை யாவது நடத்தி அதற்கான அதிகாரங்களை வழங்கி அந்த மாகாண நிர்வாகங்கள் திறம்பட செயற்படுவதற்கான நடவடிக்கைகளை மேற்கொள்ள முன்வரவேண்டும்.

சர்வதேச கடன்களை மீளச்செலுத்துவதற்கான காலங்கள் மாற்றியமைக்கப்பட்டுக் கொண்டிருக்கக்கூடிய சூழ்நிலையில் தேர்தல்களுக்கான நிதி இல்லை என்று கூற முடியாது.

ஆகவே, ஏனைய தேர்தல்களுக்கு முன்பாக குறைந்தபட்சம் வடக்கு-கிழக்கு மாகாணசபைத் தேர்தல்களை யாவது உடனடியாக நடத்த முன்வர வேண்டும் என்று தமிழ் மக்கள் சார்பாக அரசாங்கத்தைக் கோருகின்றோம் - என்றார். (அ)

